www.padippakam.com

"பயங்கரவாதம்
அமெரிக்க எதிர்ப்பின்
மறுபெயராகி விட்டது"

எட்வர்ட் செய்த்

எழுச்சி

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
நவம்பர் 2001 ■ ரூ. 6



" அனைத்து
ஜாதியினரும்
வெட்டியானாக்கப்பட
வேண்டும் "

படிப்பகம்

www.padippakam.com



# பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு ஏன்?



அரசமைப்புச் சட்டத்தின் 15ஆவது பிரிவில் புதிய இணைப்பு (திருத்தம்) தேவை என்ற சூழல் உருவாகியுள்ளது. இந்த விரும்பத்தகாத சூழலுக்கு மூலகாரணம், நீதி மன்றம் வழங்கியுள்ள இரண்டு தீர்ப்புகள்தான். இந்தத் தீர்ப்பை வழங்கியது, சென்னை உயர்நீதி மன்றம். 1. சென்னை (எதிர்) திருமதி செண்பகம் துரை ராஜன் 2. வெங்கட்ராமன் (எதிர்) சென்னை அரசு. இந்த இருவரின் வழக்குகளால், அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கக் கூடாது என்ற நிலை உருவாகியுள்ளது.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசுப் பணிகளிலும் கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு அளிக்கக் கூடாது என்ற கருத்தை மய்யமாகக் கொண்டு - நீதி மன்றம் தன்னுடைய தீர்ப்பை வழங்கியுள்ளது. இதன் விளைவாக, சாதி ரீதியான அரசாணை (communal G.O.) உருவானது. இந்த அரசாணை செல்லாது என்று சட்ட வல்லுனர்களும், நமது மேதகு நாடாளுமன்ற அங்கத்தினர்களும் கூக்குரலிடுகின்றனர்.

“ நான், உச்சநீதி மன்றத் தீர்ப்புகளுக்குக் கட்டுப்பட்டவனாக வேண்டுமானால் இருக்கலாம்; ஆனால், அதே நேரத்தில் அந்தத் தீர்ப்பை மதிக்க வேண்டும் என்ற கட்டாயம் எனக்கு இல்லை. இது, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ள தனித்துவமான உரிமை. இதை விட்டுவிட நான் ஒருபோதும் தயாராக இல்லை. இதுவே என்னுடைய அழுத்தமான முடிவாகும். ”

அரசியல் அமைப்புச் சட்டம் 16(4) பிரிவு, மாநில அரசுகள் தங்கள் விருப்பப்படி அல்லது எழுந்துள்ள தேவைகளின் அடிப்படையில் - பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சிறப்பு ஒதுக்கீடு வழங்கும் அதிகாரத்தை முழுவதுமாக வழங்குகிறது. இந்த 16(4) பிரிவு, அரசமைப்புச் சட்டத்தின் 29ஆம் பிரிவுடன் முரண்படுவதால், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு தரக் கூடாது என்று உச்சநீதி மன்றம் கருதுகிறது.

மேலும், ‘சாதியின் அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்குவது கூடாது; அது முற்பட்டவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களிடையே பாரபட்சத்தைத் தோற்றுவித்துவிடும்’ என்று உச்சநீதி மன்றம் தன்னுடைய தீர்ப்பில் தெரிவித்துள்ளது. நான், உச்சநீதி மன்றத்தின் இரண்டு தீர்ப்புகளையும் கூர்ந்து படித்தேன். இந்த இரண்டு தீர்ப்புகளும் மிகுந்த அதிருப்தியைத் தருகிறது.

இந்தத் தீர்ப்புகள், நமது அரசியல் சாசனத்தின் பிரிவுகளோடு ஒத்துப் போகவில்லை. இது, என்னுடைய வாதம். உச்சநீதி மன்றத்தின் இத்தகைய தீர்ப்புகளுக்காக நான் வருந்துகிறேன். *(நாடாளுமன்றத்தில் கூச்சல் குழப்பம். சபாநாயகர் இடைமறித்து, அம்பேத்கர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்கிறார். ஆனால், அம்பேத்கர் அதைப் பொருட்படுத்தவில்லை)*

அரசியல் சட்டப் பிரிவு 29(2)இல், ‘மட்டும்’ என்ற வார்த்தையை சரியாகப் புரிந்து கொள்ளாமல் வழங்கப்பட்ட தீர்ப்பாகவே இவற்றை நான் கருதுகிறேன். மதம், இனம் அல்லது ஆண், பெண் பேதம் ஆகியவற்றை ‘மட்டும்’ அடிப்படையாகக் கொள்ளக் கூடாது. இது 29(2)இன் பொருள். இங்கு ‘மட்டும்’ என்ற வார்த்தை மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. இதை உச்சநீதி மன்ற நீதிபதிகள் கவனிக்கவில்லை என்பது என்னுடைய வாதம்.

‘சாதியற்ற இந்துக்கள்’ என்று இந்நாட்டில் எவரும் இல்லை. ஒவ்வொரு இந்துவுக்கும் சாதி உண்டு. பார்ப்பனர், மகராட்டா, குன்பி, கும்பார் அல்லது ஒரு தச்சன் இவர்களில் யாரும் சாதியை விட்டு வாழும் இந்துவாக இல்லை.

இந்த நாட்டில், பிற்படுத்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்ட சாதியினராக இந்து மதத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். எனவே, இந்து மதத்தின் பன்னெடுங்கால கொடுமைக்கு ஓர் இடைக்காலத் தீர்வாக, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு மூலம் சில உரிமைகள் வழங்குவது மிகவும் அவசியமாகிறது. இதைக் கருத்தில் கொள்ளும் போது, நமது உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு ஓர் அதிருப்தியான தீர்ப்பாகும்.

நான், உச்சநீதி மன்றத் தீர்ப்புகளுக்குக் கட்டுப்பட்டவனாக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், அதே நேரத்தில் அந்தத் தீர்ப்பை மதிக்க வேண்டும் என்ற கட்டாயம் எனக்கு இல்லை. இது, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ள சுயேச்சையான உரிமை. இதை விட்டுவிட நான் தயாராக இல்லை. இதுவே என்னுடைய அழுத்தமான முடிவாகும்.

மேலும், அரசமைப்புச் சட்டத்தின் 46ஆவது பிரிவு, பிற்படுத்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து வகையான நலன்களை உறுதிப்படுத்தவும் மேம்படுத்தவும் மாநில அரசுகளுக்கு போதிய அதிகாரத்தை நிர்ணயித்துள்ளது.

இந்த அதிகாரத்தை உறுதிப்படுத்த வேண்டிய தேவை, நாடாளுமன்றத்திற்கு எழுந்துள்ளது. நாடாளுமன்றம் 16(4) மற்றும் 29 ஆகிய பிரிவுகளை விரிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் பிரிவு 15 - போதிய விளக்க இணைப்பு (சட்டத் திருத்தம்) சேர்க்கப்பட வேண்டும். இது, ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான உயர்வை சட்டப் பூர்வமாக அங்கீகரிக்க உதவும். ◇

*‘பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு’ : 15 பக்கம் : 331*

படிப்பகம்

www.padippakam.com

புகைப்படம் : மீனா மயில்



பனிமலைக் காட்டின்
குளிர்வை
சுமந்து திரியும்
வெளியெங்கும்
தீத்துண்டுகள் சிதறுகின்றன.

'சபிக்கப்பட்ட'
ஒரு மொட்டென
கருகிக் குவிகிறது உலகு.

தீ தின்ற தாய் மக்கள்
அமிலம் சுரந்து
சிலையாகி விட்டனர்.

இன்னும்
பொசுங்குகிறவர்களின்
பேரோலம்
விழுவதில்லை
அவர்கள் காதுகளில்.

எச்சில் துப்பியும்
எச்சமிட்டும்
அழுக்காக்கப்பட்டபோதும்
முகம் சுளிப்பதில்லை.

மழைக் குவியலில்
மவுனித்துக் கிடக்கும்
ஒவ்வொரு துளியும்
புன்னகைக்க
அழைத்த போதும் கூட
பிடிவாதமாய் மறுத்து விட்டனர்.

கண்ணீரும் ரத்தமும்
சிந்த வைத்த அதே பூமி
தாயின்றித் தவிக்கிறது.

சிலையாகிப் போனவர்களே
உயிர்த்தெழுங்கள் என
கதறுகிறது.

கவலையில்லை.

புறாக்கள் பாடும்
பிந்தைய பொழுதுகளில்
யாரும் அறியாமல்
கைகோர்த்து ஆடிவிட்டு
நீண்டு கிடக்கும் நதிகளில்
முகம் கழுவி
இளைப்பாருவது வழக்கமாம்.

அவர்கள் மரணிக்கவில்லை
அதிகாரமற்ற வேற்றுலகில்
கீதம்பாடி லயித்திருக்கின்றனர்.

தொல்லை தராதீர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்



34



26



16


8 **தேர்தல்**
எங்கே போனார்கள் ஜனநாயகவாதிகள்?
அன்பு செல்வம்

10 **அநீதி**
அங்கீகரிக்கப்படாதவர்களின் ஆவேசம்
விடியல்

13 **அறிமுகம்**
கோழைகளாக்கியது யார்?
எஸ்.வி.ஆர்.

14 **பார்வை**
எதிர்கால அரசமைப்பு?
கவுதம சன்னா

16 **ஜாதி**
''அனைத்துச் சாதியினரும் வெட்டியானாக்கப்பட வேண்டும்''
ஆர்.ஆர். சீனிவாசன்

20 **சட்டம்**
'பொடோ' - ஒரு அரச பயங்கரவாதம்
யாக்கன்

22 **பேட்டி**
''பயங்கரவாதம் அமெரிக்க எதிர்ப்பின் மறுபெயராகி விட்டது''
எட்வர்ட் செய்த்

26 **போராளி**
மால்கம் எக்ஸ்
ரவிக்குமார்

29 **அறிவாயுதம்**
இந்து மதத்தின் புதிர்கள்
சங்கமித்திரை

30 **நம்மைச்சுற்றி**
கியூபா : தொடரும் புரட்சி
மாயா

34 **சமூகம்**
'நாடு' கட்டமைப்பும் சாதியாதிக்கமும்
விடியல்

37 **மீறல்**
அகதிகளாக்கப்படும் அய்யம்பாளையம் அருந்ததியர்கள்
கோவை ரவி



■ அட்டைப் புகைப்படம் வடிவமைப்பு : ஆர்.ஆர். சீனிவாசன்
■ இதழ் வடிவமைப்பு : ஜெமிமா ஆலிஸ்




படிப்பகம்

www.padippakam.com

# தீவிரவாதி யார்?

இன்றைய நாகரீக உலகம், அநாகரீகத்தை நோக்கிச் சென்று கொண்டுள்ளது. தெருவோரம் நடைபெறும் ஒரு சண்டையைக்கூடத் தேவையற்றது; சமாதானமாகப் போக வேண்டும் என்று சொல்லக்கூடிய நாம், அமெரிக்கா - மணிக்கணக்கில், நாள் கணக்கில்,வாரக் கணக்கில் - ஆப்கான் நாட்டு மக்கள் மீது குண்டு மழை பொழிவதை அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்! நாம் வாழுகின்ற காலத்தில் இப் படியொரு அநீதி, கொடுமைகளுக்காக நாம் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

இப்போரில், நாம் நடுநிலை வகிப்பதும், அமைதி காப்பதும் - வன்முறைக்குத் துணைபோவதாகவே அமைந்துவிடும். வரலாறு, நம்மை போர் ஆதரவாளர்களாகப் பதிவு செய்வதற்கு, நாம் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது.

தீவிரவாதத்திற்கு எதிரான போர், உலக அளவிலும் இந்திய அளவிலும், இஸ்லாமியர்களுக்கு எதிரான போராக திசைமாறியுள்ளது. தாங்கள் எடுத்துக் கொண்ட கொள்கையில் தீவிரம் காட்டுபவர்கள் - எல்லா மதத்திலும், எல்லா நாட்டிலும் இருக்கவே செய்கிறார்கள். ஆனால், இஸ்லாமியர்களை மட்டும் தீவிரவாதிகளாகச் சித்தரிக்கப்படுவதன் உள்நோக்கத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

உயிரினத்தையே பூண்டோடு அழிக்கக்கூடிய அணுகுண்டை வைத்திருக்கும் அரசுகளும், அணு உலைகளை நியாயப்படுத்துபவர்களும், பயங்கரவாதிகள் இல்லையா? ஒரு அரசே மருத்துவமனைகள் மீதும், மக்கள் மீதும், மசூதிகள் மீதும் குண்டு போட்டு அழிப்பதை - எந்த 'நியாயத்தை'க் கொண்டும் நியாயப்படுத்திவிட முடியாது.

ஆனால், பாபர் மசூதியை இடித்தவர்கள் - ஆப்கானில், மசூதி மீதும் மக்கள் மீதும் அமெரிக்கா குண்டு போட்டுத் தகர்ப்பதை வரவேற்பதில் உள்ள உள்நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாமிய அமைப்பான 'சிமி'க்குத் தடை. ஆனால், வரலாற்றை மாற்றி நம் எதிர்கால தலைமுறையையே சிதைத்து வரும் இந்து மதவாத அமைப்புகளுக்குத் தடை இல்லை. ஏனெனில், அது 'அகிம்சா'வாத வன்முறை அல்லவா?

இதில், பத்திரிகைகளின் பங்கு என்பது, போரை ஆதரிப்பதாகவே இருக்கிறது. அமெரிக்கா சார்பு நிலைப் போர்ச் செய்திகளை வெளியிடுவது மட்டுமே - தங்களின் கடமை என்று எண்ணி, செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ஒரு சாராயப் பிரச் சினை என்றால் கூட, அதைத் தீர்ப்பதற்காக விவாதங்களைத் துவக்கும் பத்திரிகைகள், போரை நிறுத்துவதற்கான வழிவகைகளைத் தேடாமல், குண்டு மழை பொழியும் ஏவுகணைகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

அமெரிக்கா தொடங்கியிருக்கும் போரைக் காரணம் காட்டி, இங்கு அடிப்படை மனித உரிமைகளுக்கு முற்றிலும் எதிரான 'பொடோ' சட்டத்தைக் கொண்டுவர பா.ஜ.க. அரசு முயலுவது, வன்மையான கண்டனத்துக்குரியது. மனித உரிமைகளில் அக்கறை கொண்ட அனைவரும், இதை எதிர்க்க முன்வர வேண்டும். 'இந்து ராஜ்யத்தை' நோக்கி, பா.ஜ.க. கூட்டணி நகர்வதை - பெரும்பான்மை மக்கள் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.

தீவிரவாதம் உருவாவதற்கான வேர் எங்கு இருக்கிறது?

அடித்தள மக்களின் மனித உரிமைகள் முற்றாக நசுக்கப்படுவதால் உண்டாகும் எதிர்வினையே தீவிரவாதம். இதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். குண்டுகளோ கடுமையான சட்டங்களோ ஒரு போதும் உதவாது என்பதை, இனியாவது ஆளும் வர்க்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

எழுச்சி
தலித் முரசு

Volume : 5 Issue : 5

நவம்பர், 2001
ஆண்டு : 5 - இதழ் : 10

ஆசிரியர், வெளியிடுபவர்
பெ. சந்திரசேகன்

பொறுப்பாசிரியர்
புனித பாண்டியன்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 100/-
நூலகக் கட்டணம் : ரூ. 200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

முகவரி
எ-21, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, அண்ணா முதன்மைச் சாலை
கே.கே. நகர், சென்னை - 600 078

தொலைபேசி : 371 66 88
தொலைநகல் : 474 11 88

E-mail : ambedkar@md4.vsnl.net.in



படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்

**நாடாளுமன்றம் கூடவிருக்கும் சில நாட்களுக்கு முன்னால் அவசரச் சட்டமாக 'பொடோ' சட்டத்தை அறிவித்திருப்பது அப்பட்டமான ஜனநாயக விரோத செயலாகும். நாட்டின் ஒருமைப்பாடு, பாதுகாப்பு ஆகியவற்றிற்காகவே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாக அரசு அறிவித்திருப்பது ஏமாற்று வேலையாகும்.**


– பழ. நெடுமாறன்,
தமிழர் தேசிய இயக்கத் தலைவர்,
அறிக்கை ஒன்றில்.




நன்றி : 'இந்து'




நன்றி : 'இந்து'



புது பின்லேடன்கள் உருவாகிறார்கள்

நன்றி : 'அவுட்லுக்'

**இந்தியாவில், ஒவ்வொரு ஆறு மணி நேரமும் ஒரு திருமணமான பெண், எரிக்கப்படுகிறார்; படுகொலை செய்யப்படுகிறார் அல்லது தற்கொலை செய்து கொள்ளத் தூண்டப்படுகிறார். குறைந்தது 15,000 பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர். 30,000 பெண்கள் துன்புறுத்தப்படுகின்றனர், 5,000 பெண்கள் வரதட்சணையில் கொல்லப்படுகின்றனர்.**

– பிரசன்னா பூர்ணசந்திரா, உலக குற்றத் தடுப்பு நிறுவனம், சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில்



படிப்பகம்

www.padippakam.com

# சமூகம் சீரழிகிறது யுத்தம் செழிக்கிறது

வியட்நாம் யுத்தம் நடந்து முடிந்தது. ஆயிரக்கணக்கான அமெரிக்க இளைஞர்கள் இல்லாமல் போயினர். ஆனால், அமெரிக்க அரசுப் பதவியில் இருந்தவர்கள் மட்டும் எவ்வித குற்ற உணர்வும் இல்லாமல் தத்தம் பதவியில் தொடர்ந்து கொண்டிருந்தனர். தோல்விக்குப் பொறுப்பேற்று மன்னிப்புக் கேட்கவோ பதவி இறங்கவோ அவர்கள் முன்வரவில்லை.


இதன் விளைவு?

குடிமக்கள் மட்டும் ஏன் குற்றங்கள் புரியாமல், அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் மேலோங்கத் தொடங்கியது.

பாலியல் நடவடிக்கைகளில் இதுவரை இருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் அமெரிக்க இளைஞர்கள் மீறத் தொடங்கினர். போதை மருந்து நிம்மதியைக் கொடுக்கும் என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் பரவத் தொடங்கியது. தம்மை மறந்து ஆடத் தூண்டும் இசை வகையான 'ராக் அண்ட் ரோல்' கண்டுபிடிக்கப்பட்டது.

அமெரிக்காவின் கலாச்சாரப் புரட்சி என்று பலரால் சித்தரிக்கப் படும் காலகட்டம் இவ்வாறுதான் உருவானது. செக்ஸ், போதை மருந்து மற்றும் 'ராக் அண்ட் ரோல்' ஆகியவையே இந்தப் புரட்சியின் உள்ளடக்கம்.

இந்தக் காலகட்டத்தில் நடந்த வேறு இரண்டு முக்கியமான நிகழ்வுகளையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். இதுவரை திட்டமான, கட்டுக்கோப்பான தொழிற்சாலைகளில் ஆண்டுக்கணக்காகப் பணிபுரிந்து வந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை, யுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார சரிவின் காரணமாக, தொழிற்சாலை நிர்வாகங்கள் வீட்டுக்கு அனுப்பின. நிரந்தரத் தொழிலாளர்கள் என்ற கருத்துக்குப் பழகிப்போன அமெரிக்கர்களை தற்காலிகத் தொழிலாளர்கள் என்ற புதிய கருத்து தாக்கியது. தொழிலாளர்களை அவசியப்பட்டால் எந்த வித குற்ற உணர்வுமே இல்லாமல் வீட்டுக்கு அனுப்பலாம் என்ற எண்ணம், அமெரிக்காவின் மாபெரும் தொழில் துறையான கார் உற்பத்தித் தொழிலின் தலைநகரமான டெட்ராய்ட்டில் பிறந்தது. பின்னர் அது, அமெரிக்க முதலாளிகளின் மத்தியில் வெகு வேகமாகப் பரவ ஆரம்பித்தது.



**"தீவிரவாதிகளை ஒழித்தாயிற்று தீவிரவாதத்தை என்று ஒழிக்கப் போகிறோம்?"**

நிறுவனங்களில் பணியில் சேராமல் இருந்த அறிவு ஜீவிகளை ஜனாதிபதி ஜான் கென்னடி ஒன்றிணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அரசின் கொள்கைகளில் இருக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்டுவது இவர்களின் பணியாகும். இந்த அறிவு ஜீவிகளில் பல வழக்குரைஞர்கள் இருந்தார்கள். ஜான் கென்னடி கொலை செய்யப்பட்ட பின்னர் இவர்களின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகியது. வியட்நாம் யுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் தான் இவர்கள்.

யுத்தம் தோல்வியில் முடிந்த போது, தாங்கள் ஒன்றும் அறியா மக்கள் என்றனர். இதற்கெல்லாம், காரணம் அரசு அமைப்பில் உள்ள கோளாறு தான் என்றார்கள். பேசுவதோடு அவர்கள் நின்றுவிடவில்லை.

ஜனாதிபதி நிக்சனை நிந்தித்த 'வாட்டர் கேட்' ஊழல் இவர்களால் தான் வெளியில் கொண்டு வரப்பட்டது.

தனிமனிதர்களுக்கு எதிராகவும், நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு எதிராகவும் வழக்கு தொடர்வது நேரத்தை வீணடிக்கும் ஒரு செயலே என்ற சிந்தனையே 1960 களின் பிரதான சிந்தனையாக இருந்தது. ஆனால் எழுபதுகளில், இந்தப் புதிய வழக்கறிஞர்கள் கூட்டத்தின் முயற்சியால் இந்த நிலை ஒட்டு மொத்தமாக மாறிப்போனது. எல்லோரும் எல்லோருக்கு எதிராகவும் அமெரிக்காவில் வழக்கு தொடர ஆரம்பித்தனர். அமெரிக்கா, கோர்ட்டு வழக்குகள் நிறைந்த ஒரு சமூகமாக மாறிப்போனது.

எல்லோரும் எல்லோரையும் சந்தேகிக்கத் தூண்டும் அவலக் கலாச்சாரம், அமெரிக்க நாட்டில் காலூன்றத் தொடங்கியது. அவநம்பிக்கையே வாழ்வின் அடிப்படையாக மாறியது.

இந்தக் கலாச்சார மாற்றத்தின் உச்சபட்ச வெளிப்பாடே அமெரிக்காவில் பெருகிவிட்ட விவாகரத்துகள். திடீரென்று முளைத்துவிட்ட ஓரினச் சேர்க்கை குறித்த செய்திகள். அதன் காரணமாக உருவான எய்ட்ஸ் நோய். இந்தக் கலாச்சாரத்தின் வெளிப்பாடாகத் தான் அமெரிக்க சிறுவர்கள் தங்களுக்குள் வரும் சண்டைகளைத் தீர்த்துக் கொள்ள துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு இறந்து போவதை நாம் பார்க்கிறோம்.

வியட்நாம் யுத்தம் - உலகுக்கும், அமெரிக்காவிற்கும் 'எய்ட்சை' கொடையாக அளித்தது. ஆப்கானிஸ்தான் யுத்தம் எதைக் கொடையாக அளிக்கும்?

நன்றி : 'எதிரொலி' அமெரிக்க யுத்த சிறப்பு மலர், கோவை.



படிப்பகம்

www.padippakam.com

## எங்கே போனார்கள்

# ஜனநாயகவாதிகள்?

**■ அன்பு செல்வம்**

களத்திலிருந்து...

இந்திய நாட்டில், ஜனநாயகம் என்பதற்கான அளவுகோல் தேர்தல்தான் என அரசியல் கட்சிகளும், தேர்வாணையமும், பத்திரிகைகளும் கருத்துத் தெரிவித்தாலும், இக்கருத்துகள் எல்லாம் ஒரு 'பம்மாத்து' என்பதை - உசிலம்பட்டி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியங்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

உள்ளாட்சித் தேர்தலுக்கான அறிவிப்பைத் தமிழக தேர்தல் ஆணையம் அறிவித்த பிறகு, அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் வேட்புமனு தாக்கல் செய்யும் பணி நடைபெற்ற சூழலில், தமிழகத்தில் ஒரு சில ஊராட்சி ஒன்றியங்களில் - தலித் மக்கள் தங்கள் வேட்புமனுவைத் தாக்கல்கூட செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதில் ஒன்று மதுரை மாவட்டம்.


இம்மாவட்டத்தில், உசிலம்பட்டியிலும் செல்லம்பட்டியிலும் தலித் மக்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட தனித் தொகுதிகளில், ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்குப் போட்டியிட முடியவில்லை; பொதுத்தொகுதிகளிலும் போட்டியிட முடியவில்லை. ஒரு சில ஒன்றியங்களில் தலைவர் பதவி ஏலம் விடப்பட்டுள்ளன. சில இடங்களில், குலுக்கல் முறையில் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

உசிலம்பட்டி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு தலித் மக்கள் - பொதுத் தொகுதிகளிலும் தனித் தொகுதியிலும் நிற்கக் கூடாது என பிரமலைக் கள்ளர்கள் தொடர்ந்து கொலை மிரட்டல்கள் செய்து வருகின்றனர். பொதுத் தொகுதியில் தலித் மக்கள் போட்டியிட்டு விடக்கூடாது என 12க்கும் மேற்பட்ட கிராமங்களில் தலைவர் பதவி ஏலம் விடப்பட்டுள்ளன.

உசிலம்பட்டியில் உள்ள 18 ஊராட்சிகளில் ஜோதில் நாயக்கனூர் மற்றும் கீரிப்பட்டி ஆகிய இரண்டு கிராமங்கள் தனித் தொகுதியாக அறிவிக்கப்பட்டவை. 18 ஊராட்சிகளைச் சேர்ந்த கிராமங்களில் பள்ளர், பறையர், சக்கிலியர், பிள்ளைமார், நாடார், நாயக்கர், பிரமலைக்கள்ளர் என பலதரப்பட்ட சாதிப்பிரிவினர் வசித்து வருகின்றனர். ஆனால், இவர்கள் அனைவரையும் பிரமலைக் கள்ளர்கள் - தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து, எழுதப்படாத சட்டங்களைக் கூறி ஆட்சி நடத்தி வருகின்றனர்.

கீரிப்பட்டி, ஜோதில் நாயக்கனூரில் தலித் மக்கள் வேட்பாளராக நிற்கக்கூடாது என்பது 'ஊர்க்கட்டுப்பாடு' என்கிற பொய்யான முகமூடியை வைத்து தலித் மக்களை மிரட்டி வருகின்றனர். மீறினால் தலை இருக்காது என எச்சரித்தும் வருகின்றனர். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியைக் கூட பெற முடியாத நிலையை உருவாக்கி வருகின்றனர். நக்கலப்பட்டி இரண்டாவது வார்டு உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட முயற்சித்த தியாகராஜனை, பிரமலைக் கள்ளர்கள் எச்சரித்ததின் பேரில் வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றார்.

உசிலம்பட்டி நகராட்சியின் 24 வார்டுகளில் 8ஆவது வார்டும், 17ஆவது வார்டும் தலித் மக்களுக்குரியது. ஆனால், இந்த வார்டுகளில் த.மா.கா., தி.மு.க., அ.தி.மு.க., ஆகிய கட்சிகளில் - சாதி இந்துக்களின் கட்டுப்பாட்டில்தான் செயல்பட வேண்டியுள்ளது. இந்த இரண்டு வார்டுகளிலும் - புதிய தமிழகமோ, விடுதலைச் சிறுத்தைகளோ வேட்பு மனுதாக்கல் செய்வதற்கான சூழலே உருவாகி விடக்கூடாது என பிரமலைக் கள்ளர்கள், ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்குக் கட்டளை பிறப்பித்துள்ளனர்.



தலித் மக்கள் அதிகம் வசிக்கும் தொட்டப்ப நாயக்கனூரில், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ராஜசேகர் என்பவரின் தலைமையில் இடையப்பட்டி, வாசிநகர் ஆகிய கிராமங்களை பிரமலைக் கள்ளர்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக் கொண்டு - தொட்டப்ப நாயக்கனூரை தனியே புறக்கணிக்கும் சூழல் உருவாகியுள்ளது. பொதுவான இத்தொகுதியிலும் தலித் வேட்பாளர் போட்டியிட முடிவதில்லை. ஒரு சில வார்டுகளில் மட்டும் தலித் வேட்பாளர் போட்டியிட அனுமதிக்கின்றனர்.

பொதுத் தொகுதிகளில் பிரமலைக் கள்ளர்கள், தங்களைத் தவிர யாரும் போட்டியிட்டு விடக்கூடாது என அதற்கான பதவிகளை ஏலம் விட்டுள்ளனர். வேப்பனூத்து (காசம்மாள்), மானூத்து (தவமணியம்மாள்), வகுரணி (நல்லதம்பி) ஆகிய கிரா



படிப்பகம்


www.padippakam.com

மங்களிலும், ஏலம் விடப்பட்டுள்ளன. அரசுக்கும் மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கும் சென்றபின் - ஒரு சிலர் மீண்டும் போட்டியிடப் போவதாகவும், தேர்தல் நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

உசிலம்பட்டியில் 15 பேர் பஞ்சாயத்து தலைவர் பதவிக்கும், 33பேர் நகராட்சித் தலைவர் பதவிக்கும், 17 பேர் கவுன்சில் வார்டு பதவிக்கும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர். இதில் ஒருவர் கூட தலித் இல்லை என்பது, ஜனநாயகத்தின் வெட்கக் கேடான நிலையைப் பிரதிபலிக்கின்றது.

உசிலம்பட்டியைப் போன்றே, செல்லம்பட்டியிலும் நாட்டாமங்கலம், பாப்பாபட்டி ஆகிய இரண்டு கிராமங்கள் தனித்தொகுதியாக அறிவிக்கப்பட்டவை. அறிவிப்புக்குப்பின் கடந்த (1996) உள்ளாட்சித் தேர்தலில் நாட்டாமங்கலத்தில் சோனை என்பவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டு, ஒருவரும் (சாதிய) வாக்களிக்காமல் - தேர்ந்தெடுக்கப்பட்டு தலைவராக இருந்தார். இந்த முறை அதுவும் இல்லாமல் செய்யப்பட்டது.

ஆனால், சோனைக்குப் பிறகு கரையான்பட்டியைச் சேர்ந்த நரசிங்கம் என்பவர், தனித் தொகுதியில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய விரும்பி, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்போதே ஆதிக்க சாதியினரால் எச்சரிக்கப்பட்டார். எனவே, உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் எனத் தெரிந்து தன்னுடைய வேட்பு மனுவை மதுரை மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கச் சென்றார். மதுரை மாவட்ட ஆட்சியர் தன்னிடம் வேட்புமனுவைப் பெறும் அதிகாரம் இல்லை என அறிவித்து, இரண்டு காவலர்களை உடன் அனுப்பி செல்லம்பட்டியில் தாக்கல் செய்யுமாறு கூறி அனுப்பியுள்ளார்.



நரசிங்கம், செல்லம்பட்டி வருவதற்குள் நேரம் கடந்து விட்டதால், அவருடைய வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்படாது எனக் கூறி தள்ளுபடி செய்துவிட்டனர். பாப்பாபட்டியில் யாரும் போட்டியிடவில்லை.

மதுரையில், விடுதலைச் சிறுத்தைகள் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தியதன் பேரில் அரசின் கவனத்திற்கு இச்செய்தி சென்றது. பின்னர் மீண்டும் தேர்தல் ஆணையம் - நாட்டாமங்கலம், பாப்பாபட்டி ஆகிய கிராமங்களில் வேட்பு மனுவை ஏற்குமாறு அறிவுறுத்தியதின் பேரில் - நாட்டாமங்கலத்தில் நரசிங்கத்தின் மனுவும், பாப்பாபட்டியில் சரசுவதியம்மாள் மனுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

**உசிலம்பட்டியில் 15 பஞ்சாயத்து தலைவர் பதவிக்கும், 33பேர் நகராட்சித் தலைவர் பதவிக்கும், 17 பேர் கவுன்சில் வார்டு பதவிக்கும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர். இதில் ஒருவர் கூட தலித் இல்லை என்பது, ஜனநாயகத்தின் வெட்கக் கேடான நிலையைப் பிரதிபலிக்கின்றது.**

இதனைத் தொடர்ந்து நரசிங்கத்திற்கும், சரசுவதிக்கும் கொலை மிரட்டல் வந்து கொண்டே இருக்கின்றன. சரசுவதியின் வீட்டு ஓடுகள் உடைக்கப்பட்டன. தற்போது 3 காவலர்கள் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். நரசிங்கப்பட்டி, பாப்பாத்தி நாயக்கனூர் ஆகிய ஊர்களில் தேர்தல் நடைபெறுவதற்கான எந்த அடையாளமும் இல்லை. தேர்தல் நடத்தப்படவில்லை. செல்லப்பட்டி யூனியனில் 29 இடங்களில் யாரும் போட்டியிடவில்லை. ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு 7பேர் போட்டியிட்டுள்ளனர். ஆனால், ஒருவர் கூட தலித் இல்லை.

மதுரை மாவட்டத்தில் 510 பேர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இதில் உசிலம்பட்டியில் 21 பேரும், செல்லம்பட்டியில் 73பேரும் தேர்வு செய்யப்படுவார்கள். 5 ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகள் ஏலம் விடப்பட்டுள்ளன. பிரச்சனை உருவாகும் ஊர்களில், பொதுவான காரணங்களைக் கூறி தேர்தலைப் புறக்கணித்துள்ளனர்.

கடந்த அய்ந்து ஆண்டுகளாகவே பாப்பாபட்டியில் தேர்தல் நடத்த முடியாத நிலையை கவனத்தில் கொண்டு அதற்கான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர் எடுக்காதது கண்டனத்துக்குரியது. நரசிங்கத்தின் மனுவை முறைப்படி ஏற்க, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தலித் மக்களின் சட்டரீதியான உரிமைகளை உத்தரவாதம் செய்யப்படாத பொது - தனி வாக்காளர் தொகுதி, தனி வாழிடம் (Separate settlement) போன்ற கோரிக்கைகள் அவர்களால் முன்வைக்கப்படுகின்றன. அனைவரும் கூடி சமத்துவத்தோடு வாழ விரும்பும் ஜனநாயக உணர்வுக்கு, இது சிக்கலை ஏற்படுத்தும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறோம்.

இந்தியா, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாகப் பேசப்படுகிறது. ஆனால், இங்கு ஒரு சாதாரண, பெருமளவு அதிகாரமில்லாத - பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்களாகக்கூட, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒருவர் வரமுடியவில்லை என்பது, நடைமுறை உண்மையாக இருக்கிறது.


ஜனநாயகம் பற்றி வாய்கிழிய பேசும் ஜனநாயகவாதிகள், தமிழகத்தில் நிலவும் 'ஜாதி நாயகம்' பற்றி கூக்குரல் எழுப்பாமல் எங்கே போய் விட்டார்கள் என்பதே நம் கேள்வி. ●



படிப்பகம்

www.padippakam.com

# அங்கீகரிக்கப்படாதவர்களின் ஆவேசம்



## கல்பாக்கம் அணு சக்தி ஆலை
## எஸ்.சி. / எஸ்.டி. தொழிலாளர்கள் போராட்டம்

■ விடியல்

அமைதி தவழும் கல்பாக்கம், உணரப்படாத அபாயம் என்று சுற்றுச்சூழல்வாதிகள் கூறுவர். இப்பொழுது, கல்பாக்கத்தில் தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் வேலையும் தொடங்கியிருக்கிறது.

சென்னையிலிருந்து 85 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கல்பாக்கத்தில் என்ன நடக்கிறது? போராட்டத்தில் ஈடுபட்டு 18 நாள் சிறையில் இருந்து விடுதலையாகி வந்திருக்கும் தொழிலாளர் டி.மோகனை சந்தித்தோம்.

''நாங்க தொழிற்சங்கங்கள் சார்பாகவும், வேறு வகையிலும் எத்தனையோ போராட்டங்களை கல்பாக்கத்தில் நடத்தியிருக்கிறோம். ஆனால், கைது செய்து உடனடியாக விடுதலை செய்து விடுவார்கள். சிறையிலடைப்பது என்பது இதுவரை நடைபெற்றதில்லை. மத்திய அரசுப் பணிவிதிமுறைகள் எங்களுக்குப் பொருந்தும் என்பதால், 48 மணி நேரத்திற்கு மேல் காவலில் வைக்க மாட்டார்கள். இந்த முறை நாங்கள் 18 நாட்கள் சிறையிலிருந்ததால், தற்காலிகப் பணி நீக்கம் செய்திருப்பதாக சொல்றாங்க'' என்றார்.

என்ன பிரச்சனைக்காக தொழிலாளர்கள் போராட்டத்தை மேற்கொண்டார்கள்? நிர்வாகமும் காவல் துறையும் அவர்களை பழிவாங்க ஏன் போட்டி போடுகிறார்கள்?

கல்பாக்கத்தில் இந்திய அணுசக்தித் துறையைச் சார்ந்த பல நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் 'மெட்ராஸ் அட்டாமிக் பவர் ஸ்டேஷன்' (MAPS) என்பதும் ஒன்று.

இங்கு, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் தலித்துகள் கணிசமானவர்கள். மேப்சின் நிர்வாகத் தலைமையில் அரிகரன் என்பவர் இருக்கிறார். பார்ப்பனரான இவர், சிறப்பான உற்பத்திக்குக் காரணமானவர் என்று கருதி அவருடைய பணிக்காலம் முடிந்த பின்னும் அவருக்குப் பணி நீட்டிப்பு வழங்கியிருக்கிறது, மத்திய அரசு.

நிலையத்தின் உற்பத்தி ஆற்றலை உயர்த்துவதில் பெயர் போன அரிகரன், தொழிலாளர்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவதில் திறமையானவர். தொழிலாளர்களை சக்கையாக்கி, நிர்வாகம் லாபம் சம்பாதித்து வருகிறது. (பெரும்பாலான தொழிற்சாலைகளில் நடப்பதைப் போல.) அரிகரன் தீயணைப்பு வீரர்களின் உழைப்பில் கைவைக்க முயன்றதில் தொடங்கியது வினை.



பாதிக்கப்பட்ட தொழிலாளி பெரியசாமி

ஆபத்தான அணு மின் நிலையத்தின் பாதுகாப்பு, இந்த தீயணைப்பு வீரர்களின் கையில் தான் இருக்கிறது. ஆபத்து என்று வரும் போது மட்டும் தான் அவர்களுக்கு வேலை. மற்றபடி அவர்கள் சும்மாதான் இருக்க வேண்டும் என்பது பொதுவான விதி. ஏனென்றால், ஆபத்து வரும்போது துடிப்புடனும் விரைவாகவும் செயல்பட அவர்கள் 'சும்மா' இருப்பது தேவையாக இருக்கிறது.

ஆனால், அரிகரனோ அவர்களை தீயணைப்புக் கருவிகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபடுத்தினார். 15 கிலோ மீட்டர் விஸ்தீரணம் உள்ள பல அணு சக்தி அமைப்புகளின் தீயணைக்கும் கருவிகளையும் பராமரிக்கும் வேலையையும் பார்க்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

கடந்த 26ஆம் தேதி மும்பையிலிருந்து தொழிற்சாலை பாதுகாப்பு குறித்து பார்வையிட, 'அகில இந்திய பாதுகாப்பு' மற்றும் 'இன்சூரன்ஸ் குழு' ஒன்று 'மேப்சிற்கு' வந்திருந்தது. அவர்கள் பாதுகாப்பு குறித்து கேட்டவுடன், உண்மை நிலவரம் என்ன என்பதை பெரியசாமி என்னும் தொழிலாளர் ஒருவர் போட்டுடைத்து விட்டார்.

தீயணைக்கும் நேரத்தில் அவர்கள் முகத்திற்கு மாஸ்க், கை உறை இல்லை. கதிர்வீச்சில் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பற்ற நிலை, மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படாமல், கட்டாயப்படுத்தி வேலை கூடுதல் வாங்குவதையும் அதிகமான தொழிலாளர்கள் பாதிப்புக்கு உள்ளாவதையும் பெரியசாமி எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஏற்கனவே, தோழர் பெரியசாமி, எஸ்.சி./ எஸ்.டி. சங்க நடவடிக்கைகளில் துடிப்பாக செயல்படுவது, நிர்வாகத்திற்குப் பிடிக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

சம்பவம் நடந்த அன்றே இரவு பத்து மணிக்கு பெரியசாமிக்கு இடமாற்றல் உத்தரவும், விடுவிப்புக் கடிதமும் கொடுக்கப்பட்டது. இரண்டு நாள் கழித்து அவர் ராஜஸ்தானில் உள்ள அணுமின் நிலையத்திற்குச் சென்று வேலையில் சேரவேண்டும்.

தேவையின் அடிப்படையில் இடமாற்றம் செய்தால்கூட, குறைந்த சர்வீஸ் உள்ளவரையோ அதிக சர்வீஸ் உள்ளவரையோ இடமாற்றம் செய்வதுதான் வழக்கம். ஆனால், பாதிக்கப்பட்ட பெரியசாமியோ இடையில் உள்ளவர். வேறு எந்த அடிப்படையில் அவரை இடமாற்றத்திற்குத் தேர்ந்தெடுத்தனர் என்பது பற்றி எந்த விளக்கத்தையும் நிர்வாகத்தால் தரமுடியவில்லை என்கிறார்கள் தொழிலாளர்கள்.

அதேபோல், குரூப் சி&டியில் இடஒதுக்கீடு அடிப்படையில் பணிபுரியும் ஒரு எஸ்.சி. / எஸ்.டி. ஊழியரை அவரது சொந்த ஊருக்கு அருகிலேயே பணிக்கு அமர்த்த வேண்டும் எனும் அரசாணையை (No.DOPT/07M/3601/25/89/Estt(SCT)) கடைப்பிடிக்காததால், அடிப்படையில் இந்த மாற்றல் உத்தரவு அரசியல் அமைப்பு, சட்டத்திற்கு எதிரானது.

இதுகுறித்து அரிகரனிடம் பேச, உடனடியாக எஸ்.சி. / எஸ்.டி. சங்கத்தினர் சென்றனர். மணிக்கணக்கில் நீண்ட பேச்சுவார்த்தையில் அரிகரன் திரும்பத் திரும்பச் சொன்னது இதுதான்: ''அவர் ராஜஸ்தான் செல்லட்டும். பின்னர் திரும்ப அழைத்துக் கொள்கிறேன்''.

அப்படியென்றால், நீங்கள் இப்போதே இடமாற்ற உத்தரவை திரும்பப் பெற்றுக் கொள்ளலாமே என்று சங்கத்தினர் கேட்டதற்கு, அணுமின் நிலைய அதிகாரி அனுகுண்டை எடுத்து வீசினார்.

அதிகாரி என்ன சொன்னார் என்பதை ஆதிகேசவன் என்ற தலித் தொழிலாளி கூறும்போதே, அவரது விழிகள் கோபத்தால் சிவக்கின்றன. "Unrecognized people-லோட இவ்வளவு நேரம் பேசியதே தப்பு என சொன்னதுக்கப்புறம் அவரோட எங்களுக்கென்னங்க பேச்சு. இதுக்கு அவர் எங்களுக்கு பதில் சொல்லியே ஆகணும்; காவல்துறையிடம் இதுகுறித்து நாங்க கொடுத்த புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தே ஆகணும். இல்லைன்னா நாங்க சும்மா இருக்க மாட்டோம்'' என்ற அவரின் பேச்சில் உள்ள நியாயத்தை நாமும் மறுப்பதற்கில்லை.



பெருமாள்



சதாசிவம்



மோகன்

'அங்கீகரிப்படாதவர்கள்' என்ற வார்த்தைப் பிரயோகத்தை வேறு எந்த மக்களிடமும் பயன்படுத்தும் திமிர் அதிகாரிகளுக்கு உண்டா என்ன? ஆனால், அங்கீகரிக்கப்படாத இந்த மக்கள்தான் கல்பாக்கத்தை மட்டுமல்ல, இந்தியாவையே படைக்கும் தலித் மக்களாக இருக்கின்றனர்.

அதன் பின்னர், பெரியசாமியை பழிவாங்குவதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் இடஒதுக்கீட்டை காலி செய்யத் துடிக்கும் நிர்வாகத்தின் போக்கிற்கு எதிராகவும், எஸ்.சி./எஸ்.டி. சங்கத்தை அழித்தொழிக்க நினைக்கும் நிர்வாகத்தின் அடாவடிப்போக்கிற்கு எதிராகவும், சங்க நடவடிக்கைகககளில் சிறப்பாக செயல்பட்ட பெரியசாமியை பழிவாங்கத் துடிக்கும் நிர்வாகத்திற்கு எதிராகவும் போராட்டம் துவங்கியுள்ளது.

அரிகரன் தன் வார்த்தைகளையும் இடமாற்ற உத்தரவையும் திரும்பப்பெற வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, எஸ்.சி./ எஸ்.டி. சங்கத்தினர் தொடர் மறியல் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

கடந்த 3ஆம் தேதி, போராட்டம் தீவிரமடைந்த பின்னர் காவல்துறையினர் போராட்டத்தைக் கலைக்க முற்பட்டனர். காஞ்சிபுரம் எஸ்.பி. மாசான முத்து நேரடியாகத் தலையிட்டார். அவரின் எந்த நடவடிக்கைகளும் போராட்டத்தை திசை திருப்ப முடியவில்லை. அதன் பின்தான் கைதுகள் நடைபெற்றன. தொழிலாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தொழிலாளர்கள் கைது செய்யப்பட்ட பின்னும்கூட, நிர்வாகம் தலையிட்டு விடுதலையை உத்திரவாதப் படுத்தியிருக்கலாம். ஆனால், நாங்கள் போலிசிடம் எழுத்துப்பூர்வமான புகார் கொடுக்கவில்லை, அதனால் திரும்பப் பெற்றுக்கொள்ளும் அவசியம் இல்லை என்று நிலையெடுத்திருக்கிறது நிர்வாகம். இவர்களை வெளியே விட்டால் சட்டம் ஒழுங்கு கெடும். உள்ளாட்சித் தேர்தலையே நடத்த முடியாது என்ற போலிஸ் கோர்ட்டில் வாதாடியுள்ளது. உள்துறை அமைச்சர் பொன்னையன் தலையிட்டும் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றனர் தொழிலாளர் தரப்பினர்.

இதில் வேடிக்கை என்னவென்றால், கைது செய்யப்பட்டவர்களில் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் பக்கீர் முகமது என்பவரும் அடக்கம்.

இப்போது சிறைசென்று வந்துள்ள 56 தொழிலாளர்களும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கல்பாக்கத்தின் ஒரே போராடும் சங்கம் என்ற முத்திரையைப் பதித்த இந்த சங்கத்தை முடக்கிப் போட்டுவிட்டதாக நிர்வாகம் நினைக்கிறது. இது, ஒட்டுமொத்த தொழிற்சங்க இயக்கத்துக்கும் கூட பின்னடைவே.

வேறு சில விஷயங்களையும் நாம் இங்கே பேச வேண்டியிருக்கிறது.

''தோழர் பெரியசாமியின் மாற்றல் விவகாரத்தில் பொதிந்திருக்கும் அடிப்படையான பிரச்சனையைப் பார்க்கத் தவறினால், இந்த இடமாற்றம் வழக்கமான ஒன்று போலவே தோன்றும். ஆனால்,

## கோரிக்கைகள்

போராட்டத்தின் அடுத்த கட்டம் குறித்து ஆலோசனையில் இறங்கியுள்ள தோழர்களின் கோரிக்கைகள் இதுதான்:

● தோழர் பெரியசாமியின் ஆர்டர் திரும்பப் பெறப்பட வேண்டும். ● தலித் தொழிலாளர்களை 'Unrecognised people' எனக்கூறிய அரிகரன் மீது தீண்டாமைச் சட்டத்தின் கீழ் காவல் துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ● கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இடஒதுக்கீட்டு கொள்கை கறாராக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ● அநியாயமாக போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டும். ● 56 பேரின் இடைநீக்கத்தை நிர்வாகம் உடனடியாகத் திரும்பப் பெற்று பணிக்கு அமர்த்த வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

NPC/MAPS நிறுவனத்தில் தீயணைப்புப் படையின் இந்த குறிப்பிட்ட பிரிவில் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரே தோழர் பெரிய சாமிதான். அவர் இடமாற்றம் செய்யப் பட்டால், இப்போது ஆளெடுப்புத்தடை வேறு அமுலில் இருப்பதால், வேறு ஒரு தாழ்த்தப்பட்ட ஊழியரை உடனடியாக அவ்விடத்தில் அமர்த்தவோ, எதிர்காலத் தில் உடனடியாக அப்பதவியில் நியமிக் கவோ முடியாது.

''பெரியசாமியின் மாற்றத்திற்குப் பின் இந்தப் பிரிவில் இடஒதுக்கீட்டின் சத விகிதம் பூஜ்ஜியம். இது, இடஒதுக் கீட்டுக் கொள்கைக்கு எதிரானது என்ப தால் - இந்த இடமாற்றம் அதிக முக்கியத் துவம் பெறுகிறது'' என்று விளக்கினார் ராமலிங்கம். காவல்துறை மற்றும் அரசு நிர்வாகத்தின் சாதியாதிக்க வெறியர்கள், பிற்போக்குச் சக்திகள் ஒன்று சேர்ந்தால் என்ன நடக்கும் என்பதற்கு இந்த கைது சம்பவம் ஒரு உதாரணமாக இருக்கிறது.

எஸ்.சி./எஸ்.டி. சங்கம் எடுத்த நடவடிக்கைக்கு பிற சங்கங்கள் தார்மீக ஆதரவை தவிர வேறு வகையான உதவி கள் எதையும் செய்யவில்லை என்று எ.இ.இ.ஏ. தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் சதாசிவம் சொல்கிறார்.

இத்தனைக்கும் பின்னால் தங்களது போராட்டத்தில தோழர்கள் மிகவும் உறுதி யாக இருக்கிறார்கள் என்பதுதான் சிறப்பான விஷயம். பாதிக்கப்பட்ட தோழர் பெரியசாமியை சந்தித்துப் பேசு கையில், 'சங்கம் எடுக்கும் அனைத்து நட வடிக்கைக்கும் கட்டுப்பட்டு, எப்படி யாவது நல்ல முடிவு கிடைக்கிறவரைக் கும் உறுதியாக நிப்பேங்க; ஒரு பெரிய சாமிக்கு நடந்த சம்பவம் வேற யாருக்கும் நடக்கக் கூடாது' எனக்கூறுவதே அவரது உறுதியை வெளிப்படுத்த போது மானதாக இருந்தது.

பாரதீய ஜனதா தலைமையிலான ஆட்சி, தன்னுடைய அனைத்துத் துறைக ளிலும் புகுத்திவரும் பார்ப்பனீய திமிரின் வெளிப்பாடே Unrecognised people என்ற இயக்குநரின் வார்த்தைகளாகும். அண் மையில் திருமாவளவன் தி.மு.க.வைப் பற்றி இப்படிக் குறிப்பிட்டார்: ''அவர் கள் எம்மை Indifferent ஆக நடத்தினார் கள்.'' Unrecognised people எனக் கூறுபவர் களையும் Indifferent ஆக நடத்துபவர் களையும் தலித் மக்கள் எப்படி நடத்தப் போகிறார்கள்? •

# கழுவப்பட்ட சுவடுகள்

❑

தூரத்துப் பச்சையனைத்தும்
நான் விதைத்தது
எனினும்
என்
உள்ளங்கைகள்
வெடித்துக் கிடக்கின்றன
ஏதுமின்றி.

❑

என்மேல் சுற்றியிருந்த
உயிர்க்கொடி அறுத்து
சாதிக்கொடி போர்த்தியபோது
நான்
தூங்கியிருக்கக் கூடாது.

❑

என்
உள்ளங்கால்களின்
ரேகைகள்கூட
களங்கமற்றுத்தான் இருக்கின்றன.
ஆயினும்
நான்
நின்றுபோனபின்
கழுவப்படுகின்றன
என் சுவடுகள்

- லதா



புகைப்படம் : கிருஷ்ணப்பிரியா



படிப்பகம்

www.padippakam.com

# கோழையாக்கியது யார்?



- நூல் : பகவான் புத்தர் • ஆசிரியர் : தர்மானந்த கோசாம்பி
- வெளியீடு : விடியல் பதிப்பகம் 11, பெரியார் நகர், மசக்காளிப்பாளையம் வடக்கு கோவை - 641 015 • பக்கம் : 326 • விலை : 120/-

அண்ணல் அம்பேத்கரால் பெரிதும் போற்றப்பட்ட அறிஞர்களில் ஒருவர், தர்மானந்த கோசாம்பி. பிறப்பால் மராத்தியப் பார்ப்பனரான தர்மானந்தர், பவுத்தத்தை ஆழ்ந்து கற்று, ஏற்றுப் பவுத்தத் துறவியாகத் தன் வாழ்வின் நிறைவைக் கண்டவர். பாலி, சமஸ்கிருதம், மராத்தி, சிந்தி, குஜராத்தி எனப் பல இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த அவர், பாலி மொழி இலக்கியங்களிலிருந்து புத்தரின் வாழ்க்கை சரிதத்தை, அறிவார்ந்த வகையில் வடித்தெடுத்து ஆக்கிய நூல்தான் 'பகவான் புத்தர்'.

அதனுடைய இரண்டாம் பதிப்பை அண்மையில் வெளியிட்டுள்ள 'விடியல்' பதிப்பகத்தாருக்கு - தமிழ்ச் சிந்தனையுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. பதிப்பகத்தார் சற்றுக் கவனம் செலுத்தியிருந்தால், பொருட் சிதைவுகளை ஏற்படுத்தும் பல்வேறு அச்சுப் பிழைகளைத் தவிர்த்திருக்கலாம். இந்நூல் குறித்துச்சுருக்கமாக, ஆனால், செறிவாக பொ. வேல்சாமி எழுதியுள்ள அறிமுகம்கூட, இத்தகைய அச்சுப் பிழைகளால் சற்று ஊனப்பட்டு விட்டது.

எனினும், பவுத்தம் குறித்து நிறைவான விளக்கம் பெற விழைவோருக்கு இது ஒரு இன்றியமையாத நூல். இந்நூலுக்கும் அம்பேத்கரின் 'புத்தமும் அவர் தம்மமும்' நூலுக்குமிடையில் பல ஒற்றுமைகள் இருப்பதைக் காணலாம். 'அன்பையும் அகிம்சையையும் பவுத்தம், இந்தியர்களுக்கு (இந்துக்களுக்கும்) போதித்து அவர்களைக் கோழைகளாக்கியதால்தான் - இஸ்லாமியப் படையெடுப்பாளர்களைத் தடுத்து நிறுத்த முடியாமல்போய், முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டது.' ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்துத்துவவாதிகள் செய்து வரும் இப்பிரச்சாரத்திற்குப் பதிலுரையாக அமைந்துள்ளன 'பகவான் புத்தரி'லுள்ள சில பகுதிகள். அதில் ஒரு பகுதியை இங்கு காணலாம்.

- எஸ்.வி.ஆர்.

### நூலிலிருந்து...

"புத்தர் உபதேசித்த அகிம்சையினால் பாரத நாட்டுச் சமூகம் ஆண்மையற்றதாயிற்று; அதனால்தான் பிற நாட்டினர் அதை வெல்ல முடிந்தது என்ற கருத்தைப் பலர் கூறியிருக்கிறார்கள். இந்த நூலில் இதற்கு ஏதாவது விடை தந்திருக்க வேண்டும்.

விடை - புத்தருடைய சரித்திரத்துக்கும் இந்தக் கருத்துக்கும் ஏதேனும் தொடர்பு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. கி.மு. 543ஆம் ஆண்டில் புத்தர் பரிநிர்வாணமெய்தினார். அதற்குப் பின் இரண்டு நூற்றாண்டுகள் கழித்து, சந்திரகுப்தன் தனது சாம்ராஜ்யத்தை நிறுவினான். அவன் ஜைன சமயத்தைச் சார்ந்தவன் என்பர்; ஆனால், கிரேக்கர்களை இந்த நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு அவனுடைய அகிம்சா தருமம் அவனுக்குத் தடையாக இல்லை. அவனுடைய பேரனான அசோகன் முற்றும் பவுத்தன் ஆனவன்; ஆயினும், அவன் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை நடத்தினான்...

முஸ்லிம்கள் சிந்து நாட்டையும் பஞ்சாபின் சில பகுதிகளையும் வசப்படுத்திய பின்பு, நூறு ஆண்டுகள் கழித்து சங்கராச்சாரி தோன்றினார். அவருடைய வேதாந்தத்தின் லட்சியமெல்லாம், சூத்திரர்கள் வேதம் பயிலக் கூடாது என்பதேயாம்! முஸ்லிம் வெற்றியாளர்களிடமிருந்தாவது நம்முடைய இந்தச் சநாதனிகள் ஏதாயினும் பாடம் கற்றுக் கொண்டார்களா? புத்தர் தாம் இவர்களுக்கு எதிரியாயிற்றே; அவரிடமிருந்து இவர்கள் கற்றுக் கொள்ளக் கூடியது என்ன இருந்தது?

ராசபுத்திரர்கள் கடுமையான சநாதனிகளாக இருந்தவர்கள். அவர்கள் அகிம்சையில் துளியும் நம்பிக்கை வைக்கவில்லை. சமயம் வரும்போது, அவர்கள் தங்களுக்குள் போரிட்டு மடிவர். இம்சையில் பக்தி கொண்ட இந்த வீரர்களை மகமூத் கஜ்னி தன் குதிரைக் காலின் கீழே தூசு போல எப்படி அழித்து விட்டான்? அவர்கள் புத்தருடைய அகிம்சையைக் கடைப்பிடித்தார்கள் என்பதனாலா?

இம்சையில் எல்லையற்ற பக்தி கொண்ட இத்தகையவர்களின் சாம்ராஜ்யம், பாரத நாடெங்கும் பரவியிருக்க வேண்டாமா? இவர்களை விட நூறு மடங்கு அகிம்சர்களாக உள்ள ஆங்கிலேயரை இவர்கள் புகலடைய வேண்டியதாயிற்று. ஒருவர்பின் ஒருவராக மராட்டியச் சர்தார்கள் ஆங்கிலேயருக்கு ஏன் அடிமையானார்கள்? அவர்கள் புத்தருடைய உபதேசங்களை ஒப்புக் கொண்டதனாலா?...

இந்த வினாக்களுக்கு விடைகளைப் புகழ்பெற்ற ஆராய்ச்சி அறிஞர்கள் கட்டாயம் அளிக்க வேண்டும். 'நீ செய்த குற்றத்தைப் பிறர் மீது சுமத்தி, ஏன் அறிஞன் என்று கூறித் திரிகிறாய்?' என்று கவிஞர் மோரோபந்த் கூறிய மணிமொழி, இத்தகைய புகழ்வாய்ந்த அறிஞர்களை நோக்கியே எழுந்ததாகும். இவர்களும் இவர்களுடைய முன்னோர்களும் இழைத்த தீமைகளைப் புத்தர் மீது சுமத்தி, இவர்கள் தங்கள் அறிவைப் பறையறைந்து கொண்டு இருக்கிறார்கள்."



படிப்பகம்

www.padippakam.com



# எதிர்கால அரசமைப்பு?

**ஆளும் இந்து பயங்கரவாதிகள் கூட்டணி, பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலைக் காரணம் காட்டி, அமெரிக்கப் போரை ஆதரிப்பதன் மூலம் தன் காய்களை நகர்த்தத் துடிக்கிறது. இந்நிலையில் முக்கியமாக, இந்திய அரசமைப்புச் சட்டம் என்ன வடிவத்தைப் பெறும் என்பது குறித்து கேள்வி எழுந்துள்ளது.**

■ **கவுதம சன்னா**

போர்களையும் போரில் ஏற்படும் வெற்றிக் களிப்புகளையும், படமெடுத்து மகிழ்ச்சியடைவதில், அமெரிக்கர்களுக்கு அளவில்லா ஆனந்தம். இரண்டு உலகப் போர்களையும் சேர்த்து இதுவரை அமெரிக்கா தூண்டியும், ஆயுதம் கொடுத்தும், விற்றும், உலகையே போர்க் களமாக்கியும், தன் சொந்த மண்ணில் வேறு நாட்டு குண்டு விழாமல் தப்பித்து வந்தது.

'ஆலிவுட்' படங்களில் அமெரிக்கா காட்டும் வீர சாகசங்கள், அந்நாட்டையே வீரர்களின் தேசமாகச் சித்தரித்தது. ஆனால், இரட்டை கோபுர தகர்ப்பு இதையெல்லாம் பொய்யாக்கி விட்டது. இரட்டை கோபுரம் தகர்க்கப் பட்டபோது, நூற்றுக் கணக்கானோர் உயிர் பயத்தில் ஜன்னல் வழியாகக் குதித்தனர். ஆனால், அவர்களது எந்த 'சூப்பர் மேனு'ம் அவர்களைக் காப்பாற்றவில்லை. பிறகு என்ன ஆனது?

ஒரு கோழைக்கு ஏற்படும் அந்தத் துணிச்சலோடு, 'பயங்கரவாதத்தை அழிக்கிறேன்' என்று போரை அறிவித்து விட்டது அமெரிக்கா. தொல்குடிகளான செவ்விந்தியர்களையும், கடத்திவரப்பட்ட கறுப்பின அடிமைகளையும், ஆண்டுக் கணக்கில் கொன்று, தன் அகிம்சையை நிலை நாட்டிய அமெரிக்கா - இன்று பயங்கரவாதத்தை அழிக்கப் போகிறதாம்!

ஒரு போருக்கு, இந்திய அரசு ஆதரவு தெரிவித்திருப்பது வரலாற்றில் இதுவே முதல் முறை. ஆளும் இந்து பயங்கரவாதிகள் கூட்டணி, பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலைக் காரணம் காட்டி இப்போரை ஆதரிப்பதன் மூலம் தன் காய்களை நகர்த்தத் துடிக்கிறது. இந்நிலையில் முக்கியமாக, அரசமைப்புச் சட்டம் என்ன வடிவத்தைப் பெறும் என்பது குறித்து கேள்வி எழுகிறது.



அரசமைப்பு மறு ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது - மக்களின் நினைவிலிருந்து மங்கிப் போயிருக்கும் வேளையில், அக்டோபர் 30இல் அது தனது அதிகாரப்பூர்வ அறிக்கையை குடியரசுத் தலைவரிடம் அளித்துள்ளது.

அரசமைப்புச் சட்டம் எதெதில் மாறுதலைப் பெறும் என்பதை யூகிப்பதில் கடினம் ஏதுமில்லை. இந்து பயங்கரவாதிகளுக்கு எவை தடையாக உள்ளன என்பதை இனம் கண்டால், பதில் பெறுவது எளிதாயிருக்கும். அந்த வகையில், சில முக்கியமான கூறுகளை மட்டும் இங்கு பார்ப்போம்.

அரசமைப்புச் சட்ட முகப்புரை : எல்லா சட்டத்திற்கும் முகப்புரை என்பது, அதைப் புரிந்து கொள்வதற்கான 'சாவி' போன்றதென உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. அரசமைப்புச் சட்ட முகப்புரை, We the people of India - 'இந்திய மக்களாகிய நாம்' என்று தொடங்குகிறது, இது, மிக முக்கியமான செய்தியை வழங்குகிறது. எப்படியெனில், முகப்புரை தயாரித்த குழு (நேரு) - We the Nation of India - ''இந்திய தேசமாகிய நாம்'' என வழங்கியது. இதை மாற்றி இந்திய மக்கள் என அழைக்க வைத்தது டாக்டர் அம்பேத்கர்தான்.



படிப்பகம்

> 1951ஆம் ஆண்டு தலித்துகளுக்கு எதிராக குடியரசுத் தலைவரின் அதிகாரம் பயன்படுத்தப்பட்டது. ''தலித்துகள் இந்து மதத்திலிருந்தால் தான் இட ஒதுக்கீட்டு உரிமைகளைப் பெற முடியும்'' என்று இந்து வட்டத்திற்குள் கொண்டு வந்தது - குடியரசுத் தலைவரின் ஆணைதான்.

அதற்கு அம்பேத்கர் சொன்ன காரணம்: ''இந்திய மக்கள் சாதிகளாலும், மொழிகளாலும் பிளவுண்டு, ஒரு தேசமாக அமையத் தகுதியற்று இருக்கிறார்கள். தேசமே இனிமேல்தான் உருவாகப் போகிறது. நாட்டை - தேசம் என்று அழைப்பது கூடாது'' நீண்ட விவாதத்திற்குப் பிறகு அம்பேத்கர் கருத்தே ஏற்கப்பட்டது.

இந்தியா ஒரு தேசமல்ல; ஒரு கூட்டமைப்பு என்பது வரலாற்று உண்மை. இந்த பல் இனக்கூற்றை, இந்து பயங்கரவாதிகள் அழிக்க முனைகிறார்கள். சட்டப்பூர்வமான, முற்போக்கான இந்த அனுகூலத்தை யாரும் பயன்படுத்திக் கொள்ளவேயில்லை.

மற்றொரு முக்கிய மாற்றம் வேண்டப்படுவது, அதிகாரப் பிரிவினையாகும். இதில் பல கோட்பாடுகள் உள்ளன. கோட்பாடுகளின் விளக்கம் இங்கு தேவையில்லை. எனினும், அரசமைப்புச் சட்டப்படி குடியரசுத் தலைவர், அவருக்குக் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அவை, இதற்குப் பொறுப்பான அமைச்சரவை மற்றும் நிர்வாகத் துறை, நீதித்துறை. இதில்தான் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்த முனைகிறது இந்து பயங்கரவாதம்.

அதாவது, குடியரசுத்தலைவர் ஆட்சி முறையைக் கொண்டுவர முயலுகிறது. அதுவும் மான்டெஸ்க்யூவின் கோட்பாட்டின் படி இயங்கும் 'அமெரிக்க மாதிரி'யை கொண்டுவரத் துடிக்கிறது.

இந்த 'அமெரிக்க மாதிரி' மக்களுக்குச் சாதகமானதா? அமெரிக்க வடிவத்தின்படி, அதிபர் - மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அமைச்சரவை என்பது கிடையாது. அதற்கு பதில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத - நியமனத்தின் மூலம் அமர்த்தப்படும் செயலர்கள், அமைச்சருக்கான அதிகாரத்துடன் இயங்குகிறார்கள். இவர்கள் மக்களவைக்குக் கட்டுப்படாமல், குடியரசுத் தலைவருக்கு மட்டுமே கட்டுப்பட்டவர்கள்.

இவர்களை யார் தேர்ந்தெடுத்துத் தருகிறார்கள் என்றால், அமெரிக்க முதலாளிகளும், உளவுத்துறையும்தான். இது தவிர, தன்னிச்சையாக இயங்கும் அய்ம்பதுக்கும் மேற்பட்ட அமைப்புகள் உண்டு. இதுவும் மக்களவைக்கு பதில் சொல்லத் தேவையில்லை. இதில் முக்கியமான ஒன்று அமெரிக்க வர்த்தக சபை.

சரி, அதிபராவது மக்களவைக்குக் கட்டுப்படுவாரா என்றால் அதுவும் இல்லை. மக்களவை எடுத்த முடிவுகளை எளிதில் உடைத்தெறிந்த அதிபர்கள் பலருண்டு. இன்னும் பல கேலிக்கூத்துகளும் அங்கு நடப்பதுண்டு. 1800இல் பதவியேற்ற ஜெபர்சன், 'காங்கிரஸ்' அதாவது, மக்களவை பக்கமே போனதில்லை. இந்த நகைக்கத்தக்க நடைமுறை 100 ஆண்டுகள் நீடித்து, 1900இல் டட்ரோவில்சன் தான் மக்களவைக்கு வந்தார். பின்பு அதிபருக்கு என்ன தான் வேலை என்று கேட்கத் தோன்றும். அவர் வேலையைத்தான் செயலாளர்களும், தன்னிச்சை அமைப்புகளும் செய்கிறது.

அமெரிக்க அதிபர்களின் அதிகபட்ச வேலை என்னவென்றால், அண்டை நாடுகளை மிரட்டுவது; போர் முழக்கம் செய்வது. ஜார்ஜ் புஷ், வேலையின்றி இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பெடுத்ததைப் படித்திருப்பீர்கள். அவர் ஆப்கான் மீது போர் அறிவித்த போது, காங்கிரஸ் அனுமதியைக் கேட்கவில்லை. அது மறுத்திருந்தாலும், அவர் அதை மீறலாம். இதுதான் அமெரிக்க அரசமைப்பின் சிறப்பு. அதன் மொத்தப் பிரிவு வெறும் 7 மட்டுமே.



395 பிரிவுகளும் 10 அட்டவணைகளும் கொண்ட இந்திய அரசமைப்பில், குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் இல்லாமலில்லை.' 1951ஆம் ஆண்டு தலித்துகளுக்கு எதிராக குடியரசுத் தலைவரின் அதிகாரம் பயன்படுத்தப்படத் தொடங்கியது. ''தலித்துகள் இந்து மதத்திலிருந்தால் தான் இடஒதுக்கீட்டு உரிமையைப் பெற முடியும்'' என்று இந்து வட்டத்திற்குள் கொண்டு வந்தது குடியரசுத் தலைவரின் ஆணைதான். தலித் மக்களின் சட்டப்பூர்வமான மதத் தகுதியை, பலவந்தமாக ராஜேந்திர பிரசாத் நிர்ணயித்தார்.

ஆனாலும், அரசமைப்பின்படி குடியரசுத் தலைவரின் அதிகாரம் கட்டுக்குள் தான் இருக்கிறது. இதுதான் இந்து சக்திகளுக்குப் பிடிக்கவில்லை. நாட்டை ராணுவ வெறி மயமாக்குவதற்கு இந்த அமைப்பு முறை தடையாக உள்ளது. இதை அகற்ற, இந்து அரசு, அரசமைப்பிற்கு மீறி செயல்படுகிறது. அதன் பரிசோதனை முறைகள் எந்த எதிர்ப்பையும் பெறவில்லை.

முதலாவதாக, பிரதமருக்கு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் 'கேபினெட்' தகுதியைப் போல அதிகாரம் பெற்றவர்கள். வாஜ்பேயிக்கு மூன்று ஆலோசகர்கள் உள்ளனர். இவர்கள் அனைத்துத் துறைகளின் அதிகாரத்தையும் தீர்மானிக்கிறார்கள். இது, அமெரிக்க செயலர் முறை மாதிரியாகும். பல அமைச்



படிப்பகம்

www.padippakam.com

சகங்கள் நிராகரித்த பல திட்டங்களுக்கு இவர்கள் அனுமதியளித்துள்ளனர். இவர்கள் நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல.

அதே போல், ராணுவத்தில் கொண்டு வந்த மாற்றம். முப்படைத் தளபதியாக குடியரசுத் தலைவர்தான் இருந்து வந்தார். முப்படைத் தளபதிகளும் குடியரசுத் தலைவர் முன்பு தான் ஒன்று கூடி பேச வேண்டும் என்பது மரபு. ஒரு ராணுவப் புரட்சி ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான் இவ்வாறு உருவாக்கப்பட்டது.

ஆனால் இதை மாற்றி, இந்து பயங்கரவாதிகள் கூட்டணி - முப்படைகளுக்கான அதிகாரத்தை குடியரசுத் தலைவரிடமிருந்து பறித்து, தனியாக ஓர் முப்படைத் தளபதியை நியமித்துள்ளது. பிற்காலத்தில் தமது முயற்சிகள் ஏதாவது கோளாறில் மாட்டிக் கொண்டால், ராணுவப் புரட்சி மூலம் தன் அதிகாரத்தைக் காத்துக் கொள்வதற்கான ஏற்பாடு இது.

இட ஒதுக்கீட்டைப் பற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை. அரசமைப்பில் அது இருக்கும். ஆனால், சாதாரண அரசாணைகள் மூலம் அவற்றின் நடைமுறை கட்டுப்படுத்தப்படும். இதுவுமில்லாமல் அரசுத் துறை தொழில்கள், அமைப்புகள் தனியார்மயமான பிறகு, அங்கு இடஒதுக்கீடு என்ற கேள்வி எழப்போவதில்லை அல்லவா?

இன்னும் மாநில, மய்ய அதிகாரப் பிரிவினை மற்றும் நிதிப் பகிர்வில் பெருத்த மாற்றமுண்டாகும். இது போல் இன்னும் ஏராளம். ஆனால், அரசமைப்பின் கோட்பாட்டு ரீதியான பிரிவுகளுக்கு எழப்போகும் மோசமான நிலைதான் கவலையளிக்கும் போல் உள்ளது.

இந்த வேதியர்களின் குடுமி சும்மா ஆடவில்லை. அது அமெரிக்காவால் ஆட்டப்படுகிறது என்பது மட்டும் இப்போது போதும். பின்னொரு தருணத்தில் விரிவாகப் பார்த்துக் கொள்ளலாம். தன் 'நாஜி' கொள்கைகளுக்கு, சட்ட வடிவம் கொடுக்கும் இந்த ஏற்பாட்டின் விளைவுகளை - தொலைநோக்கோடு சிந்திக்க, முறியடிக்க முற்போக்கு இயக்கங்கள் தவறிவிட்டன என்பதே உண்மை. ●

# "அனைத்துச் சாதியினரும் வெட்டியானாக்கப்பட வேண்டும்"

■ ஆர்.ஆர். சீனிவாசன்

*"மேல் வருணத்தார் இறந்தால், அவ்வருணத்தார் பின் இருக்கும்போது, தாழ்ந்தோரைக் கொண்டு அந்தப் பிணத்தைத் தூக்கச் செய்யலாகாது. அப்படிச் செய்தால் இறந்தவனுக்கு நல்வாழ்வு மறுமையில்லை."*

– மநு தர்ம சாஸ்திரம்

பாதியிலே 'பறையனான' அரிச்சந்திரனின் அவலத்தைத் துன்பத்தின் எல்லைக் குறியீடாகப் பிரதிநிதித்துவப் படுத்தி இயங்கும் சாதி இந்துக்களின் மனம், ஆதியிலேயிருந்து 'பறையனாகவே' வாழும் - தலித் மக்களின் வாழ்நிலையையும், ஒரு வெட்டியானின் ஒடுக்கப்பட்ட மனநிலையையும் எப்படி உணர்ந்து கொள்ள முடியும்?



பிணங்கள், துர்மரணம், பிணங்களின் வாடை, சிதைந்த உடல்கள், உடல்கள் அழுகும் - எரியும் நாற்றம், மயான அமைதி, சுடுகாட்டு வெயில், எலும்புகளின் வெண்மை, நாய்கள், பிணங்கள் வெடிக்கும் ஓசை, புதைக்கத் தோண்டும் குழியில் தென்படும் பாதி அழுகிய உடல், சாராயம்... இதனூடாக ஓடும் மனதின் வேதனை ஊற்றுகள் - இன்று எதிர்ப்புக் குரலாக மாறி பற்றிப் பரவுகிறது.

பிறப்பும், இறப்பும் அது சார்ந்த சடங்குகளும் எப்போதும் மனித மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும். சாவுச் சடங்குகளில் குறிப்பிடப்பட்ட சமூகத்தினரே பங்கு பெறுகின்றனர். ஒருவர் இறந்தவுடன் அச்சவத்தைக் குளிப்பாட்டி, சவரம் செய்து, பாடையில் கட்டி சுடுகாட்டுக்குக் கொண்டு செல்லும் பொறுப்பு 'குடிமகன்' என்று சொல்லப்படும் நாவிதருடையது.

ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனியாக 'குடிமகன்'கள் வேலை செய்கின்றனர். இவர்களுக்கு பிணத்தைத் தொடும் உரிமையுண்டு. பிணத்தையும் தீண்டாமல் அதை எரித்து அல்லது புதைத்து பிணத்தைக் காவல் காப்பவர்களாக - இன்றளவும் தலித்துகளே இருந்து வருகின்றனர்.

இதைத் தவிர, சாவு செய்தியைச் சொல்லும் நபர்களாகவும், (இதற்கு 'கேதம்' சொல்லுதல் என்று பெயர்), சாவுவீட்டின் முன் சாவுப்பறையடிப்பவர்களாகவும் தலித் மக்கள் இருக்கின்றனர். தலித் மக்களின் குடியிருப்புகள் பெரும்பாலும் சாதி இந்துக்களின் சுடுகாட்டுக்கு அருகே இருப்பதை இன்றும் பார்க்கலாம். இவ்வளவு இன்னல்களை சொல்லும்போதே - தலித்துகளுக்கு எல்லா ஊர்களிலும் தனிச்சுடுகாடு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.


"தலித்துகளின் எல்லா வேலையைப் போலவே வெட்டியான் வேலையும் கூலி



படிப்பகம்

www.padippakam.com

இல்லாத வேலைதான். 'வெட்டி வேலை' என்பதுகூட இதிலிருந்து வந்ததுதான். சங்க இலக்கியங்களில் 'பிணம் காவுதல் வெட்டிப்பாட்டம்' போன்ற குறிப்புகள் உள்ளன. இவர்களுக்கு 'தோட்டிப்பறையன்' என்ற பெயரும் உண்டு. தண்டோரா போடுவது, பிணங்களைத் தகனம் செய்வது, மழையில்லாக் காலத்தில் கொடும்பாவி கட்டி இழுப்பது போன்ற வெட்டி வேலையில் சாதிக் கொடுமையின் அனைத்து அம்சங்களும் உண்டு'' என்கிறார் முனைவர் தொ. பரமசிவன்.



பிற சாதிக் கொடுமைகளைக் காட்டிலும் இதிலிருந்து மீள முடியாதபடி, தலித் மக்கள் கடுமையான சாதி ஆதிக்கத்தில் வாழும் கிராமங்கள், நூற்றுக்கணக்கில் இருப்பது எதார்த்தம். சென்னை போன்ற பெரு நகரங்களில் சடங்கு, சம்பிரதாயங்களில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், இவை ஆதரிக்கத்தக்க மாற்றங்கள் இல்லை. பிணங்கள் எரிப்பதற்கும், புதைப்பதற்கும் வரிசையாக நிற்கும் சென்னையின் கைலாசபுரம் சுடுகாட்டில், அனைத்து வேலைகளையும் செய்பவர்கள் தலித்துகள் மட்டுமே.

பிணங்களை எரிப்பது, புதைப்பது தவிர, துர்மரணம், விபத்துகளில் சிக்கும் பிணங்கள், அரசு மருத்துவமனைகளில் உள்ள சாவுகிடங்குகளில் அனாதைப் பிணங்களின் உடல்கள் அனைத்தையும் அகற்றுவது தவிர, அவற்றைப் புதைக்கும் பணியையும் தலித் மக்களே செய்கின்றனர். மாநகராட்சியின் 'அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்களாக' இவர்கள் இருந்தாலும் - இவர்கள் அங்கீகரிக்கப் படவில்லை என்பதுதான் உண்மை.



முதலில் இவர்களுக்கு சம்பளம் கிடையாது. பிணங்கள் வந்தால் மட்டுமே பணம் கிடைக்கும். சம்பளம் கிடையாது என்னும்போதே - அரசுக்கும் இவர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது புரிய வரும். ஆனால், இவர்கள்தான் இந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று தலித்துகளை வலுக்கட்டாயமாக ஈடுபடுத்துவதிலிருந்து, அரசின் ஆதிக்கத்தை அறிந்து கொள்ளலாம். இதிலிருந்து தப்பிக்க முடியாதபடி மறைமுகமாகவும் தலித்துகள் ஒடுக்கப்படுகின்றனர்.

ஏனெனில், இது போன்ற தொழில்களுக்கு வேறு சாதியினர் ஒருவர் கூட வந்ததாகத் தெரியவில்லை. தலித் மக்கள், தலைமுறை தலைமுறையாகச் செய்து வரும் இத்தொழிலிலிருந்து சற்று மீண்டு வர - தாங்கள் மாநகராட்சித் தொழிலாளர்களாக மாற்றப்பட வேண்டும் என்கின்றனர். வெட்டியான்களுக்கு மரணம் ஏற்பட்டால் ரூ.50,000 வரை உதவித் தொகை வழங்க வேண்டும் என்கின்றனர். ''மின்சாரத்தகன முறை மாற்றப்பட வேண்டும், குடியிருப்புகள் கட்டித் தரப்பட வேண்டும்'' என்கின்றனர். இப்படி நிறைய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதை அவர்களோடு உரையாடியதிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது.

திருநெல்வேலி போன்ற நகரங்கள், கிராமங்களில் இவ்வேலை வேறு வகையில் உள்ளது. தீண்டாமைக் கொடுமை, சடங்கு சம்பிரதாயங்களின் ஆதிக்கம், சமூகத்தில் இக்குடும்பத்தினரை ஏளனப்படுத்துதல், சாவுச்செய்தியை தலித்துகள் தான் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம், சாவுப்பறையடித்தலில் இருந்து தப்பிக்க முடியாதபடி பெரும்பான்மையான சாதி ஆதிக்கத்தினரின் அழுத்தம் ஆகியவற்றைக் காணலாம்.

'தீட்டில்' இல்லாத நாவிதர்களான 'குடிமகன்'களே எல்லா காரியங்களையும் செய்து விடுவதை இங்கு காணலாம். சுடுகாட்டிற்குக் காவல், பிணங்களுக்குக் குழி தோண்டுதல் போன்ற வேலைகளோடு மிருகங்களின் பிணங்களையும் அகற்றி, புதைக்கும் கொடுமையும் தலித் மக்களின் மீது திணிக்கப்படுகிறது. கிராமங்களில் இன்றும் தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

இரட்டை தம்ளர் முறையை வெளிப்படையாகக் காணும்போது, பிணங்களோடு தொடர்புடைய வேலை எவ்வளவு ஆழமாக ஆதிக்கம் செலுத்தும் என்பதை நாம் அறியமுடியும்.

ஒரு தொழிலாகவே இது மதிக்கப்படாதபோது, இதற்கான தொழிற்சங்கள் ஏதும் இல்லாததும், எந்தவொரு அரசியல் இயக்கமும் இதற்கு முனைப்புக் கூட காட்டாத நிலையிலிருப்பது, தீண்டாமைக் கொடுமையின் ஒரு பகுதியாகும். கடுமையான உடலுழைப்பையும், மன இறுக்கத்தையும் வேண்டி நிற்கும் இத்தொழிலுக்கு - நிறைய மாற்றங்கள் வேண்டுமென்று தலித் மக்கள் விவாதிக்கின்றனர்.

மலம் அள்ளும் தொழில் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பது போல, இத்தொழிலும் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பது எதார்த்தமாக வேண்டும். சாதிக்குரிய தொழிலாக இது இருப்பதிலிருந்து தலித்துகள் விடுபட வேண்டும்.

இனி, மரணங்களுக்கு அவரவர் குடும்பத்தினரே அடக்கம் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். அரசு ஆதிக்கம், இத்தொழில் சார்ந்த கொடுமைகளில் ஏற்றத்தாழ்வு காட்டிக் கொண்டே இருந்தால், பாதி அழுகிய பிணங்களை சுடுகாட்டிலிருந்து நகரங்களின் தெருக்களுக்குத் திருப்பி ஊர்வலமாக எடுத்து வருதல், விரைவான மாற்றங்களை உண்டு பண்ணும். ●

# "நாங்கள் செத்துப்போன மனிதர்கள்..."



மாநில மயானக் காப்பாளர்கள் நலச் சங்கத்தின் தலைவர் **கு.சுப்பிரமணி** அவர்களுடன் ஓர் உரையாடல்:

♦ ***இந்த சங்கம் துவங்கப்பட்டதன் பின்னணி பற்றி...***

கடைசி மனிதனுக்கும் ஜனநாயகம் என்று எல்லோரும் சொல்றாங்க, அந்தக் கடைசி மனிதன் நாங்கதான். எங்களுடைய ஜனநாயகம் பற்றி எந்த ஒரு அரசாங்கமும் கவலைப் பட்டதில்லை. செத்துப்போன மனிதர்களைப் புதைப்பதற்கும் எரிப்பதற்கும்தான் நாங்க இருக்கிறோம். உண்மையில் செத்துப்போன மனிதனுக்கும் கீழான நிலையில் நாங்க இருக்கிறோம். பரம்பரை பரம்பரையாக எங்க முப்பாட்டன் காலத்திலிருந்து இந்தத் தொழிலைச் செய்து வருகிறோம்.

இது, 2 மணி நேர-மூன்று மணி நேர வேலையில்லை. 24மணி நேரமும் வேலை செய்ய வேண்டும். ஓய்வு என்பதே கிடையாது. சமுதாயத் தொண்டாகத்தான் நினைக்கிறோம். அரசால் புறக்கணிக்கப்பட்ட தொழிலாளர்கள் நாங்கள். ஆனால், சம்பளம் கிடையாது, பென்ஷன் கிடையாது, எதுவுமே கிடையாது எங்களுக்கு. செத்துப் போன மனிதர்களைப் போலவே எங்களை நினைக்கிறது அரசு.

ஒரு பிணத்தை எரித்தால் மாநகராட்சி ரூ.600 தருகிறது. சம்பளமாக அல்ல - விறகு, மண்ணெண்ணை, வரட்டி ஆகியவற்றிற்காக. சம்பளம் இல்லை. புதைத்தால் ரூ. 225 தருகிறார்கள். இந்த நேரத்தில் 'விடுதலைச் சிறுத்தைகளின்' தலைவர் திருமாவளவன் சுடுகாட்டுக்கு முன்னே எங்களின் நிலையைப் பற்றி உணர்ச்சிகரமாகப் பேசினார். அதன் பிறகு நாங்கள் எல்லோரும் சேர்ந்து இச்சங்கத்தைத் துவக்கினோம். இந்த ஆண்டுதான் இதைப் பதிவு செய்திருக்கிறோம்.

சென்னையில் மட்டும் 36 மயான பூமிகள் உள்ளன. மொத்தம் 286 வெட்டியான்கள் சென்னையில் மட்டும் உள்ளனர். வெட்டியான் என்ற சொல்லையே நாங்கள், இழிசொல்லாக நினைக்கிறோம். அதனால், 'மயானக் காப்பாளர்' என்று அழைக்க வேண்டும் என நினைக்கிறோம்.



♦ ***மலம் அள்ளும் தொழில் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதுபோல, வெட்டியான் தொழிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்று நீங்க நினைக்கிறீங்களா?***

என்னோட 56 வயதுல திடீர்னு என்னால அப்படி நினைக்க முடியல. இந்தத் தொழிலே மதிக்கப்பட வேண்டும்; மாநகராட்சித் தொழிலாளர்களாக நாங்கள் மாற்றப்பட வேண்டும் என்பதுதான் எனக்கு முக்கியமாகப் படுகிறது. பரம்பரை பரம்பரையாக ஒதுக்கப்பட்ட - எங்களின் மேல் திணிக்கப்பட்டதுதான் இந்த வேலை. ஆனாலும் வேறு வழியில்லை எங்களுக்கு இப்போது.

♦ ***சுடுகாட்டில் உங்களுடைய வேலை என்ன?***

பிணத்தைச் சுட்டு எலும்பாக்கி அனுப்புவதுதான் எங்கள் வேலை. சில பேரை எரிக்கிறோம். சில பேரைப் புதைக்கிறோம். புதைப்பதற்கு குழி தோண்டுவதுதான் எங்கள் வேலை. ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் வேர்வை நாற்றத்தைக் கூடச் சகிக்க மாட்டான். முழுமையாக அழுகிவரும் பிணத்தின் நாற்றத்தை



படிப்பகம்

நினைச்சுப் பாருங்க. இதைத் தவிர யானைக்கால் வியாதி, டி.பி. போன்ற நோயாளிகளின் பிணம் வந்தால் இன்னும் கொடுமையாகி விடும். உடல் முழுக்க நீர் ஒழுகும். உடம்பு எரியவே எரியாது. ஒரு தடவை எரியாத உடலை மீண்டும் எரிய வைக்க முடியாது. வேறு வழியில்லாமல் வெட்டி, வெட்டி, எரிக்க வேண்டியிருக்கும்.

திடீரென பிணங்கள் வெடித்து விடும் அபாயமும் உண்டு. எதையும் தாக்குப் பிடிக்க வேண்டும். சாராயம் குடிக்காமல் இந்த வேலையைச் செய்ய முடியாது. அடிக்கடி பிணங்கள் வருவதால், புதைத்த இடத்திலேயே தோண்டும்போது - பழைய பிணங்களின் மீதிருந்து வரும் கெட்ட ஆவி அடித்து இறந்து போன தொழிலாளர்கள் நிறைய பேர். ஒரு பிணம் எரிவதற்கு பத்து மணி நேரம் ஆகும். பத்து மணி நேரமும் கண்ணும் கருத்துமாக இருந்து எரிக்க வேண்டும். இல்லையென்றால் கெட்ட பெயர் வந்து விடும். அதேவேளையில், பிணத்துடன் வருபவர்கள் இழிவாக எங்களைப் பார்ப்பார்கள், பேசுவார்கள். அதையும், நாங்கள் வீரமானவர்களாக இருந்தாலும் கோழை மாதிரி நடிக்கிறோம். மொத்தத்தில் இந்தச் சமூகம் ஒட்டு மொத்தமாக எங்களைக் கொத்தடிமைகளாகத் தான் நடத்துகிறது.

மழை வந்து விட்டால் இன்னும் அதிகமான பிரச்சனை வந்துவிடும். இந்த ஓட்டேரி சுடுகாடு தாழ்வான பகுதியில் உள்ளது. சுடுகாடே மூழ்கிவிடும். பிணங்களைப் புதைக்க முடியாமல் பெரிய கல்லை பிணத்தின் மேல் வைத்து விட்டு வருவோம். மழை கூடும்போது கல் விழுந்து விடும் - பிணங்கள் மிதந்து வீதிக்கே வந்துவிடும். பிறகு எங்கள் குழந்தைகளுக்கு அது விளையாட்டுப் பொருளாகி விடும். பிணங்களைத் தள்ளிவிட்டு நீந்துவார்கள். என்ன ஒரு கொடுமையான வாழ்க்கை என்று பாருங்கள்.

எங்களுக்கு மாநகராட்சியிலிருந்து 'லைசன்ஸ்' கொடுக்கப்படும்போது, 36ஆவது சட்டத்தின்படி இந்த வேலையைச் செய்துதான் ஆக வேண்டும் என்றிருக்கிறது. துர்நாற்றத்திற்கிடையில்தான் எங்கள் வாழ்க்கை. பிணத்துக்காக குழி வெட்டிய பிறகு, பிணம் எந்த நேரத்தில் வரும் என்று தெரியாது. அது வரை காத்திருக்க வேண்டும். சாப்பாடுகூட குழிக்குப் பக்கத்தில்தான்.



♦ *வாரிசுகளுக்கு வேலை வேண்டும் என்று நீங்கள் போராடுகிறீர்கள். உங்கள் மகனும் இந்த வேலைக்குத்தான் வர வேண்டுமா?*

தனிப்பட்ட முறையில் விரும்பவில்லைதான். மகன்கள் படித்துப் பெரிய ஆளாக வேண்டும் என்றுதான் நினைக்கிறோம். ஆனால், எங்கள் போராட்டம் இன்றைய நிலையில் மாற்றம் வரவேண்டும் என்பது தான். ஒரே நாளில் எதுவும் நடக்காது. எல்லோரையும் நிரந்தர அரசு ஊழியர்களாக உடனடியாக மாற்ற வேண்டும் முதலில்.

**"கடைசி மனிதனுக்கும் ஜனநாயகம் என்று எல்லோரும் சொல்றாங்க, அந்த கடைசி மனிதன் நாங்க தான். எங்களுடைய ஜனநாயகம் பற்றி எந்த ஒரு அரசாங்கமும் கவலைப் பட்டதில்லை."**



ஓட்டேரி சுடுகாட்டில் உள்ள தாத்தா ரெட்டமலை சீனிவாசன் கல்லறை முன்பு கு. சுப்பிரமணி

♦ *மின்சார தகனத்தை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா?*

எங்களுடைய தொழிலைக் கெடுப்பதால் அதை எதிர்க்கிறோம். தமிழக மக்கள் பிணங்களை சம்பிரதாயங்களுடன் செய்ய விரும்புகிறார்கள். மகன்கள்தான் கொள்ளி வைக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். எனவேதான், நாங்கள் வேண்டாம் என்கிறோம். மின்சார தகனம் வந்தால் எங்கள் உழைப்பில் மாற்றம் வரும். கெட்ட புகை கிடையாது. மின்சார தகனம் பிரச்சனையில்லை. ஆனால், எங்களுக்கு அரசு வேலைதான் முக்கியம்.

♦ *இங்கு சாதிரீதியாக தனித்தனியாக சுடுகாடுகள் உள்ளதா?*

கூட்டம் அதிகமாக உள்ளதால் இங்கு ஒரே சுடுகாடுதான். ஆனால், இங்கு அரிச்சந்திரசாமி என தலித் மக்களுக்குத் தனியாக உள்ளது. வைணவர்களுக்கும், சைவர்களுக்கும் தனியாக உள்ளது. ஆர்.ஏ. சங்கரன் என்கிற தலித் தலைவர் இங்கேயுமா தனித்தனிச் சாமி என்றபடி சாமியை உடைத்துப் போட்டு விட்டார்.

♦ *மற்ற சமூகத்தினர் உங்களை எப்படி நடத்துகிறார்கள்?*

அரசு அலுவலகம், போலிஸ் ஸ்டேஷன் எல்லா இடத்திலும் முதலில் ஒழுங்காகத்தான் பேசுவார்கள். வெட்டியான் என்று தெரிந்தவுடன் தள்ளி நிற்க வைத்து விடுவார்கள். வெளியே போய் உட்காரச் சொல்லுவார்கள். மக்கள் கூட எல்லோரும் நல்லாப் பேசினாலும் மனசில அழுக்கோடத்தான் இருக்காங்க. இழிவான மனிதர்களாகத்தான் எங்களை நினைக்கிறார்கள்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்று முப்பது ஆண்டுகளாகப் போராடுகிறார்கள். ஆனால், உண்மையில் அனைத்துச் சாதியினரும் வெட்டியானாக்கப்பட வேண்டும். என்பதுதான் சரியான முழக்கமாக இருக்கும்.

♦ *என்ன மாற்றங்கள் வரவேண்டும் என்று விரும்புகிறீர்கள்?*

கடுமையாக உழைக்கிறோம். நிம்மதியாக இளைப்பாற ஒரு நிழல் கூட கிடையாது. எல்லோரும் சுடுகாட்டை மலம் ஜலம் கழிக்கும் இடமாகத்தான் பார்க்கிறார்கள். நீங்கள் உட்கார்ந்திருப்பது தலித் தலைவர் ரெட்டமலை சீனிவாசனின் கல்லறை. இந்த இடத்தை எவ்வளவு கேவலமாக வைத்திருக்கிறார்கள் பாருங்கள். இங்கு கழிப்பிட வசதிகள் உருவாக்கப்பட வேண்டும். ●

பேட்டி உதவி : புரசை கோ. தமிழேந்தி

ஓவியங்கள் : 'காஞ்சனை' மணி

www.padippakam.com

■ யாக்கன்

# 'பொடோ'

## ஓர் அரச பயங்கரவாதம்

இந்திய தேசிய இனவிடுதலை உணர்வை நசுக்குவதற்காக, ஆங்கிலேயர்களால் 'ரவுலட்' போன்ற கொடிய சட்டங்கள் இந்த நாட்டு மக்கள் மீது ஏவப்பட்டன. தற்பொழுது இந்தியாவை ஆளும் வகுப்பினர், இதே சட்டங்களைப் புதிய வடிவங்களில் தொடர்கின்றனர்.

இந்த அடக்குமுறைச் சட்டங்கள் அனைத்தும் மொழி மற்றும் பண்பாட்டு ரீதியாகத் திரண்டெழும் தேசிய இனங்களின் எழுச்சியை நசுக்குவதற்கும், சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக சமூகத்தின் கோரப்பற்களில் சிக்கித் தவிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் கொஞ்ச நஞ்ச விடுதலை உணர்வை அழிப்பதற்கு மட்டுமே - காவல்துறையினராலும், ஆளும் வர்க்கத்தினராலும் பயன்படுத்தப்பட்டு வந்தன.

'தடா' சட்டம் நடைமுறையில் இருந்த பத்தாண்டு காலங்களில் (1985 - 1994) 78,670 பேர் கைது செய்யப்பட்டனர். போலிஸ் விசாரணை என்ற பெயரில் பலர் சித்ரவதை செய்து படுகொலை செய்யப்பட்டனர்.

நாடெங்கிலும் மனித உரிமை அமைப்புகளும், ஜனநாயக சக்திகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் 'தடா' சட்டத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தன. சர்வதேச அளவில் உருவாக்கப்பட்டிருந்த மனித உரிமை ஒப்பந்தங்களை அப்பட்டமாக மீறிய அச்சட்டத்திற்கு - உலக அளவில் கிளம்பிய எதிர்ப்புகளைக் கண்டும், அய்.நா. சபையிலிருந்து விடுக்கப்பட்ட எச்சரிக்கையைக் கண்டும் இந்திய அரசு, 'தடா' சட்டத்தை 1995 அன்று திரும்பப் பெற்றது.

இதுவெல்லாம் பழைய கதை. இப்போது ஒரு புதுக்கதை. கோரத்தாண்டவம் ஆடிய பழைய 'தடா'வின் வாரிசாக, 'பொடோ' என்னும் பெயரில் ஒரு கொலைகாரச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1998இல் நடந்த கோவை, குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து, கருணாநிதி முதல்வராக இருந்தபோது அச்சட்டத்திற்கு 'பொடா' (Prevention of Terrorism Act 1998) எனப் பெயரிட்டு - அவரது அமைச்சரவையில் ஒப்புதல் பெற்று, குடியரசுத் தலைவரின் அனுமதிக்கு அனுப்பி வைத்தார். மக்களின் குடியுரிமைக்குப் பெரும் கேடு ஏற்படுத்தக்கூடிய அந்த 'பொடா' சட்டத்திற்கு அனுமதி தரப்படாமல், முடக்கி வைக்கப்பட்டது.

இப்போது அதை ஒரு சில மாற்றங்களோடு, 'பொடோ' (பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்) என்ற பெயரில் உருவாக்கி, அதற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்றுள்ளது பா.ஜ.க. அரசு.

இந்த 'பொடோ' சட்டத்தின் கீழ் நிரந்தரமாகத் தடை செய்யப்பட்டிருக்கும் 42 அமைப்புகளில், இந்து மதவெறியைத் தூண்டி, நாட்டில் பெரும் மதக்கலவரங்களுக்குக் காரணமாக இருக்கும் - இந்துத்துவ பாசிச அமைப்புகளில் ஒன்றுகூட சேர்க்கப்படவில்லை.

இச்சட்டத்தின் பிரிவு எண் 3(1) - பயங்கரவாத நடவடிக்கைகள் எவை என விளக்கம் தருகிறது. நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, பாதுகாப்பு இவற்றிற்கெதிராகப்




பேசுவது, காரியங்களில் ஈடுபடுவது, அப்படிப் பேசு வோரைப் பற்றி தகவல் தெரிந்தும் அதைக் காவல் துறையின ரிடம் தெரிவிக்காமலிருப்பது போன்றவை - பயங்கரவாதச் செயல்களாகக் கருதப்பட்டு, அவை அதிகபட்சமாக ஆயுள் தண்டனைக்குரிய குற்றங்களாக எடுத்துக் கொள்ளப்படும்.

பிரிவு 5 - பயங்கரவாத நடவடிக்கைகளில் தொடர்புடைய ஒரு குழுவில் தெரிந்தோ, தெரியாமலோ அங்கத்தினராக இருந் தால்கூட, ஆயுள் தண்டனை என்று கூப்பாடு போடுகிறது.

பிரிவு - 6 பயங்கரவாதச் செயல்கள் மூலம் பெறப்பட்ட சொத்துகளை வைத்திருந்தால், ஆயுள்தண்டனை என்கிறது பிரிவு 8 பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவோர் பற்றி விட ரங்கள், மற்றவருக்கு அரைகுறையாகத் தெரிந்தாலும்கூட




படிப்பகம்

www.padippakam.com

உடனே அதை காவல் துறையினரிடம் தெரிவிக்க வேண்டும். மறைத்தால், வேறு கேள்வியே இல்லாமல் ஓராண்டுச் சிறை.

இப்படிப் பேசுவது, சிந்திப்பது, அறிந்து கொள்வது போன்ற அடிப்படை உரிமைகளை மறுப்பதுமின்றி, அவற்றிற்கு ஆயுள்தண்டனை என்று அறிவிக்கிறது இச்சட்டம்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டை கேள்விக்குட்படுத்துகிற பேச்சுகளை பேசுகிற அந்த நோக்கத்தில் செயல்படுகிற எவரும், இச்சட்டத்தின் கீழ் பயங்கரவாதிகள் என அறிவிக்கப்பட்டு அவர்களுக்கு அதிகபட்சமாக மரணதண்டனை வரை வழிவகை செய்யப்பட்டுள்ளது.




ஏற்கனவே அதிகாரத் திமிறினால் ஒன்றுமறியாத தலித் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களில் ஈடுபட்டும், லஞ்சலாவண்யங்களில் ஊறித்திளைத்துக் கொண்டிருக்கும் காவல்துறையினருக்கு, இச்சட்டம் அசுரத்தனமான பலத்தைக் கொடுக்கும். மாவட்ட துணைக் கண்காணிப்பாளர் (டி.எஸ்.பி) பதவியிலிருக்கும் ஒரு போலிஸ் அதிகாரி நினைத்தால், யாரையும் பயங்கரவாதத்திற்குத் துணைபோனதாகக்கூறி - நீண்டகாலம் சிறையில் அடைத்து விடக்கூடிய பேராபத்தை இச்சட்டம் உருவாக்கும்.

காவல்துறையின் மாவட்டத் துணை கண்காணிப்பாளர் அந்தஸ்திலிருக்கும் அதிகாரி புலன்விசாரணை அதிகாரியாக நியமிக்கப்படுவார். 30 நாட்கள்வரை போலிஸ் 'லாக்கப்பில்' வைத்து விசாரணை நடத்தவும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய ஓராண்டுகால அவகாசமும் காவல் துறைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. விசாரணை அதிகாரி, குற்றம் சாட்டப்பட்டவரிடம் பெறும் வாக்குமூலமே முக்கிய சாட்சியமாக ஏற்கப்படும். குற்றம் சாட்டப்பட்டவர் தான் அவர் நிரபராதி என்பதை நிரூபிக்க வேண்டும்.

இதுபோன்ற, இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கு முற்றிலும் எதிரான பிரிவுகளுடன், தவறான எண்ணத்துடன் இச்சட்டம் ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. தொலைபேசி மூலமாகவும், இ-மெயில் மூலமாகவும் பரிமாறப்படும் தகவல்கள்கூட ஆதாரங்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

இதன் மூலம், யாருடைய தொலைபேசியையும் ரகசியமாக இடைமறித்துக் கேட்கவும், அதைப் பதிவு செய்யவும், இ-மெயில்களின் முகவரிகளை அறிந்து அதில் நுழைந்து செய்திகளை அறிந்து கொள்ளவும், காவல் துறையினர் சட்டப்பூர்வமான அதிகாரத்தைப் பெறுகின்றனர்.

ஆட்சியாளர்களின் நெறிகெட்ட செயல்பாடுகளினாலும், லஞ்ச ஊழல்களினாலும் வாழ்க்கையை இழந்து தவிக்கும் மக்களுக்காக - இந்த நாட்டின் எதிர்கால நலன்களுக்காக, ஆட்சியாளர்களை விமர்சித்தால், பேசினால், எழுதினால் ஆயுள்தண்டனை என்று சொல்லும் சட்டம், ரத்தவெறி கொண்ட ஒரு பாசிச சட்டமாகத்தானே இருக்க முடியும்?

நாட்டில் 60 விழுக்காடு மக்களுக்கு அரை வயிராவது நிரம்புவதற்கு வழிவகை செய்து வந்த - பொது விநியோக முறையை ஒழித்துக்கட்டி, உர மான்யங்களை நிறுத்தி, மிச்சமாகும் பணத்தில் நாசகார ஆயுதங்களை, அணுகுண்டுகளைத் தயாரித்துக் குவிக்கும் போர்வெறிகொண்ட பா.ஜ.க. அரசு, சர்வதேச அளவில் உருவாகியிருக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளினால், இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு உணர்வைப் பயன்படுத்தி இச்சட்டத்தை நிறைவேற்ற எத்தனிக்கிறது. எனவேதான், இந்த தருணத்தில் இப் 'பொடோ' சட்டத்தை அவசர அவசரமாக மத்திய அமைச்சரவை அனுமதி பெற்று, குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்றிருக்கிறது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கும் இப்புதிய நாசகாரச் சட்டத்தின் மூலம், இஸ்லாமிய, கிறித்தவ, சீக்கிய மக்களையும், அவர்களுக்காகப் போராடும் அமைப்புகளையும், மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்களையும், தீண்டாமைக் கெதிராக, தங்களின் மீது ஏவப்படும் வன்கொடுமைகளுக்கெதிராக அரசியல் ரீதியாக அணிதிரண்டு போராடும் தலித் மக்களையும், அவர்களது அமைப்புகளையும், நசுக்குவதற்கும், அடக்கி ஒடுக்குவதற்கும், ஆளும் வாஜ்பாய் - அத்வானி கூட்டணி சதி செய்கிறது.

நாடு சந்தித்த பிரதமர்களிலேயே மிகவும் திறமைக்குறைவான - பாசிச சிந்தனை கொண்ட, ஆர்.எஸ்.எஸ். காரராகச் செயல்படுகிற வாஜ்பாய், நாட்டின் பொருளாதார வளத்தை அந்நிய சக்திகளுக்கு அடகு வைத்து, உலக வர்த்தக நிறுவனம், உலக வங்கி முன்னால் கை கட்டி நிற்கும் வாஜ்பாய், இந்த நாட்டின் இறையாண்மை பற்றிப் பேசுவது, அதற்காக சட்டமியற்றுவது மக்களை முட்டாளாக்கும் செயலன்றி வேறென்ன?

**மக்களுக்கு அரசியல் சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளையே அடியோடு மறுக்கும் இது போன்ற பயங்கரவாதச் சட்டங்களின் மூலம் - ஒரு போதும், பயங்கரவாதத்தைத் தடுத்து விட முடியாது என்பதை ஆட்சியாளர்கள் இன்னும் உணரவில்லை.**

ஒடுக்கப்பட்ட இனங்கள், தங்களது மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகப் போராடத் திரண்டெழுகையில் - 'மிசா', 'தடா', 'பொடோ' போன்ற ஆட்கொல்லி சட்டங்களைக் கொண்டு - அடக்கி ஒடுக்க முற்படும் ஆட்சியாளர்கள், ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். சட்டத்தின் அடக்கு முறை அதிகரிக்கும் போது, மக்களின் போராட்டம் கூர்மையாகிக் கொண்டேயிருக்கும். ●



படிப்பகம்

www.padippakam.com



## எட்வர்ட் செய்த்

1935இல் ஜெருசலத்தில் பிறந்த எட்வர்ட் செய்த், நமது சமகால சிந்தனையாளர்களில் முக்கிய மானவர்களுள் ஒருவராகக் கருதப்படுபவர். தனது ''ஓரியன்டலிசம்'' நூலின் மூலம் உலகப் புகழ் பெற்ற அவர், ஏகாதிபத்தியத்தின் கலாச்சார செயல்பாடுகளை வெளிப்படுத்திக் காட்டுவதில் முன்னணியில் இருப்பவர்.

1963 முதல் நியூயார்க்கில் வாழ்ந்து வரும் செய்த், செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு - அது பற்றி முக்கியமான பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

பாலஸ்தீன மக்களின் முக்கியமான குரல்களில் ஒன்றாகக் கருதப்படும் செய்த், டேவிட் பர்சாமியான் என்பவருக்கு அளித்த பேட்டி இது.

'ப்ராக்ரசிவ் மாகசினின்' நவம்பர் 2001 இதழில் வெளியாகியுள்ள இந்தப் பேட்டியின் தமிழாக்கம் : ரவிக்குமார்

# "பயங்கரவாதம் அமெரிக்க எதிர்ப்பின் மறுபெயராகி விட்டது"

◇ செப்டம்பர் 11ஆம் தேதி நடந்த நிகழ்வுகள், அமெரிக்கர்கள் பலரையும் திக்குத் தெரியாமல் குழம்பிப் போகச் செய்துள்ளன. உங்களது எதிர்வினை என்ன?

நியூயார்க்கில் வாழ்கிறவன் என்ற விதத்தில் அந்த நிகழ்வுகள் என்னை அதிர வைத்தன, பயங்கொள்ளச் செய்தன. குறிப்பாக அந்த சம்பவங்களின் பரிமாண அடிப்படையில், அப்பாவி மக்களுக்கு இன்னல் விளைவிக்க வேண்டும் என்ற தணியாத வேட்கையை அது காட்டுகிறது. அது, குறியீடுகளை நோக்கி ஏவப்பட்டுள்ளது. உலக வர்த்தக மய்யம் - அமெரிக்க முதலாளித்துவத்தின் இதயம். பென்டகன் - அமெரிக்க ராணுவ அமைப்பின் தலைமையகம்.

ஆனால், அது விவாதிக்கப்படும் நோக்கத்தோடு செய்யப்படவில்லை. அது எந்தவொரு பேச்சு வார்த்தையின் பகுதிய கவும் இல்லை. அது எந்த செய்தியையு சொல்லும் நோக்கம் கொண்டதல்ல. அ அதற்கானது. அந்த வகையில் வழக்க துக்கு மாறானது. அது அரசியல் தளத்தை தாண்டி, இயல் கடந்த நிலைக்குச் சென் விட்டது.

www.padippakam.com

உரையாடலிலோ, அரசியல் அமைப்பிலோ, இணக்கத்திலோ ஆர்வமில்லாத - அவற்றை மறுக்கிற ஒருவிதமான வெறிபிடித்த மனப்பாங்கின் வெளிப்பாடு. அழிக்க வேண்டும் என்பது தவிர, வேறெந்த நோக்கமும் இல்லாத குரூரமான அழிவு அது. அந்தத் தாக்குதல்களுக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்கவில்லை என்பதை கவனியுங்கள். கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை, அறிக்கைகள் வெளியிடப்படவில்லை. அது, மவுனப் பயங்கரம்.

அது எதன் பகுதியும் அல்ல. அது இன்னொரு தளத்துக்குத் தாவிச் சென்றுவிட்டது - பைத்தியக்காரத்தனமாக எல்லாவற்றையும் பூடகப்படுத்துகிற, பொதுமைப்படுத்துகிற, சூக்குமப்படுத்துகிற தளத்துக்குத் தாவி விட்டது. தங்கள் நோக்கங்களுக்காக இஸ்லாத்தை கடத்திச் சென்றுவிட்டவர்களால் ஆனது அந்தத் தளம். ஒரு மாதிரியான இயல் கடந்த நிலையிலான எதிர்வினையைச் செய்வதன் மூலம், அந்தப் பொறிக்குள் மாட்டிக் கொண்டுவிடக் கூடாது என்பது முக்கியம்.

**◇ அமெரிக்கா என்ன செய்ய வேண்டும்?**

அந்த பயங்கரமான நிகழ்வுக்கு நியாயமான எதிர்வினை - உலக மக்களிடம் செல்வது, அய்.நா. அவைக்கு செல்வதுதான். சர்வதேச சட்டவிதிகளை சீரமைத்திருக்க வேண்டும். ஆனால், அமெரிக்கா ஒரு போதும் அப்படி செய்ததில்லை. அதற்கான காலமும் கடந்து விட்டது.

அமெரிக்கா எல்லாவற்றையும் தனியாகவே செய்ய விரும்புகிறது. நாடுகளை முடித்து விடுவோம், பயங்கரவாதத்தை ஒழித்து விடுவோம் என்று நாம் சொன்னால், அதற்கு நீண்ட கால யுத்தம் ஒன்றை நடத்த வேண்டும். பல ஆண்டுகள் பல்வேறு உபகரணங்கள் அதற்குத் தேவை. அது மிகவும் சிக்கலான போராக இருக்கும். ஆனால், பெரும்பாலான அமெரிக்கர்கள் அதற்குத் தயாராக இல்லை என நான் நினைக்கிறேன். தெளிவான இலக்கு ஒன்றும் கண்ணுக்குப் புலப்படவில்லை.

ஒசாமா பின்லேடனின் அமைப்பு அவரிடமிருந்து கழன்று ஏறத்தாழ சுயேச்சையான அமைப்பு போல செயல்படுகிறது. இதில் நமக்குத் தெரியாத பலர் தோன்றலாம், மறுபடி எழலாம். அதற்காகத்தான் நன்கு தெளிவான, குறிப்பான, குறுகிய காலத்தில் முடிகிற, பொறுமையோடு கையாளப்படுகிற ஒரு திட்டம் தேவை என்கிறோம். அதற்கு, தீவிரவாதிகள் எங்கு இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிவது மட்டும் போதாது; தீவிரவாதத்தின் மூலகாரணங்களைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

**◇ அந்தக் காரணங்கள் எவை?**

இஸ்லாமிய உலகில் - எண்ணெய் உற்பத்தி செய்யும் உலகில், அரபு உலகில், மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்காவின் பொருளாதார நலன்களுக்கும், ராணுவ நலன்களுக்கும் முக்கியமான இந்தப் பகுதிகளில் - வெகுகாலமாக நடந்தேறிவரும் அமெரிக்கத் தலையீட்டின் இயங்கியல் வெளிப்பாடு அது.

இடையறாது நிகழ்ந்துவரும் இந்த பரஸ்பர செயல்பாடுகளில் - அமெரிக்கா மிக முக்கியமான பங்கினையாற்றி வருகிறது. அது, அமெரிக்கர்களில் பெரும்பாலோருக்குத் தெரியாது அல்லது; அவர்களிடமிருந்து அது மறைக்கப்பட்டுள்ளது.

**அந்த பயங்கரமான நிகழ்வுக்கு நியாயமான எதிர்வினை - உலக மக்களிடம் செல்வது, அய்.நா. அவைக்குச் செல்வதுதான். சர்வதேச சட்டவிதிகளை சீரமைத்திருக்க வேண்டும். ஆனால், அமெரிக்கா ஒரு போதும் அப்படி செய்ததில்லை. அதற்கான காலமும் கடந்து விட்டது.**




இந்த இஸ்லாமிய உலகில் அமெரிக்கா இரு வேறு விதங்களில் பார்க்கப்படுகிறது. அமெரிக்கா எவ்வளவு அசாதாரணமான நாடு என வியப்புடன் பார்க்கும் பார்வை ஒன்று. எனக்குத் தெரிந்து ஒவ்வொரு அராபியனும், முஸ்லிமும் அமெரிக்கா மீது ஆர்வத்தோடுதான் இருக்கிறான். பலர் தமது பிள்ளைகளை இங்கு படிப்பதற்காக அனுப்புகின்றனர். விடுமுறைகளைக் கழிக்க பலர் இங்கு வருகிறார்கள். அவர்களில் பலர், இங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர் அல்லது இங்கே வந்து பயிற்சி பெறுகிறார்கள்.

மற்றொரு பார்வை இருக்கிறது. அது அமெரிக்கா பற்றிய முறைமையான பார்வை. ராணுவங்களைக் கொண்ட அமெரிக்கா, ராணுவத் தலையீடுகளை செய்கிற அமெரிக்கா. 1953இல் ஈரானில் இருந்த மொஸ்சாதே தேசிய அரசைக் கவிழ்த்த அமெரிக்கா, ஈராக் மக்களுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்து நாசம் செய்யும் அமெரிக்கா, பாலஸ்தீனியர்களுக்கு எதிரரக இஸ்ரேலை ஆதரிக்கும் அமெரிக்கா - அது பற்றிய பார்வை அது.

அந்த நாடுகளில் நீங்கள் வாழ்வீர்களேயானால் - அங்குள்ள மக்களின் விருப்பங்களுக்கும், ஆசைகளுக்கும், இச்சைகளுக்கும், எதிராக விடாப்பிடியாக அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகள் அமைந்திருப்பதை உணர முடியும்.

அமெரிக்கா தனது கொள்கைகளாகக் கூறிக்கொள்கிற சனநாயகம், சுய நிர்ணய உரிமை, பேச்சுரிமை, கூடுவதற்கான உரிமை, சர்வதேச சட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அதன் நடவடிக்கைகள் இல்லை எனவும், அதன் சுயநலத்தின் அடிப்படையில்தான் அமெரிக்கா செயல்படுகிறது எனவும் அரபு மக்கள் எண்ணுகின்றனர்.

காசாவையும் மேற்குக் கரைப் பகுதியையும் கடந்த முப்பத்து நான்கு ஆண்டுகளாக இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பதை எந்த வித்தத்திலும் நியாயப்படுத்த முடியாது. பாலஸ்தீனப் பிரதேசங்களில், இஸ்ரேல் ஏற்படுத்தியுள்ள சுமார் நூற்று நாற்பது குடியேற்றப் பகுதிகளையும், அங்கு ஏறத்தாழ நான்கு லட்சம் இஸ்ரேலியர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளதையும் எதைக் கொண்டும் நியாயப்படுத்திவிட முடியாது.

இந்தக் காரியங்களெல்லாம் அமெரிக்காவின் பண உதவியோடும் ஆதரவோடும்தான் செயல்படுத்தப்பட்டன. சர்வதேச சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கிற



படிப்பகம்

www.padippakam.com

அய்.நா. சபையின் தீர்மானங்களை மதித்து நடக்கிற செயல்களாக இவற்றை எப்படிச் சொல்ல முடியும்? இவற்றின் விளைவு, அமெரிக்கா குறித்த கிறுக்குத்தனமான ஒரு சித்தரிப்பு.

உண்மையில் மிகவும் துயரமான ஒரு பகுதிக்கு இப்போது நாம் வந்து சேர்ந்திருக்கிறோம். அரபு நாடுகளின் ஆட்சியாளர்கள், அடிப்படையில் மக்கள் ஆதரவு இல்லாதவர்கள். அந்நாட்டு மக்களின் விருப்பங்களுக்கு எதிராக - அந்த ஆட்சியாளர்களை அமெரிக்கா ஆதரித்து வருகிறது.

வன்முறையும், அரசியலும் கலந்த, மக்கள் ஆதரவில்லாத இந்தச் சூழ்நிலையில் மக்களைக் கவர்ந்துள்ள தலைவர்களுக்கு குறிப்பாக மதத்தின் பெயரால் பேசுகிறவர்களுக்கு - அதுவும் இங்கே இஸ்லாமின் பெயரால் பேசுபவர்களுக்கு, அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போர் பற்றியும், ஏதோ ஒரு வகையில் அமெரிக்காவை வீழ்த்த வேண்டும் என்பது பற்றியும் பேசுவது எளிதாகி விட்டது.

வேடிக்கை என்னவென்றால், அப்படிப் பேசுகிற பலர் - ஒசாமா பின் லேடன்,



**பாலஸ்தீனப் பிரதேசங்களில் இஸ்ரேல் ஏற்படுத்தியுள்ள சுமார் நூற்று நாற்பது குடியேற்றப் பகுதிகளையும், அங்கு ஏறத்தாழ நான்கு லட்சம் இஸ்ரேலியர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளதையும் - எதைக் கொண்டும் நியாயப்படுத்திவிட முடியாது.**

முஜாகிதீன்கள் போன்றவர்களெல்லாம் - எண்பதுகளின் துவக்கத்தில் ஆப்கானிலிருந்து சோவியத் யூனியனை வெளியேற்றும் பொருட்டு அமெரிக்காவில் ஊட்டி வளர்க்கப்பட்டவர்கள்தான். கடவுளற்ற கம்யூனிசத்துக்கு எதிராக இஸ்லாமை மோத வைப்பது - சோவியத் யூனியனுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் என கருதப்பட்டது. அது நடக்கவும் செய்தது. 1985இல் முஜாகிதீன்களின் குழு ஒன்று வாஷிங்டனுக்கு வந்தபோது அவர்களை 'சுதந்திரப் போராளிகள்' என அப்போது அதிபராயிருந்த ரீகன் பாராட்டி வாழ்த்தினார்.

அவர்கள் முறையான அர்த்தத்தில் இமாம்களோ, ஷேக்குகளோ அல்ல. அவர்கள் இஸ்லாத்துக்காகப் போராடும் வீரர்களாக தங்களைத் தாங்களே அறிவித்துக் கொண்டவர்கள். ஒசாமா பின்லேடன், சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர். அவர் தன்னை ஒரு தேசபக்தனாக உணர்வதற்கான காரணம், அங்கே அமெரிக்க படைகள் இருப்பதுதான்.

சவூதி அரேபியா ஒரு புனிதமான தேசம். ஏனென்றால், அது இறைதூதர் முகமதுவின் தேசம். வெற்றிப் பெருமிதமும் கூட ஒரு காரணம். நாம் சோவியத் யூனியனை தோற்கடித்தோம், அமெரிக்காவையும் தோற்கடிக்க முடியும் என்கிற எண்ணம். இத்தகைய மூர்க்கத்தனத்திலிருந்து சீக்குப் பிடித்த மதவுணர்விலிருந்து மற்றவர்களைத் துன்புறுத்தும், மற்றவர்களுக்குத் தீங்கிழைக்கும் வெறி கிளம்புகிறது.

அப்பாவிகளைப் பற்றி, எதிலும் சம்பந்தப்படாதவர்களைப் பற்றி ஒருவித மரியாதையுமற்ற வெறி - அதுதான் நியூயார்க்கில் நடந்தது. இப்போது, இப்படி அதைப் புரிந்து கொள்வது என்பது அதை மன்னித்து விடுவதாகாது. என்னை அச்சுறுத்துகிற விஷயம் என்னவென்றால், நாம் இப்போது ஒரு கால கட்டத்துக்குள் நுழைந்திருக்கிறோம், இப்படியான விஷயங்களை வரலாற்றுரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எந்தவித அனுதாபமும் இல்லாமல் அணுக வேண்டும் என்று கூறினால், உங்களை தேசபக்தியில்லாதவராகக் கருதுகிற கால கட்டம் இது. நீங்கள் விலக்கிவைக்கப்படுவீர்கள். இது மிகவும் ஆபத்தானது. நாம் வாழுகிற உலகை சரியாகப் புரிந்து கொள்வதும், நாமும் ஒரு பகுதியாக இருக்கிற அதே சமயம் - நம்மால் உருவாக்கப்படுகிற வரலாற்றை விளங்கிக் கொள்வதும் நம்முடைய கடமையாகும்.

**◇ "அநாகரீகமானவர்கள் எல்லோரையும் அழித்து விடுங்கள்" என கூறும்போது, சில அரசியல்வாதிகள் 'ஹார்ட் ஆப் டார்க்னஸ்' நாவலில் வரும் 'கர்ட்ஸ்' என்ற பாத்திரத்தை நினைவுபடுத்துகிறார்களில்லையா?**

ஆரம்பத்தில் சில நாட்கள் வரை ஒரே விதமான சித்தரிப்புதான் முன்வைக்கப்பட்டது. ஒரேவிதமான விமர்சனங்கள் திரும்பத் திரும்ப செய்யப்பட்டன. மாறுபட்ட கருத்துகளை, பார்வைகளை, வியாக்யானங்களை முன் வைக்க சொற்பமான இடமே தரப்பட்டது. ''பயங்கரவாதம்'' என்ற சொல்லையே எடுத்துக் கொள்வோம், அது இப்போது அமெரிக்க எதிர்ப்பு என்பதன் மறு பெயராகி விட்டது. அதுவே, அமெரிக்கா பற்றிய விமர்சனத்தின் மறு பெயராகி விட்டது. இத்துடன் கூடவே தேசப்பற்று இல்லாமலிருப்பதன் மறு பெயராகவும் அது ஆகிவிட்டது. அது, ஏற்கவே முடியாத ஒரு ஒப்பீடு.

பயங்கரவாதம் என்பது பற்றிய விளக்கம் மிகவும் துல்லியமாக இருக்க வேண்டும். அப்போதுதான் இஸ்ரேலின் ராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் பாலஸ்தீனியர்களின் செயலை, உலக வர்த்தக மய்யத்தில் நடந்த தாக்குதலிலிருந்து நாம் வேறுபடுத்திப் பார்க்க முடியும்.

**◇ நீங்கள் சுட்டிக்காட்ட விரும்பும் வேறுபாடு என்ன?**

காசா பகுதியில் மிகவும் ஒடுக்குமுறையான சூழலில் வாழும் இளைஞன் ஒருவனை எடுத்துக் கொள்ளுங்கள். அந்தச் சூழல் இஸ்ரேலால் திணிக்கப்பட்டது. அவன் டைனமைட்டை உடம்பைச் சுற்றி கட்டிக்கொண்டு இஸ்ரேலியர்களின் கும்பல் மீது பாய்கிறான். நான் அதை ஆதரிக்கவும் மாட்டேன், பாராட்டவும் மாட்டேன். ஆனால், அதைப் புரிந்து கொள்ள முடியும்.

தனது சக மனிதர்கள், பாலஸ்தீனிய மக்கள், தனது பெற்றோர்கள், சகோதரிகள், சகோதரர்கள் படுகாயப்படுத்தப்படுவதை, கொல்லப்படுவதை, வாழ்விலிருந்து தூக்கியெறியப்பட்டு அவஸ்தைக்குள்ளாக்கப்படுவதைப் பார்க்கிற அவநம்பிக்கை கொண்ட ஒரு மனித ஜீவியின் விருப்பம் அது. அவன் திருப்பித் தாக்கும் விதமாக எதையாவது செய்ய நினைக்கிறான்.



படிப்பகம்

www.padippakam.com

அநீதியாக நிர்பந்திக்கப்பட்ட நிலைமைகளிலிருந்து விடுபட, வேறுவழியின்றி தவிக்கும் ஒருவனின் செயல்பாடாக அதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். அதை நான் ஒத்துக் கொள்ளவில்லை, ஆனால், அதை நான் புரிந்து கொள்கிறேன். உலக வர்த்தக மய்யத்தை, 'பென்டகனை' தாக்கியவர்கள் இதிலிருந்து வேறுபட்டவர்கள்.

ஏனென்றால், அவர்கள் ஏழை அகதிகள் அல்ல, வேறுவழி இல்லாதவர்களும் அல்ல. அவர்களெல்லாம் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுமளவுக்குப் படித்தவர்கள், விமானப் பள்ளியில் சேருகிற அளவுக்கு அமெரிக்காவுக்கு வந்து ப்ளோரிடாவில் வாழ்கிற அளவுக்கு வசதி படைத்தவர்கள்.

**◇ உங்களுடைய 'கவரிங் இஸ்லாம்' (Covering Islam) என்ற நூலின் சமீபத்திய பதிப்புக்கு நீங்கள் எழுதியுள்ள முன்னுரையில், இஸ்லாத்தைப் பற்றி மோசமான விதத்தில் பொதுப்படையாகப் பேசுவதுதான். - மேற்கத்திய உலகில் பிறநாட்டு கலாச்சாரங்களை அணுகுவதற்கு ஏற்கப்பட்ட கடைசி வழிமுறையாக உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஏன் அப்படி?**

இஸ்லாமை ஒரு அச்சுறுத்தலாக - வெறிபிடித்த, வன்முறையான, பேராசை கொண்ட, பகுத்தறிவற்ற - புறம்பான ஒன்றாகப் பார்க்கும் பார்வை, காலனிய காலத்தில் ஆரம்பித்தது. அந்த அணுகுமுறையைத்தான் நான் 'ஓரியன்டலிசம்' எனக்குறிப்பிடுகிறேன். தம்மைத் தவிர்த்த மற்றவர்களைப் பற்றி ஆய்வு செய்வதென்பது, மேற்கத்திய குறிப்பாக அய்ரோப்பிய நாடுகளைப் பொருத்தவரை - இஸ்லாமிய உலகை மேலாதிக்கம் செய்தல், கட்டுப்படுத்துதல் என்பதோடு பெருமளவுக்குத் தொடர்பு கொண்டுள்ளது.

ஏன் அப்படிப் பார்க்கப்பட்டதென்றால், அது மிக மிக ஆழமாக மத ரீதியான அடிப்படைகளைக் கொண்டிருந்தது. கிறித்துவத்துக்கு ஒரு போட்டியாக இஸ்லாமைக் காண்கிற பார்வை அது. இங்கு அமெரிக்காவில் பல்கலைக் கழகங்களில், பள்ளிகளில் வைக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்களைப் பாருங்கள். இஸ்லாமிய உலகோடு இந்த நாட்டுக்கு இருக்கும் நீண்ட தொரு அறிமுகத்தை கணக்கில் கொண்டால், இந்த பாடத்திட்டங்கள் இஸ்லாமைப்பற்றிய தகவல்களைக் குறைந்த அளவில் கூட தெரிவிக்கக் கூடியவையாக இல்லை என்பதைப் பார்க்கலாம்.

வெகுசன ஊடகங்களைப் பாருங்கள், அரபியர்களைப் பற்றிய ஸ்டீரியோ டைப்பான சித்தரிப்புகள். 'ஷேக்' கதையில் வந்த ருடோல்ப் வாலென்டினோ பாத்திரம் அப்படியே உருமாறி, நாடுகளின் எல்லைகளைக் கடந்த ஒரு மிகப்பெரும் வில்லனாக டி.வி. தொடர்களில், திரைப்படங்களில் சித்தரிக்கப்படுவதைப் பாருங்கள்.

இஸ்லாத்தைப் பற்றி பயங்கரமான பொதுப்படையான சித்தரிப்புகளை உருவாக்கிக் கொள்வது மிகவும் எளிது. அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது அதிகமாக ஒன்றுமில்லை. 'திநியூ ஏஜ்' பத்திரிகையின் ஏதாவதொரு இதழை வாசித்தால் போதும். இஸ்லாம் எவ்வளவு கொடூரமானது, அரபியர்களின் கலாச்சாரம் எத்தனை பிற்போக்கானது, இன்னும் என்னென்ன உண்டோ அவ்வளவு கருத்துகளும் உங்களுக்கு உண்டாகிவிடும். இஸ்லாமைத் தவிர, அமெரிக்காவில் வேறெந்த மதத்தைப் பற்றியும் இவ்வளவு மோசமான சித்தரிப்புகள் வருவது இல்லை.

**◇ 'லண்டன் அப்சர்வர்' பத்திரிகையில் நீங்கள் சமீபத்தில் எழுதிய கட்டுரையொன்றில், போரில் ஈடுபடுவதற்கான அமெரிக்காவின் வெறியை மோபி டிக்கை விரட்டிச்சென்ற கேப்டன் அஹாப் பாத்திரத்துடன் ஒப்பிட்டிருந்தீர்கள். உங்கள் மனதில் ஏன் அப்படித் தோன்றியது?**

கேப்டன் அஹாப் என்ற பாத்திரம், தனது காலை கடித்துக்குதறி தனக்கு தீங்கு விளைவித்த வெள்ளை திமிங்கிலத்தை வேட்டையாடத் துரத்தும் ஒரு பாத்திரம். உலகின் எல்லைவரை அந்தத் திமிங்கிலத்தை அவன் விரட்டிச் செல்கிறான். எது நடப்பது பற்றியும் கவலைப்படாமல் செல்கிறான்.

அந்த நாவலின் கடைசிக் காட்சியில், கேப்டன் அஹாப் கடலுக்குள் அந்த வெள்ளைத் திமிங்கிலத்தோடு - தான் கொண்டு வந்த கயிற்றிலேயே சேர்த்து சுற்றிக் கொண்டு மீள முடியாமல் சிக்கிக் கொள்கிறான். அது ஏறத்தாழ ஒரு தற்கொலை போல ஆகிவிடுகிறது. இப்போது, இந்தப் பிரச்சனையின் ஆரம்ப கட்டங்களில் ஜார்ஜ் புஷ் பேசியவற்றைப் பாருங்கள்.

''உயிரோடோ அல்லது பிணமாகவோ பிடிக்க வேண்டும்.'' 'புனிதப் போர்' மற்றும் இன்னபிற வார்த்தைகளைப் பாருங்கள். அவை சர்வதேச விதிகளின் அடிப்படையில் குற்றவாளிகளை நீதியின் முன் கொண்டு வந்து நிறுத்தும் நோக்கம் கொண்டவையாக இல்லை. மாறாக, வன்முறையானதாக அட்டூழியம் செய்யும் நோக்கம் கொண்டதாக - உலகின் முடிவை சொல்வதாக அவை இருந்தன. அது, விஷயத்தை மிக மிக மோசமாக சீரழித்து விட்டது.

ஏனென்றால், எல்லாவற்றுக்கும் எப்போதும் பின்விளைவுகள் உண்டு. ஓசாமா பின்லேடனை - மோபிடிக்காக, உலகின் அத்தனை கேடுகளுக்குமான குறியீடாகப் பார்த்து ஒருவித அமானுஷ்யத்தன்மையைக் கொடுப்பதென்பது, அவரது ஆட்டத்துக்குள் நாம் சிக்கிக் கொள்வதாகவே இருக்கும்.

அந்த மனிதனை நாம் மதச் சார்பற்றவராக மாற்றியாக வேண்டும். எதார்த்தம் என்கிற தளத்துக்குள் - அவரை இறக்கியாக வேண்டும். ஒரு குற்றவாளியாக, மதவெறி பிடித்தவராக, சட்ட விரோதமாக அப்பாவிகள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடுபவராக அவரைக் கூறுங்கள். அதற்குண்டான தண்டனையை அவருக்கு வழங்குங்கள், அதைவிட்டுவிட்டு, உலகத்தை அவருடைய தளத்துக்குக் கீழிறக்காதீர்கள், அது நம்மையும் அங்கு கொண்டுபோய் நிறுத்தி விடும்.

***நாம் வாழுகிற உலகை சரியாகப் புரிந்து கொள்வதும், நாமும் ஒரு பகுதியாக இருக்கிற அதே சமயம் - நம்மால் உருவாக்கப்படுகிற வரலாற்றை விளங்கிக் கொள்வதும் நம்முடைய கடமையாகும்.***





படிப்பகம்

www.padippakam.com

5

## மால்கம் எக்ஸ்

# ஒரு போராளியின் வரலாறு

■ ரவிக்குமார்



மால்கமின் பெற்றோர்

ஷூ பாலிஷ் போடுவது ஒரு கலையா? நிச்சயமாக! சிறுநீர் கழித்துவிட்டு கைகளைக் கழுவுகிறவனிடம் துண்டை எடுத்து நீட்டுவதில்கூட கலையம்சத்தைக் கலக்க முடியுமா? நிச்சயமாக முடியும்... கேவலமான வேலைகள். அதையும் சந்தோஷமாக செய்யும் பாவனை... அதுதான் எஜமானர்களுக்குப் பிடிக்கும். மால்கம் அப்படித்தான் ஆரம்பித்தான். அவன் எதை செய்தாலும் அதில் ஒரு 'ஸ்டைல்' இருந்தது. அது எல்லோருக்கும் பிடித்துப் போனது.

ரோஸ்லேண்ட் ஸ்டேட் பால்ரூமில்தான் மால்கமுக்கு வேலை. அது ஒரு பெரிய நடன அரங்கு. பெரிய பெரிய இசைக் குழுக்களெல்லாம் அங்குவந்து வாசிப்பார்கள். கதவுகளின் இடுக்குகள் வழியே கசிந்துவரும் இசை, வெளியே மால்கமை எட்டும். அவனது பாலிஷ் போடும் வேலைக்கு அது பின்னணி இசைபோல இருக்கும். அந்த இசையின் லயத்தோடு மால்கமின் கைகளின் இயக்கம் ஒத்திசைந்து - எல்லாமே ஒரு நடனம் போல் மாறிவிடும்.

மால்கம் எல்லாவற்றையும் கற்றுக் கொண்டு விட்டான். எப்படி பாலிஷ் போடுவது, இசைக்கு ஏற்றபடி எப்படி ஆடுவது, வாடிக்கையாளரைக் கவரும் வழிகள் அத்துப்படியாகி விட்டன. பாத்ரூம் கண்ணாடியில் பார்த்துக் கொண்டு நிற்கிறவனின் கோட்டைத் துடைத்து விடுவது.. அவன் கொடுக்கும் ''டிப்சை'' புன்னகை விரிய தலைதாழ்த்திப் பெற்றுக் கொள்வது... எல்லாமே ஒரு நடனம் போல இருக்க வேண்டும். அதில் கிடைக்கும் பணம் ராக்ஸ்பரியில் விருப்பம்போல செலவிட வசதியாக இருந்தது மால்கமுக்கு.

மால்கமின் சகோதரி எல்லா, ராக்ஸ்பரியின் மேல்பகுதியில் வசித்தாள். அந்தப் பகுதி கறுப்பின மக்கள் வசிக்கும் பகுதி. அவளுக்கு மால்கமின் வாழ்க்கை முறை உவப்பாயில்லை. ஆனால், மால்கமுக்கோ ராக்ஸ்பரியின் தெருக்கள் உற்சாகமளித்தன. வெள்ளையர்களின் உலகுக்கு முற்றிலும் மாறான உலகம் அது. பரஸ்பரம் மரியாதையும், தமக்கென்று தனியான மதிப்பீடுகளையும் கொண்டிருந்தனர் கறுப்பின மக்கள். தெருக்களில் இலகுவாக சிரித்தபடி செல்லும் இளைஞர்கள்... வெகு சுலபமாக தமக்குள் நட்பை ஏற்படுத்திக் கொள்ளும் இளைஞர்கள்... அவர்களை சட்டென்று ஒன்றுபடுத்தும் காரணியாக ''ஸ்டைல்''தான் இருந்தது. அவர்கள் உடுத்துவது, நடப்பது, பழகுவது எல்லாமே ஒருவிதத் தனித்துவமான ஸ்டைலோடு இருக்கும்.

மால்கம், வெகுசீக்கிரமே ராக்ஸ்பரியின் இளைஞர்களில் ஒருவனாகி விட்டான். அங்கு புழங்கிய கொச்சை மொழியின் நுணுக்கங்களில் தேர்ந்து விட்டான். ராக்ஸ்பரியின் வாழ்க்கை முறைக்கும் மற்ற பகுதிகளில் உள்ள வாழ்க்கை முறைக்கும் - பெரிய வேறுபாடொன்று இருப்பதை மால்கம் கண்டான். மற்ற பகுதிகளில் வெள்ளையர்களின் கருணைதான் முக்கியம்; உங்களுக்கு என்ன தெரியும் என்பது அங்கு முக்கியமல்ல. ஆனால், ராக்ஸ்பரியில் உங்களது திறமையைக் கொண்டுதான் நீங்கள் மதிப்பிடப்படுவீர்கள்.

அமெரிக்க சமூகம் கறுப்பர்களை மட்டும் விலக்கவில்லை, வெள்ளையர்களிலும் சிலர் அப்படி விலக்கி வைக்கப்பட்டனர். அவர்களும் ராக்ஸ்பரியின் மது அருந்துமிடங்களுக்கு வருவார்கள். மால்கமுக்கு ஏராளமான பெண் நண்பர்கள். அதில் சோபியா என்றொரு வெள்ளையினப் பெண்ணும் இருந்தாள்.

1941 டிசம்பர். அமெரிக்கா இரண்டாம் உலகப் போரில் குதித்தது. அப்போது மால்கமுக்கு பதினாறு வயது. போர், அமெரிக்க பொருளாதாரத்தைத் தாக்கத் துவங்கியிருந்த நேரம். கறுப்பின மக்களுக்கு நிலையான வேலை கிடைப்பது அரிதாகிப் போனது. மால்கமுக்கு ரயில்வேயில் ஒரு வேலை கிடைத்தது. சமையலறையில் உதவியாளாக பாத்திரங்களைக் கழுவுவதுதான் அந்த உதவியாளரின் வேலை. அதுவே அப்போது பெரிய வேலைதான். 1942இன் முற்பகுதியில் மால்கமுக்கு வாய்ப்பு கிடைத்தது. நியூயார்க்குக்கு போகும் ரயிலில் பணி. முதல் முறையாக நீண்ட பயணம். இதனிடையில் ரயிலில் சான்ட்விச் விற்பவ

**வரலாற்றில் கறுப்பின மக்களின் பங்கை முழுவதுமாக இருட்டடிப்பு செய்து வெள்ளையர்கள் உருவாக்கிய தத்துவங்கள் எல்லாமே - மனித குலத்திற்கு எதிராக அவர்கள் செய்த மோசடிதான் என்பது மால்கமின் கருத்து.**



படிப்பகம்

www.padippakam.com

னாக பணி மாறியிருந்தது. அப்போது தான் வாஷிங்டனுக்குப் போகவும், ஹார் லெமைப் பார்க்கவும் மால்கமுக்கு வாய்ப்பு கிடைத்தது.

ஹார்லெமுக்குப் போவதை ஆப்ரிக் காவுக்கே போய்வந்ததுபோல கறுப்பர்கள் எண்ணினர். இது, கறுப்பர்கள் பெரும் பான்மையாக வாழ்கின்ற ஓரிடம். அவர் களுக்கு நிம்மதியாக மூச்சுவிட ஒரு வாய்ப்பு. எங்கு பார்த்தாலும் கறுப்பர் கள். போலிஸ்காரர்களாக, போஸ்ட் மேன்களாக எல்லா விதமான வேலைக ளிலும் கறுப்பர்கள். அமெரிக்காவில் வாழும் கறுப்பர்களுக்கு ஆப்ரிக்கா ஒரு வித ஆறுதலைத் தருகிறது என்று சொல் லப்படுவதுண்டு. அதன் பொருளை நியூ யார்க்கின் ஹார்லெம் பகுதியில் புரிந்து கொள்ள முடிந்தது.

மால்கம் நினைத்திருந்தால் தொடர்ந்து படித்திருக்க முடியும். ஆனால், அதனால் என்ன பயன்? கல்லூ ரியில் படித்துப் பட்டம் பெற்ற கறுப் பின இளைஞர்கள், தன்னைப்போல ரயிலில் பாத்திரம் கழுவுவதைப் பார்த்த பின் படிப்பைத் தொடராதது பற்றிய வருத்தம் மால்கமுக்குப் போய்விட்டது. மால்கமின் விருப்பம் முழுவதும் தானும் மற்றவர்களைப் போல மரியாதையோடு நடத்தப்பட வேண்டும் என்பதாகவே இருந்தது. ஹார்லெமுக்குப் போனபிறகு அத்தகைய மரியாதையைத் தான் பெற்று விட முடியும்; அதை கறுப்பின மக்க ளிடம் தான் பெறமுடியும் என்பதை மால்கம் உணர்ந்தான்.

இரண்டாம் உலகப் போரின்போது, அமெரிக்காவில் கறுப்பர்கள் நடத்தப் பட்ட விதம் - அந்த நாட்டின் நாகரீகம்

கறுப்பர்கள் தம் ''தாய்நாட்டை'' காக்க போரிட்ட போதிலும் இரண்டாம் தர குடிமக்களாகவே நடத்தப்பட்டனர். கல்லூரியில் படித்து, பட்டம் பெற்றிருந் தால்கூட, ஒரு கறுப்பன் நல்ல வேலை யில் சேரமுடியாது. ஏதாவதொரு கடை யில் குமாஸ்தாவாகத்தான் இருக்க முடி யும். அதுவும்கூட ஒரு கறுப்பனால் நடத் தப்படுகிற கடையாக இருக்கும்.



**சிறை நூலகத்தில், உலக மதங்கள் அனைத்தைப் பற்றியும் மால்கம் ஆழமாகப் படிக்கும்போதுதான், இஸ்லாம் என்ற மதத்தை நெருக்கமாக - விரிவாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அமெரிக்காவை கிலிகொள்ளச் செய்த அவரது அரசியல் இயக்கத் துக்கான விதை, அப்போதுதான் விதைக்கப்பட்டது.**

ஹார்லெமில் அனைத்து விதமான தரப்பினரும் இருந்தனர். நீதிபதிகள், டாக்டர்கள், எழுத்தாளர்கள்... அவர் களின் வருமானத்துக்கு அவர்கள் வேறு இடங்களில் வசிக்க முடியும். அதற்கான பணத்தையும் செலவழிக்க முடியும். ஆனால், வெள்ளையர்கள் வாழும் பகுதி களுக்குள் அவர்கள் குடியிருக்க அனும திக்கப்படவில்லை. அதனால் ஹார்லெ மின் மது அருந்தும் கூடங்களில் பிரபல மான நாவலாசிரியர்களும், கவிஞர்க ளும், அரசியல்வாதிகளும், நீதிபதிக ளும், குமாஸ்தாக்களும் அருகருகே அமர்ந்து பேசி மகிழ்வதை சாதாரணமா கப் பார்க்க முடியும்.

ஹார்லெமின் இரவு வாழ்க்கை பிர சித்தமானது. மால்கம், அங்கே ஒரு வேலையில் சேர்ந்தான். ஹார்லெமின் ரகசிய உலகம் எப்படிப்பட்டது என் பதை மால்கம் தெரிந்து கொள்ள ஆரம் பித்தான். அங்கு நடக்கும் பல்வேறுவித மான 'சட்ட விரோத' வேலைகளுக்கு புத்திசாலியான இளைஞர்கள் தேவைப் பட்டனர். மால்கம் அந்தத் தகுதியைக் கொண்டிருந்தான்.

எவ்வளவு கீழ்த்தரமானது என்பதை உணர்த்தும். அமெரிக்கா நடத்திய போர் ஒவ்வொன்றிலும் கறுப்பின மக்கள் கலந்து கொண்டு ''தாய் நாட்டுக்காக'' ரத்தம் சிந்தி யுள்ளனர். 1812இல் நடந்த போரில், போர்க் கப்பல்களில் சென்று சண்டை யிட்டனர். உள்நாட்டுப் போரிலும் தாய் நாட்டுக் கொடியைக் காக்க உயிர்விட் டுள்ளனர். முதலாம் உலகப் போரின் போது அய்ரோப்பிய நாடுகளுக்குச் சென்று போரிட்டு மடிந்திருக்கிறார்கள்.

இவ்வளவு இருந்தும் அமெரிக்க ராணுவத்தில், கறுப்பர்கள் பிரித்தே வைக்கப்பட்டிருந்தனர். முற்றிலும் கறுப்பர்களைக் கொண்ட படைப்பிரிவு களில் அதிலும் வெள்ளை இன அதிகாரி களின் கீழ்தான் கறுப்பர்கள் இருக்க முடி யும். அவர்கள் விமானப் படையில் சேர்க்கப்படவில்லை. மிகக் குறைந்த எண்ணிக்கையிலான கறுப்பர்கள்தான் ராணுவத்தில் அனுமதிக்கப்பட்டனர். இரண்டாம் உலகப் போரின்போது படைகளில் சேர்க்கப்பட்ட கறுப்பர்கள், பெரும்பாலும் எடுபிடி வேலைகளில் தான் ஈடுபடுத்தப் பட்டனர்.

இந்தக் கால கட்டத்தில், ஹார்லெ முக்கு வந்து இரண்டு ஆண்டுகளைக் கழித்து விட்டான் மால்கம். மாறி மாறி பல வேலைகளைப் பார்த்துக் கொண்டி ருந்த மால்கம், கூடவே போதைப் பொருள் கடத்துவதில், விற்பதில், சூதாட்டங்களில் ஈடுபட்டான். இத்த கைய வேலைகளை ஹார்லெம் சமூகம் குற்றங்களாகக் கருதுவதில்லை. மற்ற வேலைபோல அதுவும் ஒரு வேலை. அவ்வளவுதான்.

சட்டப்படி இதெல்லாம் குற்றங்கள் என மால்கம் அறிந்தே இருந்தான். இந்த வாழ்க்கை அவனுக்கு ஹார்லெ மின் பல பகுதிகளை பரிச்சயம் செய்து வைத்தது. தெருக்கள், மதுபான விடுதிகள்,



படிப்பகம்

www.padippakam.com

போதைப் பொருள் விற்கும் ரகசிய இடங்கள், விபச்சார விடுதிகள் எல்லாம் அவனுக்கு அத்துப்படியானது.

சிறுவயதில் தனது குடும்பம் சிறுகச் சிறுக சிதைந்து சின்னாபின்னமானபோது, அதை ஒரு பார்வையாளன் போல பார்த்துப் பழகியிருந்த மால்கமுக்கு இந்த ரகசிய உலகையும் அப்படி கவனிக்க முடிந்தது. அந்த உலகின் மனிதர்களுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்பதை அவன் எளிதாகப் புரிந்து கொண்டான்.

> தான் ஒரு புத்திசாலி என்பதை மட்டுமே மனதில் கொண்டு அதையே தனது தனித்துவமாக மாற்றினான் மால்கம். எவ்வளவு முடியுமோ அவ்வளவு படித்தான்.

1945இல் இரண்டாம் உலகப் போர் முடிந்தபோது, கறுப்பின மக்கள் பெரிதும் தாக்கப்பட்டனர். போருக்குச் சென்றிருந்த வெள்ளையர்கள் வீடு திரும்பினர். போருக்கான பொருட்களைத் தயாரிக்கும் தொழில்கள் வீழ்ச்சியுற்றன. அவற்றில் வேலைபார்த்த கறுப்பர்கள் வேலையிழந்தனர். இந்த சமயத்தில், மால்கமின் சிநேகிதியான சோபியா ஒரு யோசனை கூறினாள். சோபியா, அவளது சகோதரி, இன்னொரு பெண், மால்கம் மற்றுமொரு ஆண் ஆக அய்ந்து பேரும் சேர்ந்து வீடுகளைக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டனர்.

வீட்டைப்பற்றிய தகவல்களை அந்த மூன்று வெள்ளைக்காரப் பெண்களும் சேகரித்துத் தர, கொள்ளை வெற்றிகரமாக நடந்து கொண்டிருந்தது. அப்படி கொள்ளையடித்த பொருட்களில் கடிகாரம் ஒன்றை பழுது பார்ப்பதற்காக கடை ஒன்றுக்குச் சென்றபோது மால்கம் மாட்டிக் கொண்டான்.

சோபியா உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டனர். முதலில் குற்றத்தை மறுத்த மால்கம், அதை ஒப்புக்கொண்டால் தண்டனை குறைவு என அறிந்து குற்றத்தை ஒப்புக் கொண்டான். அந்த வழக்கின் விசாரணையின் போது, மால்கம் மிரட்டியதற்கு பயந்தே கொள்ளைக்கு ஒத்துழைத்ததாக அந்த வெள்ளைக்காரப் பெண்கள் வாக்குமூலம் அளித்தனர். அவர்களை விடுவித்த நீதிபதி, மால்கமுக்கு பத்தாண்டு கடுங்காவல் தண்டனை விதித்தார்.

மால்கம் என்ற பெயர் அழிக்கப்பட்டு 22843 என்ற எண் அவனுக்கு சூட்டப்பட்டது. சார்லஸ் டவுனில் இருந்த பழமையான சிறையில் மால்கம் அடைக்கப்பட்டான்.

அந்தச் சிறையின் அறைக்குள் தண்ணீர் கிடையாது. சிறைவாசிக்கு ஒரு வாளி தருவார்கள். சிறுநீர் கழிப்பது, மலம் கழிப்பது எல்லாம் அதற்குள்தான். அதற்கு அருகில்தான் படுத்துக் கொள்ள வேண்டும். அங்கேயேதான் சாப்பிடவும் வேண்டும். அந்த மோசமான நிலையிலும் மால்கமுக்கு ஒரு நல்லவாய்ப்பு இருந்தது. அவன் தனது வாழ்க்கை குறித்து சிந்திக்க நிறைய நேரம் கிடைத்தது.

சிறை - மனிதனின் தனித்துவங்களை அழித்து எல்லோரையும் சிறைவாசிகள் என்ற ஒரே வகையினத்துக்குள் கொண்டுவந்து விடுகிறது. இருபது வயதே நிரம்பிய மால்கம், அங்கே கொலைகாரர்களோடு, திருடர்களோடு அடைக்கப்பட்டிருந்தான். மற்றவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் மால்கமுக்கு. தான் ஒரு புத்திசாலி என்பதை மட்டுமே மனதில் கொண்டு அதையே தனது தனித்துவமாக மாற்றினான் மால்கம். எவ்வளவு முடியுமோ அவ்வளவு படித்தான்.

அப்போது மசாசூட் சிறையில் ஒரு சீர்திருத்த சட்டத்தை அறிமுகப்படுத்தியிருந்தார்கள். அதற்கு மால்கம் விண்ணப்பித்தான். பலமுறை முயன்று கடைசியில் அவனது விண்ணப்பம் ஏற்கப்பட்டது. அங்கு போனதில் மால்கமுக்குக் கிடைத்த மற்ற வசதிகளை விடவும் அங்கிருந்த மிகப்பெரிய நூலகமே பெரும் வசதியாக இருந்தது. அங்குதான் அவன் பலவற்றைப் படித்தான்.



மால்கமின் கைரேகைப் பதிவுகள் - 1940களில் டெட்ராய்ட் போலிஸ் நிலையத்தில் இருந்து எடுக்கப்பட்டது

கான்ட், நீட்ஷே, ஸ்பினோசா, ஹெரடோடஸ், ஷோபன்ஹேயர்... இப்படிப் பல்வேறு தத்துவ அறிஞர்களின் நூல்களைக் கற்றுத் தேர்ந்தான். அவற்றை விமர்சனக் கண்ணோட்டத்தோடு பார்க்கப் பழகினான்.

"ஷோபன்ஹேயர், கான்ட், நீட்ஷே ஆகிய மூன்றுபேர் எழுதிய நூல்களையும் நான் படித்தேன். அவர்களது கோட்பாடுகள்தான் பாசிச, நாஜி தத்துவத்துக்கு அடித்தளமாக இருந்தது என நான் அறிந்தேன். அவர்களை நான் மதிக்கவில்லை. ஏனென்றால், அவர்களது காலத்தின் பெரும்பகுதியை தேவையற்ற விஷயங்களை விவாதிப்பதிலேயே கழித்திருக்கிறார்கள். ஒன்றுமில்லாத விஷயங்களைத் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருக்கும் நீக்ரோ 'அறிவு ஜீவிகளை' அவர்கள் நினைவு படுத்தினார்கள்."

"ஸ்பினோசா கொஞ்சம் என்னை ஈர்த்திருக்கிறார். அவர் ஒரு ஸ்பானிய கறுப்பு யூதர். அவரது தத்துவத்தின் காரணமாக ஸ்பானிய யூதர்கள் அவரை சமூக விலக்கம் செய்து விட்டனர். அவருக்கு ஏராளமான மிரட்டல்கள். அவர் குடும்பத்தோடு தப்பித்து ஹாலந்துக்குச் செல்ல வேண்டியதாயிற்று" என மால்கம் தனது சுயசரிதையில் குறிப்பிடுகிறார்.

வரலாற்றில் கறுப்பின மக்களின் பங்கை முழுவதுமாக இருட்டடிப்பு செய்து வெள்ளையர்கள் உருவாக்கிய தத்துவங்கள் எல்லாமே - மனித குலத்திற்கு எதிராக அவர்கள் செய்த மோசடிதான் என்பது மால்கமின் கருத்து. இந்தக் கருத்தை அவர் போகிற போக்கில் சொல்லிவிடவில்லை. இதற்குப் பின்னால் ஆழமான அவரது படிப்பு இருந்தது. சிறை நூலகத்தில் உலக மதங்கள் அனைத்தைப் பற்றியும் ஆழமாகப் படித்தார் மால்கம்.

அப்படிப் படிக்கும்போதுதான் இஸ்லாம் என்ற மதத்தை அவர் நெருக்கமாக விரிவாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அமெரிக்காவை கிலி கொள்ளச் செய்த அவரது அரசியல் இயக்கத்துக்கான விதை அப்போதுதான் விதைக்கப்பட்டது. •

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com



# இந்து மதத்தின் புதிர்கள்

■ சங்கமித்திரை

இந்து மதத்தின் புதிர்கள்' என்ற தமிழ் நூல் தொகுதி எட்டு, இந்திய வரலாறு என்று சொல்லப்படும் - 'இந்து வரலாற்றையே' உலுக்கிய ஒரு தொகுதியாகும். இது, ஆங்கிலத்தில் 4ஆவது தொகுதியாக வெளிவந்தது. அண்ணல் அம்பேத்கரை சட்டமேதை, சீர்திருத்தவாதி என்ற அளவில் மட்டுமே ஏற்றுக் கொண்டிருந்த இந்து சமூகம், இந்நூல் வெளிவந்த பிறகு - 'இந்து என்னும் கொடுஞ்சிறையில் இருந்து விடுதலை பெறத் துடிக்கும் ஒரு புரட்சிக்காரராக' அவரை அணுகியது. இந்நூல் வெளிவந்த பிறகுதான், இந்திய அளவில் இந்து மதம் - அதன் கொடுங்கோன்மை போன்றவற்றை சிந்தனை உலகம் ஆராய்ந்தது.

"சரஸ்வதியை கல்விக் கடவுள் என்று வேதம் கூறுகிறது. இவர், படைப்புக் கடவுளான பிரம்மனின் மகள். பிரம்மனுக்கும் சரஸ்வதிக்கும் பிறந்த மகன்தான் நாரதன். தந்தைக்கும் மகளுக்கும் பிறந்தவன்தான் நாரதன். இந்த அருவறுப்பான கதையை - எப்படி மானமுள்ள மனிதனால் ஏற்றுக் கொள்ள முடியும். அதனால்தான், வேதத்தை - பெண்களும், பார்ப்பனரல்லாதவரும் படித்தால் - காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியிருக்கிறார்கள்."

சிந்திப்பது சனாதன தர்மத்திற்கு எதிரானது என்பதால், அம்பேத்கரின் இந்நூலைப் பல இடங்களில் இந்து வெறியர்கள் எரித்தனர். நாலந்தா, தட்சசீலம், 'தீகநிகாயம்' போன்ற அறிவுசார் காப்பியங்கள் தீக்கிரையாக்கப்பட்டதுபோல இந்நூலும் எரிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு மய்ய அரசு, அண்ணலின் நூல்களை தேசிய மயமாக்கியபோது கூட, குறிப்பாக இந்தத் தொகுதி அச்சிடப்பட்டும் விற்பனைக்குக் கிடைக்கவில்லை. மக்களின் எழுச்சியால், சமூக நீதி சிந்தனையாளர்களின் இடையறாத முயற்சியால் இந்நூல் விற்பனைக்கு வந்துள்ளது. இந்தத் தொகுதியின் முதற் கட்டுரை - 'இந்து என்று யாரை வரையறுப்பது? 'இந்து என்பதற்கான அளவுகோல் என்ன?' என்ற வினாக்களோடு தொடங்குகின்றது.

வெறுமனே கேள்வியை மட்டும் முன்வைக்காமல் அவற்றுக்கான விடையையும் தன்னுடைய நூலில் பதிவு செய்துள்ளார் அம்பேத்கர். இந்த விடைதான், ஒட்டுமொத்த ஆன்மீகவாதிகளுக்குப் பதில் தர இயலாததாகத் திகழ்கிறது. தம்மால் சந்திக்க முடியாததை வஞ்சகத்தால் அழிப்பது அல்லது புறக்கணிப்பது, இந்த மநுவாதிகளின் போக்கு. இந்த வகையில்தான் அம்பேத்கரின் இந்தத் தொகுதி மட்டும் மிகமிகத் தாமதமாக வெளியிடப்பட்டது.



"பார்ப்பனன் பிரம்மனின் முகத்தில் இருந்து பிறந்தவன் என்று வேதம் சொல்கிறது. இன்று எந்த ஒரு பார்ப்பனனும் யாருடைய முகத்திலிருந்தும் பிறக்கவில்லை. அப்படியென்றால், இவனை நாம் யாரென்று அழைப்பது?

ஒன்று இவனுடைய இதிகாசம் பொய்யாக இருக்க வேண்டும் அல்லது இவன் தன் சுய தேவைகளுக்காகப் பொய்சொல்லி இருக்க வேண்டும்."

வேதத்திற்கு விளக்கம் சொல்வதற்கென்றே தன்னுடைய பொய்பிழைப்பை நடத்துபவர்கள், வேதம் எப்பொழுது தோன்றியது என்பதற்கு எவ்வித பதிலையும் இதுவரை தந்ததில்லை. அறிவாளிகள் வேதம் பயிலக் கூடாது என்பதற்காகத்தான் - வேதம் படிப்பது பார்ப்பனர்களுக்கு மட்டும், அதுவும் பார்ப்பன ஆண்களுக்கு மட்டும்தான் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

வேதத்தில் பார்ப்பன ஆண்களைத் தவிர்த்து மற்றவர்களை மிகவும் இழிவாகவும், அருவறுப்பாகவும் சித்தரித்துள்ளதால், பார்ப்பனரல்லாத மக்கள் வேதம் படித்தால், வெகுண்டு போராடுவார்கள் என்று அஞ்சியே, இந்தப் போலி வரையறை மற்றவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது என்பதை ஆதாரத்தோடு நிறுவியுள்ளார் அண்ணல் அம்பேத்கர்.

இந்நூலை முழுவதும் படித்த ஒருவன், இந்த இழிவான சமூகத்தை விட்டு - தன்னை ஒரு இந்து அல்ல என்பதையும், தன் வரலாற்றைச் சீரழித்த இந்து மதத்தையும் - எல்லா நிலைகளிலும் எதிர்க்கத் துணிவான் என்பதில் அய்யம் இல்லை. ●



படிப்பகம்

www.padippakam.com



பிடல் காஸ்ட்ரோவுடன் சேகுவாரா

**உலக வல்லரசும் முதலாளித்துவமும் உருவாக்கி வரும் தொடர் முட்டுக் கட்டைகளை கியூபா, துணிவுடன் கடந்து வருகிறது.**

# கியூபா : தொடரும் புரட்சி

■ மாயா

அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் மீது குண்டுமழை பொழிவதன் மூலம் - தனது ஆதிக்க வெறியை மீண்டுமொரு முறை வெளிப்படுத்தியிருக்கிறது. இத்தாக்குதலின் மூலம் தன்னுடைய 'எதிரி'யான ஒசாமா பின்லேடன் மற்றும் அவரது சகாக்களையும் முழுமையாக ஒழித்து விடலாம் என அமெரிக்கா கருதுகிறது.

சென்ற நூற்றாண்டு தொடங்கி இன்று வரை அமெரிக்கா தனது 'எதிரி'களை நேரடியாகவோ மறைமுகமாகவோ தாக்கி அழிக்க முனைந்தபடியே இருக்கிறது. பலர் அழிந்தனர்; பல நாடுகள் சிதைந்தன; வெகு சில நாடுகளே எதிர்த்து நின்றன. அமெரிக்காவை எதிர்த்து நின்ற நாடுகளில் குறிப்பிடத்தக்கது கியூபாவாகும்.

கியூபா நாட்டின் அதிபர் பிடல் காஸ்ட்ரோ, உலகமெங்கும் உள்ள அமெரிக்க அதிருப்தியாளர்களுக்கு ஒரே நம்பிக்கை நட்சத்திரம். சென்ற நூற்றாண்டில் கம்யூனிச நாடுகள் சிதறின; ஜனநாயக நாடுகளும் முதலாளித்துவத்தை தழுவிக் கொண்டன.

இத்தகைய சூழலில், மக்களுக்கான ஆட்சிமுறையை வேண்டுபவர்களுக்கு, காஸ்ட்ரோ கட்டமைத்துள்ள கியூபா நாடே மிச்சமிருக்கும் நம்பிக்கை.

கியூபாவில் 41 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய ஆட்சியாளர் சர்வாதிகாரி ஜெனரல் பாடிஸ்டாவை எதிர்த்து காஸ்ட்ரோ தலைமையிலான புரட்சி வெடித்தது. ஜெனரல் பாடிஸ்டாவை அதிகாரத்திலிருந்து துரத்தியவுடன் புரட்சி ஓய்ந்து விடவில்லை. ஏனெனில், ஆட்சி மாற்றம் மட்டுமே புரட்சியின் நோக்கமல்ல. நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வல்ல பெருவியாபாரிகளையும் தொழிலதிபர்களையும் புரட்சி துரத்தியனுப்பியது. ஒரு புரட்சிகர அரசாங்கம் நிறுவப்பட்டது.

''நான் ஒரு மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்; இறக்கும் வரை நான் அவ்வாறே இருப்பேன்'' என்று பிரகடனப்படுத்திய பிடல் காஸ்ட்ரோ, மார்க்சிய - லெனினிய தத்துவப்படியே ஆட்சியமைத்தார். கியூபாவின் ஒரே அரசியல் கட்சி கியூபா கம்யூனிஸ்ட் கட்சி. இன்று அதுவே நாட்டை ஆளும் சக்தி.

**கியூபா நாட்டின் அதிபர் பிடல் காஸ்ட்ரோ, உலகமெங்கும் உள்ள அமெரிக்க அதிருப்தியாளர்களுக்கு ஒரே நம்பிக்கை நட்சத்திரம்.**

பயன்படுத்தப் படாமலிருந்த பணம் தேசிய வங்கியின் மூலம் திரட்டப்பட்டு, நாட்டைத் தொழில் மயமாக்கும் பணி நடந்தது. இப்பணிகளைத் திட்டமிட, அரசியல் அமைப்புகளில் இல்லாத நிபுணர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். கூட்டுறவு விவசாய சங்கங்கள் உருவாக்கப்பட்டன. முன்னர் குத்தகைக்கு விவசாயம் செய்த ஒரு லட்சம் சிறு விவசாயிகள், அந்த நிலத்திற்கு உடைமையாளர்களாக்கப் பட்டனர். நில உச்சவரம்பு நிர்ணயிக்கப் பட்டு, நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு அந்நிலங்கள் - தோட்டங்கள், காடுகள் உருவாக்கப் பயன்படுத்தப்பட்டன.

வீட்டு வாடகை பாதியாகக் குறைக்கப் பட்டது. வாடகைக்கு விடப்படும் வீடுகள் மீது மும்மடங்கு வரி விதிக்கப்பட்டது. இதன்மூலம், கிராமத்தில் உள்ள ஒவ்வொரு விவசாய குடும்பத்திற்கும் சொந்தமாக ஒருதுண்டு நிலம் இருப்பது போல, நகரத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொந்தமாக ஒரு வீடு



படிப்பகம்

www.padippakam.com

கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மின் சக்தி பல சாத்தியமான முறைகளில் பெருக்கப்பட்டது. கல்வியும் மருத்துவ வசதிகளும் இலவசமாக்கப்பட்டன.

காஸ்ட்ரோ, கியூபாவில் புதிய ஆட்சியை நிறுவிய பொழுது அமெரிக்கா அதனை அங்கீகரித்தது. அதிகப்படியான லாபத்துடன் செயற்பட்டு வந்த அனைத்து அமெரிக்க நிறுவனங்களையும் அவர் நாட்டுடைமையாக்கினார். 1960களில் கியூபா அன்றைய சோவியத் யூனியனுடன் நெருங்கி உறவாடத் தொடங்கியது. இதனால், அமெரிக்கா, கியூபாவுடனான அனைத்து உறவுகளையும் முறித்துக் கொள்வதாக அறிவித்தது.

சோவியத் யூனியன் ஆதரவோடு கியூபா மேலும் வளமடைந்தது. கியூபா அரசாங்கத்தைக் குலைக்க - அதிருப்தியாளர்களுக்கு ஆதரவும் பயிற்சியும் அமெரிக்க அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்டது. இந்த அதிருப்தியாளர்கள் நாட்டில் ஊடுருவும் பொழுது, கம்யூனிசப் பிடியில் உள்ள மக்கள் அவர்களுக்கு ஆதரவு கொடுத்து காஸ்ட்ரோ அரசாங்கத்தைக் கவிழ்ப்பார்களென அமெரிக்கா நம்பியது. ஆனால் மக்கள், காஸ்ட்ரோவிற்கு ஆதரவாக நின்றனர்.



பிடல் காஸ்ட்ரோவையும் பல முக்கியத் தலைவர்களையும் கொல்ல, அமெரிக்க உளவுத்துறை அமைப்பான சி.அய்.ஏ. பல ஆண்டுகளாய் முயற்சித்து வருகிறது. கியூபாவுடன் வணிகத் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என பல நாடுகளும் வணிக நிறுவனங்களும் நிர்பந்திக்கப்பட்டுள்ளன.

1990களில் சோவியத் யூனியன் பல நாடுகளாய் சிதறுண்ட பிறகு, கியூபா மீதான அமெரிக்கத் தடைகள் மேலும் அதிகரிக்கப்பட்டன. ரஷ்யா, கியூபாவிற்கு அளித்து வந்த உதவிகள் நிறுத்தப்பட்டன. இதனால் கியூபாவில் பொருளாதார சிக்கல் ஏற்பட்டுள்ளது. எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, மக்கள் மிதிவண்டியை அதிகளவில் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். விவசாயத்திற்கு டிராக்டர்களைப் பயன்படுத்துவதற்கு பதில் மாடுகள் கொண்டு நிலத்தை உழும் முறை பின்பற்றப்படுகிறது.

நசிந்து வரும் தொழில்களுக்கு மாற்றாக, வேறு பல தொழில்களை மேற்கொள்ளுமாறு கியூபா மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இன்றைய சிக்கலை சந்திக்க, மக்கள் தியாக மனப்பான்மையுடன் பணியாற்ற வேண்டுமென காஸ்ட்ரோ வேண்டுகோள் விடுத்தபடி உள்ளார். அதே பொருளாதாரத் தடை காரணமாய் விளைந்திருக்கும் ஒரு நல்ல விஷயமும் உள்ளது. சுற்றுச்சூழல் மாசுபாடு, கியூபாவில் குறைந்து வருகிறது.

பொருளாதாரத் தடை காரணமாய் அவதிக்குள்ளாகும் மக்கள், காஸ்ட்ரோவின் அரசாங்கத்திற்கு எதிராகத் திரும்புவார்களென அமெரிக்கா கணித்திருந்தது. இப்பொழுது இந்தக் கணிப்பு பொய்யாகி விட்டது. மக்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டாலும், காஸ்ட்ரோ அரசின் மேல் பெரும்பான்மையான மக்கள் இன்றும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

தற்பொழுது, காஸ்ட்ரோவின் மறைவிற்காக அமெரிக்கா இலவு காத்த கிளியாகக் காத்திருக்கிறது. நுகர்வுக் கலாச்சாரத்தை, கியூபாவினுள் ஊடுருவ வைத்ததால், கியூபா மக்கள் அரசிற்கு எதிராகத் திரும்புவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்குமென்று அமெரிக்கா மற்றொரு கணக்கும் போட்டு வருகிறது. இதற்காக கியூபாவின் மேல் பொருளாதாரத் தடை மேலும் மேலும் கடினமாக்கப்பட்டுள்ளது. மிக அவசியமான மருந்துகள், உணவுப் பொருட்கள் கூட தடை செய்யப்பட்டுள்ளன.

மற்றொரு புறம், கியூபாவிற்கு எதிரான பிரச்சாரம் உலகம் முழுவதும் நடத்தப்படுகிறது. இதனை மேற்கொள்பவர்கள் அமெரிக்க அதிகார வர்க்கத்தால் வயிறு வளர்க்கும் பத்திரிகைகள். 'காஸ்ட்ரோவின் சர்வாதிகார அரசாங்கம் - மனித உரிமைகளை மதிப்பதேயில்லை' என்பது போன்ற பிரச்சாரங்கள் ஊடகத்தின் மூலம் உலகம் முழுவதும் பரப்பப்பட்டு வருகிறது.

அமெரிக்க ஊடுருவலைத் தவிர்ப்பதற்காக, கியூபாவில் கண்காணிப்பு அதி

# முதலாளித்துவமும் சோசலிச வழியும்

"முதலாளித்துவ நாடுகளில் எங்கு நோக்கினும் நாம் காண்பது அபரிமிதமான சுயநலம், பயங்கரமான போட்டி, தீர்க்க முடியாத பேராசை, பணம் மற்றும் செல்வக் குவிப்பு போன்றவை மட்டுமே. எதிர்காலத்தில் கியூபா, பிற முதலாளித்துவ நாடுகளை விட சிறப்பாக இருக்குமென நான் நம்புகிறேன்.



ஒரு குழந்தை கூட பட்டினியால் வாட நாம் அனுமதிக்க மாட்டோம். ஒரு பட்டப்படிப்பு மாணவனைக் கூட வேலையில்லாமல், வருமானமில்லாமல் அலைய அனுமதிக்க மாட்டோம். ஏனெனில், இதுதான் சோசலிச வழியாகும். லட்சக்கணக்கான மக்களைத் தெருவில் தூக்கியெறிந்து 'உன் காரியத்தை நீ தான் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று இரக்கமற்று கூறும் சமூக அமைப்பு நம்முடையதல்ல.

பொருளாதாரத் தடையினால் நமது நிலை மோசமானாலும், நம் மக்கள் வருங்காலத்தில் சிறப்பாக இருப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். முதலாளித்துவத்திற்கு அதனுடன் இணைந்த அநியாயத்துடன், சமமற்ற நிலையுடன் அதன் கொடூரங்களுக்குத் திரும்பிச் செல்வதைக் காட்டிலும் எந்த விதமான தியாகமும் ஆயிரம் மடங்கு சிறப்பானது. முதன்முறையாக நமக்கு கவுரவத்தையும் முழுமையான சுதந்திரத்தையும் அளித்த புரட்சியை, சோசலிசத்தை, நாட்டின் சுதந்திரத்தை இழப்பதை விட எவ்விதமான தியாகமும் உயர்வானதுதான்."

- பிடல் காஸ்ட்ரோ



படிப்பகம்

www.padippakam.com

கரிக்கப்பட்டுள்ளது உண்மைதான் எனினும், தெருவோரங்களில் பலர் வறுமையில் வாடிக்கொண்டிருக்க, பணக்காரர்கள் 'பாலிஷ் காரில்' உலவும் அமெரிக்காதான், மனித உரிமை மீறலில் முதன்மையாக விளங்குகிறதென காஸ்ட்ரோ அறிவித்துள்ளார்.

சென்ற ஆண்டு, அய்க்கிய நாடுகள் அவை, கியூபாவில் மனித உரிமைகள் மீறப்படுவதாகத் தீர்மானம் நிறைவேற்றியது. கியூபா 'சர்வதிகார' ஆட்சியிலிருந்து தப்பித்து வரும் அகதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதற்குத் தாங்கள் தயாராக உள்ளதாக அமெரிக்க அரசாங்கம் அறிவித்தது. அமெரிக்கா செல்ல விரும்புவோர், அரசாங்க உதவியுடனே அவ்வாறு செய்யலாம் என கியூபா பதிலடி கொடுத்தது. அமெரிக்கா அதன் பின்னர் அதைப் பற்றி பேச்சையே எடுக்கவில்லை.

இதற்கிடையே, மாறி வரும் உலகப் பொருளாதார நிலைக்கு ஏற்ப கியூபாவின் பொருளாதார அமைப்பும் சிறிதாவது மாற்றப்பட வேண்டுமென கியூபாவின் இரண்டாம் கட்டத் தலைவர்கள் கருத்துகளை முன் வைக்கிறார்கள். அதிருப்தியாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் அதிக வாய்ப்புகள் தரப்பட வேண்டுமென்ற கருத்தும் வலுவடைந்து வருகிறது. தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். ஜனநாயக முறையை ஒட்டிய சோசலிச அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டுமென்றும் நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். ''சோவியத் யூனியன் செய்த தவறு எங்களுக்குப் படிப்பினையாக அமைந்திருக்கிறது'' என காஸ்ட்ரோ அறிவித்து விட்டார்.

தற்பொழுது எழுபத்தி அய்ந்து வயதாகும் பிடல் காஸ்ட்ரோ, உயிரோடு இருக்கும் வரை, கியூபா கம்யூனிச கட்டமைப்புக்கு எந்த ஆபத்தும் நேராது. அவருடைய மறைவிற்குப் பிறகு நடைபெறும் மாற்றங்கள், மக்களின் புரட்சி மனப்பான்மையை தெளிவாகக் கோடிட்டுக் காட்டும். அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு எதிராகத் திரண்டெழும் போராட்டத்தில் கியூபா முக்கிய பங்காற்றும். மக்களுக்கான ஆட்சிமுறை, ஜனநாயகத்தையும் கம்யூனிசத்தையும் கடந்து எவ்வாறு வளர்ச்சி பெறுமென்பதை கியூபா வாயிலாக நாம் அறிய நேரிடலாம். ●



# கோபி அன்னன் உருவாக்கும் புது அய்.நா.

2001 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு, அய்க்கிய நாடுகள் அவைக்கும் அதன் பொதுச் செயலாளர் கோபி அன்னனுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததற்காகவும், சர்வதேச தீவிரவாதத்தினை ஒழிக்க நடவடிக்கை எடுத்ததற்காகவும், 'எய்ட்ஸ்' நோயினை எதிர்த்த போராட்டத்தில் முனைப்பாக ஈடுபட்டதற்காகவும் கோபி அன்னனுக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியன் பல நாடுகளாய் சிதறுண்ட பிறகு, அய்க்கிய நாடுகள் அவையே தேவையற்றதாகி விட்டதென அமெரிக்க காங்கிரசில் சிலர் முணுமுணுக்கக் கூடும். ஆனால், பனிப்போருக்குப் பின்னரே அய்.நா.வின் செயல்பாடு, பன்முகப்பட்டதாய் - முக்கியமானதாய் மாறியிருக்கிறது.

சமாதான முயற்சிகள் தவிர உலகம் முழுவதும் பொருளாதார நடவடிக்கைகள், மனித உரிமைக் கண்காணிப்பு, மருத்துவ உதவி போன்றவையும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இச்சூழலுக்கு ஏற்ப கோபி அன்னன், அய்க்கிய நாடுகள் அவைக்குப் பொருத்தமான பொதுச் செயலாளராய் அமைந்திருக்கிறார்.

அய்.நா.வில் முப்பது ஆண்டுகள் பல்வேறு பதவிகளில் பணியாற்றிய பிறகே கோபி அன்னன், பொதுச் செயலாளராகப் பதவியேற்றார். அய்.நா.வின் ஊழியர் ஒருவரே அதன் தலைமைப் பொறுப்பிற்கு வந்தது இதுவே முதல் முறை. கறுப்பு ஆப்பிரிக்காவில் இருந்து வந்த ஒருவர் இப்பொறுப்பை ஏற்பதும் இதுவே முதல் முறை.

உலகளவில் மிகவும் பின்தங்கியிருக்கும் ஆப்பிரிக்காவில் - அரசியல் ரீதியான அமைதி ஏற்படவும், சமூக மேம்பாடு உருவாகவும் கோபி அன்னன் முக்கிய பங்காற்றி வருகிறார். அய்.நா. செயலகத்தில் உள்ள பெண்களின் அதிகார உயர்வுக்கும் அவர் வழிகோலியுள்ளார். உலக நாடுகளுடன் அய்.நா. வைத்திருக்கும் அரசாங்க உறவுக்கு அடுத்து, சமூக நிறுவனங்கள், கழகங்களுடன் அய்.நா.வின் உறவு மேம்படவும் முயல்கிறார். அய்.நா.வை சாதாரண மக்களிடம் கொண்டு செல்வதே கோபி அன்னனின் விருப்பம்.

ருவாண்டா நாட்டில் 'உட்டு' தீவிரவாதிகளால் எட்டு லட்சம் 'டூட்டிசி' இன மக்கள் கொல்லப்பட்டதை - அய்.நா. முயன்றிருந்தால் தடுத்திருக்கலாம்; போஸ்னிய முஸ்லிம்கள் செர்புகளால் கொல்லப்பட்டதற்கு அய்.நா.வின் முன் ஏற்பாடு நடவடிக்கைகள் சரியாக அமையாததே காரணமென கோபி அன்னன், பொதுச் செயலாளர் பதவியேற்புக்கு முன் குற்றம் சாட்டியிருந்தார்.

அய்க்கிய நாடுகள் அவை என்பது, சர்வ வல்லமை பொருந்திய நிறுவனமல்ல. அய்.நா.வை வளர்ந்த நாடுகளும் குறிப்பாக அமெரிக்காவுமே அரசியல் தளத்தில் அதனை ஆட்டிப் படைக்கின்றன. ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா குண்டு வீசுவதை கோபி அன்னன் வேடிக்கை மட்டுமே பார்க்க முடிகிறது.

எனினும், நோபல் பரிசு அறிவிக்கப்பட்டவுடன், அய்.நா. ஊழியர்களிடம் அவர், ''இந்தப் பரிசினால் நமது கடமை அதிகமாகியுள்ளது. மேலும், கடுமையாக நாம் உழைக்க வேண்டும். நமக்குக் கிடைத்துள்ள இடத்தில் நாம் சிறப்பாக செயல்படுவதே - நமக்கான நோக்கமாய் இருக்க வேண்டும்'' என்ற வார்த்தைகள் மனதிலிருந்து நேர்மையாக உதிர்ந்தவை என உறுதியாகச் சொல்ல முடியும்.

- மாயா



படிப்பகம்

www.padippakam.com

# பூமியின் மிகப்பழமையான ரத்தத்தின் கதை

■ குட்டி ரேவதி



மகாஸ்வேதா தேவி

"அவனுடைய ரத்தம் மிகப்பழமையானது. ஆம், பழங்குடியைச் சேர்ந்த கறுப்பு மனிதர்களின் ரத்தம் மிகமிகப் பழமையானது. அது நெடுங்காலமாகக் கட்டுக் கதைகளையும் அற்புதங்களையும் நம்பமுடியாத நிகழ்ச்சிகளையும் நம்பிக் கொண்டு பிழைத்திருக்க முயற்சித்து வருகிறது"

- இவ்வரிகள், வங்கப் பெண் எழுத்தாளர் மகாஸ்வேதா தேவியின் 'காட்டில் உரிமை' நாவலில் ஒலிக்கின்றன. தலித் முரசின் பக்கங்கள் வழியாக மகாஸ்வேதா தேவியைப் பற்றி சிந்திப்பது அவசியமாகப்படுகிறது. தன் வாழ்க்கையை பழங்குடி மக்களோடு இணைத்துக் கொண்டு, அதன் அனுபவக் கூறுகளையே படைப்புகளாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் அவர், இலக்கியத்தில் காணப்படும் மொழி வளமை, உருவகம், வடிவம் இவைகளிலிருந்து விலகி ஈரமான வரலாற்றில் பாதங்களைப் பதித்துச் செல்கிறார்.

கதையின் வெவ்வேறு திசைகளிலிருந்து வரும் குரல்கள், எளிய, வாழ்க்கை துண்டாடப்படுவதன் மேலோட்டமான சலனங்கள் அல்ல. அடிமனதில் உறைந்திருக்கும் வலிகளும், மண்ணை உயிருள்ள ஓர் உயிராகக் காணும் நம்பிக்கையும்தான். இந்நம்பிக்கை, எளிதில்எவருக்கும்வாய்த்து விடுவதில்லை.

மகாஸ்வேதா தேவியின் சிறுகதைத் தொகுப்பு ஒன்றும் 'காட்டில் உரிமை' (முண்டா எனும் பழங்குடி மக்களின் கலகக் கதை) நாவலும் தமிழில் மொழியாக்கம் பெற்றுள்ளன. நவீன படைப்பிலக்கியம் - தனக்குள் வரலாற்றின் இயக்கத்தையும், எதார்த்தக் கதை மாந்தர்களையும், கதையை சூழும் புவியியலையும் ஒருங்கே கொண்டு - உறுதியான நரம்பு வழியாகப் படைப்புக்குள் நம்மை இழுத்துச் செல்ல வேண்டும்.

மகாஸ்வேதா தேவியின் படைப்புகள், முழுமையாக இதை ஈட்டியிருக்கின்றன. ஒரு கட்டத்தில் எதார்த்தமான ஒரு புனைவிற்கு மொழியோ, வடிவமோ, அணியலங்காரங்களோ தடையேயில்லை என்பதை உணர முடிகிறது. சமூக விளிம்பு என்பது, ஒடுக்கப்பட்ட பண்பாட்டுக் கூறுகளை சுமந்து பயணிப்பதே என துல்லியமான குரலில் விவரிக்கிறார்.

பழங்குடி மக்களின் நம்பிக்கைகள், சிறுபுயலுக்கும் தலை சாய்க்கும் புற்கள் அல்ல. அவை மீண்டும் மீண்டும் அவர்களை ஆதிகாலத்திற்கே - பூமி மிகவும் இளமையாக இருந்த பருவத்திற்கே அழைத்துச் செல்லுபவையாக இருக்கின்றன. ஆகவேதான், மகாஸ்வேதா தேவியும் பழங்குடி மக்களின் வாழ்க்கை மீது அபாரமான ஈர்ப்பு கொண்டுள்ளார். மகாஸ்வேதா தேவியின் 'காட்டில் உரிமை' - வாசிப்பவர்களின் இதயம், இனம் புரியாமல் வதைபடுவதற்கு அவரே முழு பொறுப்பு. ●

## நிலத்தைப் பண்படுத்து!

'யாருக்கும் தெரியும் அவன் மரித்துப் போவான் என
கற்றறிந்தவனும் கூலியாளும்
ஒருவரும் தப்பிப்பதில்லை என்பதும் நிச்சயம்
மரித்துப் போகும்வரை நிலத்தைப் பண்படுத்து
விவசாயிதான் சொர்க்கத்துக்குப் போகிறான்
ஒருவர் ஆரோக்கியத்தைப் பெற்றிருக்கும்பொழுது
இதுவே அருமையானது;
பத்தாயிரம் ஜெர்மன் வெள்ளி நாணயங்களைவிட
மதிப்பு மிக்கது'

- GURAGE என்ற கவிஞனின் எத்தியோப்பியக் கவிதை.

அண்மையில், சென்னையில் ஆறு ஆப்பிரிக்கத் திரைப்படங்கள் திரையிடப்பட்டன. கடந்த நாற்பது ஆண்டுகால ஆப்பிரிக்க வரலாற்றின் ஆழமான விசாரணையை அவை கொண்டிருந்தன. மீண்டும் தங்கள் நிலத்தின், பண்பாட்டின் விழுமியங்களைக் கண்டடையும் வழிகளைக் காட்டுகின்றது ஆப்பிரிக்க சினிமா. வறுமை அவர்களை நொய்மைப்படுத்தும் போது - குடும்ப அமைப்பும், பண்பாட்டுக் கொண்டாட்டங்களும், சடங்குகளுமே பிணைக்கின்றன.



குறிப்பாக, இரு திரைப்படங்களைச் சொல்லலாம். ஒரு பஞ்சத்திற்குப்பின் சர்வதேச உதவிகளுக்குக் காத்திராமல், நகர வாழ்க்கைக்கு நகர்ந்து - தங்களின் அடையாளங்களையும் ஒப்புக் கொடுக்காமல் நிலத்தை வியர்வையால் நனைத்து பயிர் செய்யும் இரு குடும்பங்கள் பற்றிய YAM DAABO என்ற திரைப்படம்; மற்றொன்று GUIMBA என்ற கறுப்பின மக்களின் மரபுக் கதையைக் காட்சிப் படிமங்களாக்கிய படம். ஒரு புராணக் கதை வழியாக, மீண்டும் தங்கள் பண்பாட்டு வடிவங்களையே பற்றிக் கொள்ள வேண்டும் என எச்சரிக்கும் படம்.

மேலும், இப்படங்கள், ஆப்பிரிக்க மக்களின் மீது படிந்துள்ள மேல்நாட்டு 'ஜிகினா'க்களையும், அவர்களின் எதிர்ப்புணர்வையும் பட்டவர்த்தனமாக்கியது. முதல் இயக்குநர்களின் படிம வெளிப்பாடும் அசல் தன்மையுடனிருந்தது.

எல்லா பண்பாட்டு அடையாளங்களிலிருந்தும் வெகுதொலைவிலிருக்கும் ஆப்பிரிக்க இன மக்கள், உலகின் பரப்பை எட்ட 'சினிமாவை' தங்களின் குறுகிய வழியாக்கிக் கொண்டது, ஒப்பற்ற விஷயமாகப் படுகிறது. அதிலும் தங்களின் ஈரமான வரலாற்றின் வாசனை சிறிதும் மாறாது படைத்தளித்திருக்கும் விஷயமும் உன்னதமானது.

நவீன தமிழ் சினிமா, ஒடுக்கப்பட்ட மக்களின் கறுப்பு நிறத்தை, எதிர்ப்புணர்வின் சிவந்த நிறத்தை ஏன் இன்னும் வெளிப்படுத்தவில்லை? அற்புதங்களையே தங்கள் வாழ்வு முழுக்கக் கொண்டிருந்த பழங்குடி மக்கள், என்றைக்கு உலகின் விசாலத்தை அறிவார்கள்? ■



படிப்பகம்

www.padippakam.com

# 'நாடு' கட்டமைப்பும் சாதியாதிக்கமும் - IV



■ விடியல்

நாட்டு அதிகாரம், தலித் மக்களின் மீது மட்டும் அதிகாரம் செலுத்தவில்லை. இப்பகுதியில் உழைக்கும் மக்கள் அனைவரையும் ஒடுக்கி வைக்கிறது. நாட்டதிகாரத்தை எதிர்க்கும் போராட்டத்தின் தலைமை, தலித் விடுதலையை மய்யப்படுத்தியதாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், மிகவும் ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் உரிமையை மதிக்காத, சாதிக்கட்டமைப்பு முழுவதையும் நொறுக்க விரும்பாத எந்தக் கட்சியும் நாடாதிக்கத்தை நொறுக்கி விட முடியாது.

ஆனால், இவ்விடத்தில்தான் பிரச்சனை மேலும் சிக்கலாகிறது. கள்ளர்களின் 'சாதிப் பிறப்பு' போற்றப்படுவதுபோல் - இங்கு பள்ளர்களின் 'சாதிப் பிறப்பும்' போற்றப்படுகிறது. சில தலித் அமைப்புகளே இங்கு இத்தகையதொரு நிலை எடுப்பது, போராட்டச் சக்திகளை மேலும் பிளவுபடுத்துகின்றன.

அதே போல், இப்பகுதியில் காட்டாட்சி நடத்தும் கே.ஆர். ராமசாமிதான் தியாகி சுப்புவின் படுகொலைக்குக் காரணம் என்பது தெளிவாகத் தெரிந்த போதும் கூட, எம்.எல். கட்சி நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கருத்து, இப்பகுதியில் பரவலாக இருக்கிறது.

இதுகுறித்து, அக்கட்சியின் மாவட்டச் செயலாளர் பாண்டியன் கூறுகையில், "தோழர் சுப்பு படுகொலைக்குப் பிறகு, தோழர் சிம்சனைத் தவிர ஏனைய முக்கியத் தலைவர்கள் பல்வேறு காரணங்களைக் கூறி கட்சியிலிருந்து உதிர்ந்து போனார்கள். 1995-97 வரை கட்சி ஒரு தேக்கத்தை சந்தித்தது. 1998 ஆம் ஆண்டு கட்சியின் மாநிலத் தலைமை மீண்டும் முயற்சிகளைத் துவங்கத் திட்டமிட்டது.

தோழர் வி.எம். கூறியது போல, மக்கள் தலைவர்களுக்கு மரண தண்டனையை - மக்கள் விரோதிகள் விதிக்கையில், அவர்களுக்கு மரண தண்டனை அளிக்கும் உரிமையும் ஆற்றலும் ஒடுக்கப்பட்ட, உழைக்கும் மக்களுக்கு எப்போதும் உண்டு. இது, ஒடுக்குமுறை எதிர்ப்புப் போராட்டத்தின் தவிர்க்க முடியாத அரசியல் 'தர்மம்'.

இப்பகுதி ஒடுக்கப்பட்ட மக்கள், அமைப்பு ரீதியான அதிகாரத்துக்காக எதிரியை அரசியல் ரீதியாக கருவறுப்பதே முதன்மையானது என எங்கள் கட்சி கருதுகிறது. நிலவுடைமை, சாதி அதிகாரம் ஒருவனுடைய அழிவோடு மட்டும் முடிந்து விடுவதாக எங்கள் கட்சி கருதவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களை அமைப்பாக்கி - அவர்கள் ஜனநாயக வாழ்வு முறையை சுவாசிப்பதற்கு, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு நாங்கள் அதிக அழுத்தம் தருகிறோம். தோழர் சுப்புவின் படுகொலைக்குப் பழிவாங்க வேண்டும் என்ற மக்களின் பெருவிருப்பம், மக்களின் துணையோடு நிறைவேற்றப்படும். இது நிச்சயம்" என்றார்.

இவையனைத்தையும் கடந்து தலித் மக்கள் தனித்ததொரு அரசியல் சக்தியாக எழுச்சி பெறுவது, நாட்டாட்சி அதிகாரத்தால் ஒடுக்கப்படும் மக்களை - ஒரே சக்தியாக போராட்டக் களம் காண வைப்பது என்ற கடமை நிறைவேறாமல் - நாட்டாட்சி முறைக்கு முடிவு வரப்போவது இல்லை. குறிப்பாக, போராட்ட சக்திகள் ஓரணியில் நின்று போராடுவதன் மூலமே நாட்டாட்சி முறைக்கு முடிவு கட்ட முடியும்.

அண்மையில், சுப்புவின் படுகொலை நாளான செப்டம்பர் 13 அன்று, புரட்சிகர இளைஞர் கழகம்



**"வேறுபாடுகளுக்கிடையிலும் போராடும் தலித் இயக்கங்கள், ஒன்று சேர்ந்து நிற்பதன் மூலமே - ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் வீழ்த்த முடியும். வாக்குகளில் வெளிப்பட்டுள்ள எதிர்ப்புணர்வு, இதுபோன்ற ஆதிக்க எதிர்ப்பு இயக்க மேடைகளிலே தோன்றும் ஒற்றுமை உணர்வு, போராட்டக் களங்களிலும் தொடர வேண்டும்"**

– பாலசுந்தரம்



படிப்பகம்

**தலித்துகள் தங்களை தனிசாதியாக எடுத்துக் கொண்டால் வெற்றிபெற முடியாது. அதே நேரத்தில் ஏனைய சாதிகளுக்கு வால்பிடித்தால் விடுதலை பெற முடியாது.**

நடத்திய இளைஞர் எழுச்சி மாநாட்டு மேடை, இதனை வெளிப்படுத்துவதாக இருந்தது.

'மாவீரன் தியாகி இமானுவேல் பேரவை'யின் தோழர் சந்திரபோஸ் - 'அருந்ததியர் ஜனநாயகப்' பேரவையைச் சேர்ந்த எஸ்.டி. கல்யாண சுந்தரம், விடுதலைச் சிறுத்தைகளின் லெனின் லூயிஸ் மற்றும் தோழர்கள் சந்தன மேரி, டாக்டர் எம். சுப்ரமணியம், ராக்கு முத்து ஆகியோருடன் இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தோழர் பாலசுந்தரம் உள்ளிட்ட பல்வேறு போராடும் இயக்கத் தோழர்கள் ஒரே மேடையில் தோன்றி சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தின் இறுதியில் பேசிய எம்.எல். கட்சியின் மாநிலச் செயலாளர் பாலசுந்தரம், ''ஜனநாயகப் போராட்டத்தை எம்.எல். கட்சி மட்டுமே முழுமைப்படுத்த முடியும் என நாங்கள் கருதவில்லை. வேறுபாடுகளுக்கிடையிலும் போராடும் தலித் இயக்கங்கள் ஒன்று சேர்ந்து நிற்பதன் மூலமே - ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் வீழ்த்த முடியும். வாக்குகளில் வெளிப்பட்டுள்ள எதிர்ப்புணர்வு, இது போன்ற ஆதிக்க எதிர்ப்பு இயக்க மேடைகளிலே தோன்றும் ஒற்றுமை உணர்வு, போராட்டக் களங்களிலும் தொடர வேண்டும்'' என்றார்.

இவர் கூறியபடி, வாக்குகளால் காட்டப்பட்ட எதிர்ப்புணர்வு, மேடையில் இவர்கள் தோன்றிய ஒற்றுமை, களங்களிலும் காணப்பட்டால் - நாட்டாமைக்கத்தை உறுதியாக வேரறுக்க முடியும்.

அதே நேரத்தில், நாடாதிக்க முறைக்கு சாவு மணி அடிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை அண்மையில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. உள்நாட்டு அமைப்புகள், வேர்க்கால் மட்ட ஜனநாயகம் தொடர்பானவை என்பதால், இது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

மாடக்கோட்டை சுப்புவின் மனைவியான தோழர் காளியம்மாள், ஒன்றியக் கவுன்சில் உறுப்பினராக சி.பி.அய்.எம்.எல். சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். அதே போல், தேவகோட்டை நகராட்சியின் தலைவர் பதவியை திருமதி. அரிமா என்ற இடைநிலை சாதியைச் சேர்ந்த சுயேட்சை வேட்பாளர் வென்றார். இவரின் வெற்றி, ராமசாமியின் காட்டாட்சிக்கு எதிரான வெகு மக்களின் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளது. உள்ளாட்சித் தேர்தலில் கிடைத்துள்ள மிக முக்கியத்துவம் வாய்ந்த இவ்விருவரின் வெற்றி, ராமசாமிக்கு எரிச்சலையும் தலித் மக்களுக்கு மகிழ்ச்சியையும் அளித்துள்ளது.

உள்ளாட்சித் தேர்தலில் கிடைக்கப் பெற்ற இவ் வெற்றி, இடைநிலை சாதிகளுக்கும் ராமசாமியின் சாதி வெறி காட்டாட்சியின் மீதுள்ள கோபத்தை அடையாளப் படுத்துகிறது.

ஆனால், உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற திருமதி. அரிமா, தான் வெற்றி பெற்றவுடன் தனது முதல் கடமையாக கே.ஆர். ராமசாமியை தனது கணவருடன் சந்தித்துப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துகள் பெற்றுள்ளார்; ராமசாமியுடன் கரம் கோர்த்துக் கொண்டுள்ளார். இது, அங்குள்ள மக்களின் தார்மீக கோபத்தையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது. எந்த காட்டாட்சிக்கு சாவு மணி அடிக்க அவர்கள் முடிவெடுத்தார்களோ அதனையே சிதைப்பதாக மாறிவிட்டது.

இதுவொருபுறமிருக்க, கடந்த சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஜோன்ஸ் ரூசோ, மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். உடையார் உள்ளிட்ட இடைநிலை சாதிகள் அவருக்கு ஆதரவாக அணி திரண்டனர். ஆனால், இத்தேர்தலில் சி.பி.அய்.எம்.எல். கட்சியின் ஆதரவை நாடிய ஜோன்ஸ் ரூசோவின் கோரிக்கை மறுக்கப்பட்டு - சி.பி.அய். எம்.எல். வேட்பாளரும் தேர்தலில் போட்டியிட்டார்.

ஒருபுறம் தோழர் அரிமாவும், காளியம்மாளும் வெற்றி பெற்றுள்ள நிலையில், ஜோன்ஸ் ரூசோவிற்கு சட்டமன்றத் தேர்தலில் ஆதரவு அளிக்காதது குறித்து சி.பி.அய்.எம்.எல். கட்சியின் மாநிலச் செயலாளர் பாலசுந்தரத்திடம் பேசினோம்:

''ஜோன்ஸ் ரூசோவிற்குக் கிடைத்த வாக்குகள், சாதியாதிக்கத்திற்கு எதிரான அணிசேர்க்கை என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அது யாரின் தலைமையில் என்பதுதான் கேள்வி. எங்கள் கட்சி, தலித் மக்களின் நிலையிலிருந்து ஆதிக்க எதிர்ப்புப் போரை நடத்துகிறது.

## பறையர்களின் போராட்டம்

நாடாதிக்க முறைக்கு எதிராக 1927ஆம் ஆண்டு பறையர்கள் இப்பகுதியில் போராட்டம் நடத்தியுள்ளனர். கோவில் விழாவிற்கு மத பேதமற்று அனைத்து தலித்துகளும் திருவிழா பணம் செலுத்த வேண்டுமென முத்து நாட்டு நாட்டார்கள் தீர்ப்பளிக்க, இதனை எதிர்த்து கிறித்துவ தலித்துகள் அரசாங்கத்திடம் முறையிட்டுள்ளனர். இதனை எதிர்பார்க்காத நாட்டார்கள், இந்து தலித்துகள் மட்டும் திருவிழா பணம் செலுத்தினால் போதும் என சமரசம் செய்து கொண்டுள்ளனர்.

அதேபோல், இப்பகுதி மக்கள் தொகையில் சிறு பகுதியினராக உள்ள இவர்கள் - கோயில்களிலும், சாவுகளிலும், விழாக்களிலும் தாங்கள் பறையடிப்பதற்கு எதிராகப் போராட்டம் நடத்தி பறைகளை உடைத்து மண்ணில் புதைத்து, அப்போராட்டத்தில் வெற்றியும் கண்டுள்ளனர். ■

www.padippakam.com

# இன்றும் நிலவும் 'நாடு' முறை

1999ஆம் ஆண்டு தேவகோட்டை வட்டாரம், கண்ணங்குடி ஒன்றியம், கங்கணி பஞ்சாயத்திலுள்ள மொன்னாணி என்னும் கிராமத்தில், ஊர்த்திருவிழா நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இது ஒரு தலித் கிராமம். பள்ளர்கள் மட்டுமே வசிக்கக் கூடிய கிராமம். விழா மேடையில் படுகொலை செய்யப்பட்ட தோழர் சுப்பு மற்றும் ருசோ படம் திறக்க ஏற்பாடானது.

விழா அன்றைக்கே இதே பஞ்சாயத்தைச் சேர்ந்த கேசனி என்னும் ஊரில் (இந்த பஞ்சாயத்தினுடைய அனைத்து கிராமங்களுக்கும் பயன்படக் கூடிய பேருந்து நிறுத்தம் உள்ள ஊர்) பேருந்து கால அட்டவணை, மாவீரன் சுப்பு இளைஞர் மன்றம் சார்பாகத் திறப்பதாக இருந்தது.

நாட்டார்களின் நாடு கட்டமைப்பில் மொன்னாணி முத்து நாட்டிலும், கேசனி ஆற்றங்கரை நாட்டிலும் உள்ளது. கப்பலூர் நாட்டு ஆதிக்க சக்தியான எம்.எல்.ஏ. ராமசாமி கட்டளையின் பேரில் ஆற்றங்கரை நாட்டுப் பள்ளர்கள், முத்து நாட்டு மொன்னாணி ஊரைச் சேர்ந்த பள்ளர்களை சந்தித்து, 'கேசனி எங்கள் நாட்டிலுள்ள ஊர். நீங்கள் அங்கு வந்து 'தகவல்' பலகை திறக்கக் கூடாது' என்று சொல்ல வைக்கப்பட்டனர்.

ஒரே பஞ்சாயத்தில் இருந்தாலும் கூட, உயிரோட்டமான நாடு முறை காரணமாக 'பலகைத் திறப்பு' தடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு காவல் துறை அனுமதி மறுத்தது. திருவிழாவிற்கு வேனில் வந்து கொண்டிருந்த கரகாட்டக் குழுவினர், இசைக் கலைஞர்கள், எம்.எல்.ஏ. ஆட்களால் வேனோடு கடத்தப்பட்டு, புதுகை மாவட்டம் கரூர் என்னும் கிராமத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

திருவிழாவிற்காக மொன்னாணி கிராமத்திற்குச் சென்ற ஏனைய கிராம மக்கள், செல்லும் வழிகளில் நூற்றுக்கணக்கான எம்.எல்.ஏ-வின் அடியாட்கள் ஆயுதங்களுடன் நின்று போகவிடாமல் விரட்டியடித்தனர்.

காவல் துறை மொன்னாணி கிராமத்திற்குச் சென்று விருந்தினராக வந்த வெளியூர் ஆட்களைக் கைது செய்தது. இச்சம்பவம், இன்றும் 'நாடு' முறை நடைமுறையில் இருப்பதற்கும் காவல் துறை இதற்கு துணை நிற்பதற்கும் சான்றாகும். ■

தலித்துகள் தங்களை தனிசாதியாக எடுத்துக் கொண்டால் வெற்றிபெற முடியாது. அதேபோல் பிற சாதிகளுக்கு வால்பிடித்தால் விடுதலை பெற முடியாது.

தலித்துகளை தனி சாதியாகவும் தனிமைப்பட்ட சாதியாகவும் மாற்றும் அனைத்து முயற்சிகளையும் எதிர்க்கும் நாங்கள், அனைத்து ஜனநாயக சக்திகளையும் - சாதியாதிக்க எதிர்ப்புப் போரில் அணி திரட்ட முயற்சிக்கிறோம்.

உடையார் போன்ற இடைநிலை சாதிகளின் தலைமையை தலித்துகள் ஏன் ஏற்க வேண்டும்? மிகவும் ஒடுக்கப்பட்ட, போராட்ட குணம் வாய்ந்த சாதிக் கட்டமைப்பையே நொறுக்க விரும்பும் அடிப்படை வர்க்கமாக இருக்கும் தலித் மக்களின் அறுதியிடலை, பிற சாதிகள் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? என எதிர்க்கேள்வி எழுப்பினார்.



பூ. சந்திரபோஸ் எஸ்.டி. கல்யாண சுந்தரம்

**தலித் மக்கள் தனித்த தொரு அரசியல் சக்தியாக எழுச்சி பெறுவது, நாட்டாட்சி அதிகாரத்தால் ஒடுக்கப்படும் மக்களை - ஒரே சக்தியாக போராட்டக் களம் காண வைப்பது என்ற கடமை நிறைவேறாமல் - நாட்டாட்சி முறைக்கு முடிவு வரப் போவது இல்லை.**

இவரின் கேள்வி நியாயமானதே என்பதை, திருமதி. அரிமாவும், அவருடைய கணவரும் நிரூபித்துள்ளனர். நாட்டாட்சி முறைக்கு எதிரான சக்திகளின் கூட்டமைப்பான நகர் நலக்குழுவின் தலைவரே அரிமா. அவருக்குக் கிடைத்த ஓட்டு நாட்டாட்சிக்கு எதிரான ஓட்டு. ஆனால், அதனை கே.ஆர். ராமசாமியிடம் ஒப்படைக்க அவர்கள் சற்றும் காலம் தாழ்த்தவில்லை.

வால் பிடிக்கும் அடிமைகள் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. சாதிகளை ஒழிக்க விரும்பாத சக்திகள், தலித்துகளுக்குத் தலைமை தாங்கக் கூடாது. சாதிக் கட்டமைப்பை நொறுக்க விரும்பும் தலித்துகளின் அறுதியிடல் நடந்தே தீர வேண்டும்.

எப்படியிருப்பினும், நாட்டாட்சி முறை வரலாற்றின் குப்பைத்தொட்டிக்கு அனுப்பப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில், மக்கள் மகத்தானவர்கள்; அவர்களே வரலாற்றைத் தீர்மானிக்கிறார்கள். ●

- முற்றும்



படிப்பகம்

# அகதிகளாக அய்யம்பாளையம் அருந்ததியர்கள்

■ கோவை ரவி

கோயிலுக்குள் நுழையக்கூடாது. திருவிழாக் காலங்களில் இலவசமாக எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும். சாதி இந்துக்களின் வீடுகளில் நல்லது நடந்தாலும், கெட்டது நடந்தாலும் கட்டாயமாகப் பங்கெடுத்து - இலவசமாய் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும். குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பக் கூடாது. வேலை, கூலி நேரம் பற்றி கேட்கக் கூடாது. காவல் நிலையங்களுக்குப் போகக் கூடாது. தனிச் சுடுகாடு. இன்னும் இன்னும்...

. - இவை எல்லாம் ஏதோ இன்றைய திரைப்படக் கதை வசனம் அல்ல. பிறப்பின் அடிப்படையிலும், தொழில் அடிப்படையிலும், சாதி அடிப்படையிலும் எந்தப் பாகுபாடும் இந்தியாவில் இல்லை என்று உலக அரங்கில், பங்காரு லட்சுமணன்கள் மூலம் வாஜ்பேயிகள் உளறிக்கொண்டு இருந்தாலும், எள்அளவும் குறையாமல் இன்றளவும் சாதியின் பெயரால் கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதற்கு, கோவை மாவட்டம் அய்யம்பாளையம் அருந்ததியர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளே சான்றாகும்.

அய்யம்பாளையம் கிராமத்தில் 250 அருந்ததியர் குடும்பங்களும், 250 கொங்கு வெள்ளாள கவுண்டர் சாதியைச் சேர்ந்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். காலங்காலமாக செய்து வந்த அடிமை வேலைகளை, கடந்த ...ன் மாதம் உள்ளூர் மாரியம்மன் கோயில் திருவிழாவிலும் செய்ய வேண்டும் என்று சேரி மக்களைக் கட்டாயப்படுத்தினர் கவுண்டர்கள். ஆனால், சேரி மக்களும் இளைஞர்களும் - 'கூலி கொடுப்பதாக இருந்தால் மட்டுமே வேலைகள் செய்வோம்; இலவசமாக செய்ய மாட்டோம்' என்று உறுதியாகக் கூறினர்.

இதனால் ஆத்திரமடைந்த கவுண்டர்கள், சக்கிலியர்களுக்கு இவ்வளவு திமிரா, இனிமேல் கோயில் கம்பம் பக்கம் கூட வரக்கூடாது என்று அறிவித்தனர். அந்தக் கோயில் பொதுவானது. வழக்கம் போல் கோயிலுக்கு வெளியே சாமி கும்பிட மக்கள் சென்றனர். காவல் ஆய்வாளர், தாசில்தார் முன்னிலையில் தலித்துகள் கொண்டு சென்ற பூசை சாமான்களை எட்டி உதைத்து அடித்தனர்.

காவல் துறை வேடிக்கை பார்த்து விட்டு, வழக்கம் போல் ஒரு புகாரை பதிவு செய்துவிட்டு ஒதுங்கிக் கொண்டது. ஊர்க் கவுண்டர்களை மீறி கோயிலுக்கு உள்ளே அழைத்துச் செல்ல எந்த அரசு அதிகாரிகளும் முன்வரவில்லை. இதனால் கோபமடைந்த சேரி மக்கள், 'நம்மைப் புறக்கணிக்கும் கடவுளை - நாமும் புறக்கணிப்போம்' என்று முடிவெடுத்து 250 குடும்பங்களும் கிறித்துவ மதத்திற்கு மாறுவதாக அறிவித்தனர்.

இதை அறிந்த மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை பா.ஜ.க. எம்.பி. ராதா கிருஷ்ணன் ஆகியோர் 'நீங்கள் மதம் மாற வேண்டாம். உங்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து தருகின்றோம்' என்று மதம் மாறுவதைத் தடுத்தனர். இதை அறிந்த அப்பகுதி 'கொங்கு வெள்ளாளக் கவுண்டர்கள் பேரவை' - உள்ளூரில் மட்டுமல்ல, பல்லடம் வட்டாரத்திற்குள் அய்யம்பாளையம் சக்கிலியர்களுக்கு வேலை மற்றும் உணவுப் பொருட்கள் கூட தரக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றினர்.

கடந்த 5 மாதங்களாக சமூகப் புறக்கணிப்பிற்கு ஆளாகியுள்ள சேரி மக்களுக்கு உதவ யாரும் முன்வரவில்லை. கவுண்டர்களின் சமூகப் புறக்கணிப்பு தொடர்ந்ததால், மூன்று பெண்கள் உட்பட 5 நபர்கள் சுமார் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் - சரியான உணவு கிடைக்காமல் இறந்து விட்டனர். மேலும் ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு மருத்துவமனைக்குச் செல்வதற்கு அழைத்துச் செல்ல யாரும் முன் வராத காரணத்தால், குழந்தை இறந்தே பிறந்தது.

இதன் தொடர்ச்சியாக, அக்டோபர் 11 அன்று லட்சுமி நாராயணசாமி (வயது 19) என்கிற கல்லூரி மாணவர் மர்மமான முறையில் காட்டுப் பகுதிக்குள் இறந்து கிடந்தார். இவர்கள் குடும்பத்தில்தான் படித்த பட்டதாரிகள் உள்ளனர். இவர்தான் இப்பொழுது கல்லூரியில் படிக்கும் ஒரே மாணவர் ஆவார். இச்சாவையும் தற்கொலை என்று முடிவுகட்டி வழக்கை திசை திருப்பப் பார்க்கிறது, பல்லடம் காவல் துறை.

கவுண்டர்களின் ஊர்க்கட்டுப்பாடு, வேலை கொடுக்க மறுத்தல், 5 நபர்களின் பட்டினிச்சாவு, லட்சுமி நாராயணசாமியின் மர்மசாவு - இது போன்ற கொடுமைகளால் அய்யம்பாளையம் சேரி மக்கள், வீடுகளை காலி செய்து வேறு ஊர்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர்.

ஆப்கான் நாட்டு அகதிகளுக்காக கசிந்துருகுகிறவர்கள், அய்யம்பாளையம் அருந்ததியர்களுக்காக என்ன செய்யப் போகிறார்கள்? ●

## மீறல்



அருந்ததியர் பெண்கள், மீதான வன்கொடுமைகள் மேற்கு மாவட்டங்களில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. 18.10.2001 அன்று, 46 வயதான நாச்சியம்மாள், உடுமலை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இது தொடர்பாக, காவல் துறை மறு பிரேத பரிசோதனை நடத்தி பாதிக்கப்பட்ட நாச்சியம்மாளின் குடும்பத்திற்கு நீதி வழங்க வேண்டும் என்று ஆதித் தமிழர் பேரவை போராட்டத்தைத் தொடங்கியுள்ளது. ●

- தீபா



படிப்பகம்

www.padippakam.com

8

# இசைஞானி பற்றிய ஓர் இசை அலசல்

■ டாக்டர் கே.ஏ. குணசேகரன்



கிராமங்களில் தலித் குடிசைகளில் தூசு படிந்துபோய் தூங்கிக் கிடந்த பறை, உறுமி, தவில், பம்பை போன்ற இசைக் கருவிகள் - இன்று குளிர்சாதன 'ரெக்கார்டிங் தியேட்டர்' களில் - மரியாதைக்குரியவையாகப் பார்க்கப்படுகின்ற நிலையைக் காண்கிறோம். மண்ணின் இசைக்கும், தலித் மக்களின் தோலிசைக் கருவிகளுக்கும் - ஊடகங்களிலும், வெகுமக்கள் அரங்குகளிலும் மதிப்பும் மரியாதையும் பெற்றுத் தந்த பெருமை, இசை உலக வரலாற்றில் இளையராஜாவையே சாரும்.

வேதத்தைக் காதில் கேட்டால், வாயால் ஓதினால், கொதிக்கும் எண்ணெயை வாயில் ஊற்ற வேண்டும், ஈயத்தைக் காய்ச்சி காதில் ஊற்ற வேண்டும் என்கிறது மநு சாஸ்திரம். இன்று, இசைமேதை இளையராஜா, வேதங்களையும் வேதப் பொருட்களையும் எளிமையாக்கி - ஒலிநாடாக்கள் வழியிலும், திரைப்படங்கள் மூலமும் அளித்துக் கொண்டிருக்கிறார். யாருக்கு வேதத்தை எண்ணிப் பார்க்கக் கூடத் தடை இருந்ததோ - அவர்களுக்கு இன்று அந்தத் தடைகளெல்லாம் தூள்தூளாகியுள்ளன.

காஞ்சிகாமகோடி 'பெரியவா', 'சின்னவா' என்பவர்கள் இளையராஜாவைக் கொண்டு வேதத்தை எளிமைப்படுத்தி - சாதாரண மக்களுக்கும் சென்றடையத்தக்க வகையில் இசை அமைப்பதையும், பாடல் செய்வதையும் பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கின்றனர். பழைய வேதாந்தக் கருத்தியலை மாற்றியமைக்க இசைமேதை இளையராஜாவின் துணை வேண்டியுள்ளது. இன்றைக்கு இளையராஜாவின் வருகையை - யாராலும் 'தீட்டு' என்று சொல்லி நிராகரிக்க முடியவில்லை.

'கருவாடு விற்ற காசு வீசாது'தான். திருவையாற்றில் தியாகையர் ஆராதனை விழாவில் பங்கேற்க, இளையராஜா இன்னும் அழைக்கப்படவில்லை. இந்திய அரசின் மாபெரும் விருதுகள், இளையராஜா ஒரு பார்ப்பனராக இருந்திருந்தால் இந்நேரம் - தேடிவந்து சேர்ந்து பெருமை கொண்டாடியிருக்கும்.

பண்ணையபுரம் ஈன்றெடுத்த பாண்டவரே
பாவலர் வரதராஜன் சோதரரே
சேரியிலே பூத்த கறுப்பு ரோஜா – எங்க
சிந்தையைக் கவர்ந்த இளையராஜா

என்று சேரி மக்கள் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். தலித் கலை இலக்கிய வரலாறு புதிதாக எழுதப்படும்போது, இசைமேதை இளையராஜாவுக்காக முக்கியப் பக்கங்களை எடுத்துக் கொள்ளும். அடித்தள மக்கள் வரலாறு என இந்திய வரலாற்றை எழுதும்போது, இளையராஜாவுக்கான இடத்தை யாராலும் அபகரித்துவிட முடியாது.

அதுபோல, உலக இசை வரலாற்றில் இசைமேதை இளையராஜாவுக்கான இடத்தை - அவரது How to name it, Nothing but wind போன்ற இசை அமைப்புகளின் பெயர்களோடு 'மாஸ்ட்ரோ' பட்டம் பெற்ற இளையராஜாவின் பெயர், கண்டிப்பாக பொன்எழுத்துகளால் பொறித்து வைக்கப்படும்.

செபஸ்டியான் பாஹ்
மொசார்ட்
பீத்தோவான்
ப்ராம்ஸ்

- எனும் இசைமேதைகளின் வரிசையில் இளையராஜாவின் பெயரும் சேர்ந்து கொள்ளும். அப்போது ஆதிக்கச் சாதியினர்,



படிப்பகம்

www.padippakam.com

# ஏன் இந்த முரண்பாடு?

தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்த ஒருவர், பிரபலமாவதற்கு முன் (படித்தவரோ - படிக்காதவரோ) அவர் மீது ஜாதி என்கிற இழிவு, பிற்போக்கான வடிவத்தில் நேரடியாக சுமத்தப்படுகிறது.

அவர் பிரபலமானால், ஜாதி அடையாளம் முற்போக்கு வடிவத்தில் - அவரை நிழலாகத் தொடர்கிறது.

ஆற்றல் மிக்கவர், அறிவாளி, மகா மேதை, மாபெரும் கலைஞனாக ஒருவன் இருந்தாலும், அவனின் அத்தனை திறமைகளையும் புறம் தள்ளி அல்லது பின்னுக்குத் தள்ளி, அவனை தாழ்த்தப்பட்டவனாக அடையாளம் கண்டு - பள்ளனாக, பறையனாகவே இந்த சமூகம் அங்கீகரிக்கிறது.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர், ஜாதி உணர்வற்று வாழ விரும்பினாலும், இந்த சமூகம் அவரை ஜாதி அடையாளத்தோடே பார்க்கிறது.

ஆம், மரம் அமைதியை விரும்பினாலும், காற்று அதை விட்டு வைப்பதில்லை.

இசைஞானி இளையராஜா என்கிற இந்த மாபெரும் கலைஞனை - எந்த அளவுக்கு இந்த சமூகம் அறிந்திருக்கிறதோ, அவரின் இசை எந்த அளவுக்குப் புகழ் பெற்றதோ, அதை விட அதிகமாக அவர் என்ன ஜாதியைச் சேர்ந்தவர் என்பதை இந்த சமூகம் அறிந்திருக்கிறது.

ஆனால், ஒரு நாளும் அவர் 'நான் இந்த ஜாதியைச் சேர்ந்தவன்' என்று குறிப்பிட்டுச் சொன்னதில்லை. அதையும் மீறி இந்த சமூகம் எப்படி இதைத் துப்பறிந்தது?

'எம். எஸ். விஸ்வநாதன் என்ன ஜாதி?' 'கே.வி. மகாதேவன் என்ன ஜாதி?' என்று இன்று வரை இந்த சமூகத்துக்குத் தெரியுமா? ஆனால், அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் அல்ல என்பதை மட்டும் - இந்த சமூகம் கண்டு பிடித்து வைத்திருந்தது. அதனால் அவர்களை கலைஞனாக அங்கீகரித்தது.



'எம்.எஸ். விஸ்வநாதன், கே.வி. மகாதேவன் போன்ற திறமைசாலிகளை - ஜாதி பார்க்காமல் கலைஞர்களாக அங்கீகரித்தது போல், என்னையும் ஒரு கலைஞனாக அங்கீகரியுங்கள்' என்று அந்த உலக மகா கலைஞனின் வெவ்வேறு வார்த்தைகளில் வெளிப்படும் அவரின் உள்ளுணர்வை நன்றாகப் புரிந்து, 'இசைஞானியின் திரை இசையில் உலகத்தரமான இசை' என்ற ஆய்வை - எளிமையாகவும், ஆழமாகவும், சிறப்பாகவும் செய்து முடித்த டாக்டர் கே.ஏ. குணசேகரன் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிற்க.

இசைஞானியின் பெருமைகளை அறியாதவர்கள் அல்லது அறிந்தும் திட்டமிட்டுப் பாராட்ட மறுக்கிறவர்கள், நிரம்ப ஞாபகத்தோடு,

'தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்த இளையராஜா, பார்ப்பன ஆதரவாளராக இருக்கிறார் நியாயமா?' என்கிற முற்போக்கான கேள்வியை சட்டென்று வீசுகிறார்கள். இல்லை எனில், இசைஞானிக்கு அறிவுரை சொல்கிறார்கள்.

ஆனால், இன்னொரு புறம்,

தன் வாழ்நாள் முழுக்க பார்ப்பானாக, ஆர்.எஸ்.எஸ். காரனாக, அத்வானியைப் போல் வாழ்ந்த சுப்பிரமணிய பாரதியை 'கம்யூனிஸ்ட்' என்கிறார்கள்.

தன் வாழ்நாள் முழுக்க சந்தர்ப்பவாதியாகவும், தீவிரமான இந்து மதக் கருத்துகளுக்குச் சொந்தக்காரனாகவும், தந்தை பெரியாரின் கருத்துகளை கேலி செய்தும், நாத்திகர்களைக் கேவலப்படுத்தியும் ஒரு பார்ப்பன மோகியாகவும் வாழ்ந்த கண்ணதாசனை, அதையெல்லாம் தாண்டி - 'மாபெரும் கவிஞன், தமிழின உணர்வாளன்' என்று பொய் சொல்கிறார்கள்.

ஏன் இந்த முரண்பாடு?

தலைவர் மாவோவின் மேற்கோளை மீண்டும் சொல்கிறோம்.

'மரம் அமைதியை விரும்பினாலும், காற்று அதை விட்டு வைப்பதில்லை' ■

இந்திய இசைத்துறைக்கும், கலைத்துறைக்கும் பட்டம் அளிக்கக் கூடியவர்கள், இளையராஜாவை இந்திய அரசு கண்டுகொள்ளாமை குறித்து வெட்கித் தலைகுனிவது நிச்சயம். சாதியத்தை வென்று, போட்டிகளை வென்று, மதத்தை வென்று, இசை நுட்பங்களில் கரைத்துக் கொண்டு இசைஞானியாக வலம்வரும் இளையராஜாவின் இசையையும், அவரது புகழையும் உலகம் போட்டி போட்டுக் கொண்டு சொந்தம் கொண்டாடும் காலம் கனியும்.

கோயிலுக்குள் நுழைந்தால் தீட்டு என்று மநுதர்மம் பேசியவர்களுக்கு, சிறீரங்கத்தில் கோபுரம் கட்டிக் கொடுக்க ஒரு இளையராஜாதான் தேவைப்படுகிறார். 'தீட்டுன்னு ஆக்கிவெச்ச சாதிக்கார இளையராஜா' - கோபுரத்திலேயே உள்ளாரே. மய்ய நீரோட்டம், எப்போதும் அடித்தள மக்களை உள்வாங்கிக் கொள்ளாது. மாறாக, தடைகளை விதவிதமாய் விதிக்கும். இளையராஜாவை மட்டும் மய்ய நீரோட்டத்திற்குள் உள்ளிழுத்துக் கொண்டு பெருமை கொள்ளும் போக்கை என்ன சொல்வது!

இளையராஜாவின் இசை, இசைப் புரட்சியை மட்டும் செய்யவில்லை. இளையராஜாவின் இசை, சாதிப் புரட்சியைச் செய்துள்ளது. இளையராஜாவின் இசை, வர்க்கப் புரட்சியைச் செய்துள்ளது. இளையராஜாவின் இசை, இந்துத்துவத்துக்கு எதிரான கலகத்தைச் செய்துள்ளது. இளையராஜாவின் இசை, சமூக மாற்றத்தைச் செய்துள்ளது. இளையராஜாவின் இசை, சர்வதேச உறவை ஏற்படுத்தியுள்ளது. இளையராஜாவின் இசை, மண்ணுக்கும் மக்களுக்கும் மகத்துவத்தை உருவாக்கித் தந்துள்ளது. கருத்த மேனியர்களுக்கும், உருக்குலைந்து போகின்ற தலித் மக்களுக்கும் உரிமையைப் பெற்றுத் தந்துள்ளது. இளையராஜாவின் இசை, தடுப்புச்சுவர்களைத் தவிடு பொடியாக்கி - சேரிகளுக்கு விடியலையும், விழிப்புணர்வையும் தந்துள்ளது.

- முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

"யாருங்க இப்பல்லாம் ஜாதி பாக்கறாங்க"

# தொடரும் சாணிப்பாலும் செருப்படிகளும்....

■ ச. தமிழ்ச் செல்வன்

நெல்லை மாவட்டம் ஆலங்குளம் வட்டத்தில் உள்ளது, சிவலார் குளம். இங்கு கோனார் சாதியினரின் ஆதிக்கமும் வன்கொடுமைகளும் அதிகம். இந்தக் கொடுமையைத் தாங்க முடியாத தலித் மற்றும் நாடார் குடும்பங்கள் ஊரைக் காலி செய்துவிட்டு வேறு இடங்களுக்குச் சென்று விட்டனர். போனவர்கள் போக மிச்சமிருப்பவர்கள், இருபது தலித் குடும்பங்கள் மட்டுமே.

1987இல் இவ்வூரின் பஞ்சாயத்துத் தலைவராக இருந்த பாலகிருஷ்ணன் கரையாளர், கூட்டுறவு வங்கியில் ஆட்டு லோன் வாங்கித் தருவதாகக் கூறி இசக்கி, முத்தையா, ஈஸ்வரியம்மாள், பேச்சியம்மாள், சுப்பையா, முத்தையா ஆகிய தலித் மக்களை வங்கிக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

வங்கியில் கையெழுத்தெல்லாம் போட்டு விட்டுத் திரும்பிய ஆறு பேருக்கும் லோன் கிடைக்கவில்லை. ஆனால், ஆண்டுதோறும் தவறாமல் இதே ஆறு பேருக்கும் வங்கியிலிருந்து நோட்டீஸ் வந்து கொண்டிருந்தது. பாலகிருஷ்ணன் கரையாளர் கையை விரித்துவிட, ஆறு பேரும் கலெக்டரிடம் மனு கொடுத்தனர். எந்த நடவடிக்கையுமில்லை; வங்கியோ ஜப்தி செய்யப் போவதாக மிரட்டியது. பயந்து போய் ஆறு பேரில் நாலுபேர் பணத்தைக் கட்டி விட்டனர்.

பணம் கட்டாத முத்தையா இறந்துவிட, அவரின் வம்சாவழிப் பரம்பரைச் சொத்தாக - அடுத்த ஆண்டின் வங்கி நோட்டீஸ் அவரது மகன் முருகனுக்கு 23.7.2001 அன்று வந்து சேர்ந்தது. முருகன், ''என் தகப்பன் வாங்காத கடனை நான் ஏன் கட்ட வேண்டும்?'' என்று மனக் கொதிப்பில் பாலகிருஷ்ண கரையாளரைச் சந்தித்து நியாயம் கேட்டார்.

30.8.2001 அன்று காலை 7 மணிக்கெல்லாம் முருகனுக்கு 'நியாயம்' வழங்க பாலகிருஷ்ண கரையாளர் சேரிக்கு வந்தார். முருகனையும் அவர் வீட்டிலுள்ளவர்களையும் தகாத வார்த்தைகளால் பேசினார். முருகனின் தலை முதல் கால் வரை மாட்டுச்சாணத்தை கரைத்து ஊற்றி செருப்பால் அடித்தபடி, அவரைத் தெருத் தெருவாய் இழுத்துச் சென்றனர்.



முருகன்

ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நிறுத்தி, 'பிரசிடண்டை எதிர்த்துப் பேசியது தப்புதான்' என்று வீட்டிலுள்ள ஒவ்வொரு நபரிடமும் சிறு குழந்தைகள் உட்பட சொல்லச் சொன்னார்கள்.

இதற்கிடையில், யாரோ தொலைபேசியில் சொன்ன தகவல் அறிந்து போலிஸ் ஜீப் ஊருக்குள் வந்தது. ஜீப் சத்தம் கேட்டதும் முருகனை விட்டு விட்டு ஓடிவிட்டனர். ஆலங்குளம் போலிஸ் நிலையத்தில் அழைத்துச் செல்லப்பட்ட முருகனிடம் போலிசார் எழுதிய புகார் மனுவில் கையெழுத்து வாங்கிக் கொண்டு வழக்குப் பதிவு செய்தார்.

ஏழு குற்றவாளிகளில் பாலகிருஷ்ணன் உட்பட அய்ந்து பேர் கைதாகி 18.9.2001 அன்று ஜாமீனில் வெளியே வந்து விட்டனர். இரண்டு பேர் இதுவரை கைது செய்யப்படவே இல்லை.

'மனித உரிமைக் காப்புக் களம்' நெல்லையில் இது தொடர்பாக ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தது. அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனநாயக அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. 27.9.2001 அன்று நடைபெற்ற அக்கூட்டத்தில், நகரில் இயங்கும் அனைத்து எஸ்.சி./எஸ்.டி. அமைப்புகளும், மார்க்சிஸ்ட் கட்சி, தலித் சேனா ஆகிய அரசியல் கட்சிகளும் தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் போன்ற அமைப்புகளும் பங்கேற்றன.

இக்கூட்டத்தில் பங்கேற்க வந்த பாதிக்கப்பட்ட சிவலார் குளம் மக்கள், மாவட்ட ஆட்சியரை சந்தித்துவிட்டு வந்தனர். கூண்டோடு ஊரைக் காலி செய்வதைத் தவிர வேறு வழியில்லை எனவும் மாற்று ஏற்பாடுகளுக்கு உதவும் படியும் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்து விட்டு வந்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்ட விதிகளை மீறி ஜாமீனில் விடப்பட்டுள்ளனர். ஊருக்குள் வந்த அவர்கள் யாராவது சாட்சி சொல்லப் போனால், கொலை செய்து விடுவதாக மிரட்டிச் சென்றுள்ளனர். பலமுறை மனு கொடுத்தும் தலித் மக்களுக்கு எவ்விதப் பாதுகாப்பும் நிவாரணமும் தர அரசு நிர்வாகம் முன்வரவில்லை.

நிர்வாகம் எந்தப் பாதுகாப்பும் செய்ய மறுப்பது மட்டுமின்றி - 'இது சாதிப்பிரச்சனை அல்ல; பஞ்சாயத்து தேர்தலுக்காக பாலகிருஷ்ணனை எதிர்த்துப் போட்டியிடுபவர்கள் முருகனை கிளப்பி விட்டு சும்மா பிரச்சனை செய்கிறார்கள்' என்று மாவட்ட ஆட்சியரே பத்திரிகைகளுக்குப் பேட்டியும் அளித்துள்ளார்.

இளைஞர் முருகனுக்கும் தலித் மக்களுக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை நீடிக்கிறது. வழக்கம் போல, அரசும் நிர்வாகமும் தலித் மக்களை சாடுகின்றன. பத்திரிகைகள் வாய்மூடி மவுனித்திருக்கின்றன. மக்கள் இயக்கங்கள் என்ன செய்யப் போகின்றன? ●



படிப்பகம்

www.padippakam.com



'மகாபோதி சொசைட்டி'யின் முதன்மை பிக்கு வெனரபிள ரத்னஜோதி அவர்களும், தலைமை ஏற்ற டாக்டர் வேலு அண்ணா மலை அவர்களும் இலவச கண்ணாடிகளை வழங்கினர். சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்ற 'தலித் முரசு' ஆசிரியர் சந்திர கேசன், உச்சநீதிமன்ற வழக்கறிஞர் ஜி. பன்னீர் செல்வம், பெரியவர் எம்.எஸ். கோபால், கவிஞானி அ. மறைமலையான், முனைவர் பேரா. எஸ். செல்வநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## மனித நேய மும்மணி விழா

டாக்டர் அம்பேத்கர் பவுத்தம் தழுவிய நாள் நினைவாக 14.10.2001 அன்று மாலை, புத்தர் ஒளி பன்னாட்டுப் பேரவையின் நிறுவனர் - தலைவர் 'கிராண்ட் மாஸ்டர்' சிங்யூன் அவர்களின் 75ஆவது பிறந்தநாள் விழா அசோக் நகரில் நடைபெற்றது. இதில், 75 ஏழை எளியவர்களுக்கு இலவச கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

தம் வீட்டருகிலேயே புத்தர் - டாக்டர் அம்பேத்கர் சிலை அமைத்து சமூக சேவை செய்துவரும் தமிழ்மறையான் அவர்களைப் பாராட்டி - பொன். தேசராஜ், பி.ரத்தின வேலு, 'எக்ஸ்ரே'ந.கருணாகரன், கே.பி. மாதவன், மவுரியா, சுகுணா தயாளன் ஆகியோர் பேசினர். ●



## உரிமையோடு ஓர் வேண்டுகோள்

தாத்தா ரெட்டமலை சீனிவாசன் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த ஒரு நூலை, ஒப்பீட்டளவில் முழுமையானதாகக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளோம்.

தாத்தா குறித்த செய்திகள், ஆவணங்கள், இதழ்கள், புகைப்படங்கள் பெற ஆர்வத்துடன் உள்ளோம். இந்நூலுக்கு உதவிட முனைவோரை நேரிலும் சந்தித்து விவரங்கள் பெறத் தயாராக உள்ளோம். இந்நூலின் வெற்றிக்குத் துணை செய்ய விழைவோர், கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். நன்றி.

**தாத்தா ரெட்டமலை சீனிவாசன் பேரவை**
47, 12ஆவது நிழற்சாலை
அசோக் நகர், சென்னை

## தலித் முரசு சமூக நீதி அறிவுப் போட்டி

**சமூக நீதிப் போராட்டக் களத்தில் நடைபயிலும் போராளிகளுக்கு, ஓர் அறிவுக் கேடயமாக, நாட்டில் நடைபெறும் அநீதிகள், வன்கொடுமைகள், சமூக விடுதலைக் கருத்துக் கருவூலங்களை 'தலித் முரசு' தொடர்ந்து பதிவு செய்து வருவதை தாங்கள் அறிவீர்கள்.**

**தற்பொழுது, நண்பர்களின் உதவியுடன் ஒரு 'அறிவுப் போட்டி' நடத்துவதென முடிவெடுத்துள்ளோம். ஒவ்வொரு மாதமும், கேள்விகள் கேட்கப்பட்டு, ஆம் / இல்லை. அல்லது 1,2,3,4 என்ற பதில்களுடன் இதழில் வரும் கேள்வி - பதில் பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டும். ஒவ்வொரு மாதமும் பதில்கள் பதிவு செய்யப்பட்டு, மதிப்பெண்கள் அளிக்கப்படும்.**

**மதிப்பெண்கள் 12 மாதத்திற்கும் கூட்டி, யார் அதிக மதிப்பெண்கள் பெறுகிறார்களோ அவர்களுக்குப் பரிசாக ரூ. 10,000 அளிக்கப்படும். ஒருவருக்கு மேல் முதல் மதிப்பெண்கள் பெற்றால் பரிசு பகிர்ந்தளிக்கப்படும்.**

**_குறிப்பு:_ 1. போட்டியில் கலந்து கொள்ளும் வாசகர்கள், வாழ்நாள் அல்லது ஆண்டுக் கட்டணம் கட்டியிருக்க வேண்டும். 2. பரிசுத் திட்டத்தில் கலந்து கொண்டு பரிசுகளை தங்கள், நிறுவனம் அல்லது தனிநபர் சார்பில் அளிக்க விரும்பினால், தொகையை டி.டி. மூலம் Dalit Media Network என்ற பெயருக்கு அனுப்பினால், பரிசு வழங்குவோர் பெயர்கள் தலித் முரசில் வெளியிடப்படும்.**

**- ஆசிரியர்**

### மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

+2, 10ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்குப் பாடவாரியாக (Chapterwise) மாதிரித் தேர்வுகள், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 10 முதல் 1 மணி வரை சென்னை - சேத்துப்பட்டு அரசுப் பள்ளியில் இலவசமாக நடத்தப்படுகிறது. ஆர்வமுள்ள மாணவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும் : எம். சாகுல் அமீது - பேஜர் : 9628461339



படிப்பகம்

# இணைக்கும் பாலம்




◇ தலித் முரசில் வரும் கருத்துகள் அனைத்தும் குறிப்பாக, அம்பேத்கர் பக்கமும் பெரியார் பக்கமும் - என் நெஞ்சத்தில் நீங்காமல் நிழலாடுகின்றன. ஒவ்வொரு மாதமும் தலித் முரசை வாங்கியவுடன் முழுவதுமாகப் படித்து முடித்தால்தான் எனக்குத் தூக்கமே வரும். ஒவ்வொரு தலித்தின் கைகளிலும் 'தலித் முரசு' தவழ வேண்டும் என உளமாற விரும்புகிறேன். தலித் முரசு, அனைத்து தலித் இன மக்களையும் இணைக்கும் பாலமாக வேண்டும்.

- டி. வஜ்ரம், *குடியாத்தம்*

■ 'இந்திராவிற்கொரு பிந்தரன்வாலே. அமெரிக்காவிற்கொரு பின்லேடன்' - சுப. வீரபாண்டியனின் கவிதை வடிவம் சிறப்பு. 'கள்ளிக்காட்டு இதிகாசம்' பற்றிய சங்கரின் மதிப்பீடு வரவேற்கப்பட வேண்டியவை. வைரமுத்துவின் 'இதிகாசம்' அப்படித்தான் இருக்கும். நாம்தான் எழுத வேண்டும் - பொய்மை கலவாத புதிய வரலாறை.

திருவைக்குமரன், *திருச்சி*

■ கூலித் தொழிலாளர் தமிழரசன் படுகொலை மற்றும் தலித் மக்கள் மீது நாள் தோறும் நடைபெறும் கொடுமைகள் அனைத்தையும் பார்க்கும்போது, ஆயுதம் தான் தீர்வோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஜெ. கலையரசன், *அரியலூர்*

■ தலித் சமுதாயத்தில் உள்ள / தலித் சமுதாயத்தின்பால் அன்பு கொண்ட உயர் அலுவலர்கள், அறிஞர்கள், சமுதாயப் பெரியோர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் ஆகியோரின் முகவரிகளை அவ்வப்போது இதழில் வெளியிட வேண்டும். இதன் மூலம் இவர்களைத் தொடர்பு கொண்டு சமுதாயம் தொடர்பான செயல்களுக்கு உரிய ஆலோசனைகளைப் பெற்று செயல்பட இயலும்.

ஆ. துரைசாமி, *ஆத்தூர்*

■ ஒவ்வொரு மாதமும் தலித் முரசைப் படித்து தெளிந்து மக்களிடம் சென்று அறிவுரை சொல்லுமளவிற்கு எனக்கு மன வலிமை வந்துள்ளது. தலித் முரசு, விரைவில் தமிழ் நாடெங்கும் உள்ள தலித் இளைஞர்களின் போர்க் கருவியாக மாறும்.

- எல். முருகன், *ஊற்றங்கரை*

■ 'கள்ளிக்காட்டு இதிகாசம்' ஆனாலும் சரி, கரிசல் காட்டு வரலாறு ஆனாலும் சரி, அது தலித் மக்களைப் பற்றியதாக இருக்க வேண்டுமே தவிர அவர்கள் இல்லாமல் எந்தக் காடும் இல்லை; காவியமும் இல்லை. இதை வைரமுத்துகள் புரிந்து கொள்ள வேண்டும்.

- குமரன், *குளைமேடு*

■ ஒடுக்கப்பட்ட மக்கள் அடிமைப்படுத்தப்படும் வரலாற்று நிகழ்வுகளையும், விடுதலைக்கான கருத்தியலையும் பதிவு செய்யாமல் விட்டு விடும் ஆதிக்க சாதி பத்திரிகைகளுக்கு இடையில் - தலித் முரசு இப்பணியை சீரிய முறையில் செய்து வருவது, மிகுந்த பாராட்டுக்குரியது. இதுபோன்றதொரு வரலாற்று ஆவணத்தை தமிழகமெங்கும் பரப்ப, என்னாலான முயற்சிகளை மேற்கொள்ளுவேன்.

- எ. பெஞ்சமின், *வ. புதுப்பட்டி*

## பயங்கரவாதத்திற்கு எதிராகத் திரண்டெழுவோம்

தனது சுரண்டல் ஆதிக்க நோக்கங்களை மூடிமறைத்துவிட்டு, பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிடுவதாக அமெரிக்க ஏகாதிபத்தியம் கூறுவது பெரிய மோசடியே ஆகும். உலகெங்கும் பயங்கரவாதத்தை வளர்த்துவிட்ட அமெரிக்காவே உலகிலேயே பெரிய பயங்கரவாதி.

இரண்டாம் உலகப் போர் முடிந்துவிடக்கூடிய இறுதி நேரத்தில், அமெரிக்கா தனது அணுஆயுத வலிமையைச் சோதிக்க - ஜப்பானின் மீது அணுகுண்டைப் போட்டு இரோஷிமாவின் 80 ஆயிரம் பேரையும் நாகசாகியில் 40ஆயிரம் பேரையும் கொன்று குவித்தது. இத்தகைய பயங்கரவாத அமெரிக்கா, 'நீங்கள் எங்களுடன் இல்லையென்றால் - நீங்கள் பயங்கரவாதிகளுடன் இருப்பதாகப் பொருள்' என்று ஆணவமாகப் பேசி உலக நாடுகளை மிரட்டுகிறது.

தமிழக மக்களாகிய நாம், இந்திய அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து போராட வேண்டும். மேலும், அமெரிக்காவிற்கு எதிராக உலகெங்கும் வெடித்தெழுந்து வரும் உழைக்கும் மக்களின் போராட்டங்களுடன் இணைந்து நிற்க வேண்டும்.

- இல. மார்க்சு, *அமைப்பாளர்*
*புரட்சிகர இளைஞர் முன்னணி*

■ 'அறிவாயுதம்' பகுதியில் சங்கமித்திரை எழுதிய 'புத்தரா - கார்ல் மார்க்சா?' படித்தேன். மேலை நாடுகளில் மார்க்சியம், உழைக்கும் மக்களுக்குச் சரியான தீர்வைத் தரவில்லை என்று எழுதியிருப்பது தவறானது.

ஒரு தத்துவம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஏற்படும் காலதாமதத்தை - போராட்டக் காலத்தை - பின்னடைவை அந்தத் தத்துவத்தின் தோல்வி அல்லது குறைபாடு என்று கருதுவது நியாயமல்ல. அந்த வகையில் பார்க்கும்போது, எந்தத் தத்துவமும் வெற்றிபெறவில்லை என்று ஒரு வரியில் சொல்லிவிட முடியும். இது, 2000 ஆண்டுகளுக்கு முந்தைய பவுத்தத்திற்கும் பொருந்தும். 19ஆம் நூற்றாண்டின் மார்க்சியத்திற்கு இன்னும் வயதாகிவிடவில்லை.

ருத்ரன், *காவேரிப்பட்டிண*

www.padippakam.com



# திருமணங்களை சட்டவிரோதமாக்க வேண்டும்

மதமும் கடவுள் சங்கதியும் மனித சமூகத்தின் வளர்ச்சியைப் பெரிதும் தடுத்து நிறுத்தி விட்டன. குறிப்பாக, பெண்கள் சங்கதியை எடுத்துக் கொள்ளுங்கள். பார்ப்பான் நம்மை எப்படிக் கீழ்சாதி என்று கூறி அடிமை வேலை வாங்குகிறானோ, அதைப் போலத்தான் மக்களில் சரிபகுதி எண்ணிக்கையுள்ள பெண்களை நடத்தி வருகிறோம். பெண்கள் என்றால் வெறும் குட்டிப் போடும் கருவி என்றுதான் நடத்தி வருகிறோம். பெண்களும் கணவன்மார்கள் நகை, நட்டு வாங்கிக் கொடுத்தால் போதும் என்கிற அளவுக்குத் தங்களைக் குறுக்கிக் கொண்டு விட்டார்கள்.

பிராமணன் – சூத்திரன் என்ற அமைப்புக்கும் பேதத்திற்கும், புருஷன் - பெண்டாட்டி என்ற விகிதத்துக்கும் எந்தவித வேறுபாடும் கிடையாதே! உலகத்திற்குப் பயன்படும்படியான பேர் பாதி மனித சக்தியை, பெண்ணடிமை மூலம் நாம் விரயப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

இதற்கு ஒரு பரிகாரம் என்ன என்றால் 'கலியாணம்' என்பதையே சட்ட விரோதமாக ஆக்க வேண்டும். இந்தக் 'கலியாணம்' என்ற அமைப்பு முறை இருப்பதால்தான், கணவன் - மனைவி என்ற உறவும், பெண் அடிமைத் தன்மையும் உருவாகிறது. இந்தக் கலியாண முறை இருப்பதால் தானே குழந்தை குட்டிகள் - அவற்றுக்குச் சொத்துகள் சம்பாதிப்பது - அதுவும் எதைச் செய்தாவது சம்பாதிப்பது என்ற சமுதாய ஒழுக்கக் கேடுகள் எல்லாம் ஏற்படுகின்றன.

இந்தக் கல்யாண முறையை இந்த நாட்டில் ஏற்படுத்தியதே பார்ப்பான்தான். சாஸ்திரங்களில் சூத்திரனுக்கு கல்யாண முறையே இல்லையே!

தொல்காப்பியத்திலே கூறப்பட்டு இருக்கிறதே 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் அய்யர் யாத்தனர் கரணம் என்ப' என்று இருக்கிறதே. 'மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம் கீழோர்க் காதிய கரணமும் உண்டே' என்றும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. இவற்றில் இருந்ததெல்லாம், சூத்திரர்களுக்குத் திருமணம் என்ற அமைப்பே இல்லாதிருந்தது என்பதுதான் தெளிவாகத் தெரிகிறது.

பெரும் பகுதி மக்களைச் சூத்திரனாக்க - உடலுழைப்புக்காரனாக்க எப்படிப் பார்ப்பான் சாத்திரங்கள் செய்தானோ அதைப் போலத்தான் - பெண்களை அடிமையாக்க 'கலியாணம்' என்ற முறையும் ஏற்படுத்தப்பட்டது.

இந்த நாட்டிலே ஒரு பெண்ணானவள் பதிவிரதையாக இருக்க வேண்டும் என்றால், அவள் எவ்வளவுக்கு எவ்வளவு அடிமை உணர்வோடு இருக்கிறாளோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவள் உயர்ந்த பதிவிரதையாகப் பாவிக்கப்படுகிறாள். இதைத்தான், நமது இதிகாசங்களும் புராணங்களும் சாஸ்திரங்களும் வலியுறுத்துகின்றன.



வள்ளுவனிலிருந்து ஒவ்வொரு பெரிய மனிதனும் பெண்ணை அடிமைப் பொருளாகத்தான் கருதியிருக்கிறானே தவிர, ஆண்களோடு சரிசமானமான உரிமையுடையவர்களாகக் கூறவில்லையே. ஆணும் பெண்ணும் சம உரிமை இல்லாத உலகில் சுதந்திரத்தைப் பற்றிப் பேச எவனுக்கு யோக்கியதை இருக்கிறது?

முஸ்லிமை எடுத்துக்கொண்டால், பெண்களை உலகத்தைக் கூடப் பார்க்க விட மாட்டேன் என்கிறானே! முகத்தை மூடி அல்லவா சாலையில் நடமாட விடுகிறான். இதை விடக் கொடுமை உலகில் ஒன்று இருக்க முடியுமா?

நம் நாட்டு யோக்கியதைதான் என்ன? ஏழு வயதிலேயே பெண்களைக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டு, அன்றைக்கு இரவே சாந்தி முகூர்த்தம் வைத்து விடுவானே.

பெண்களுக்காவது உணர்ச்சி வர வேண்டாமா? சிங்காரிப்பது - ஜோடித்துக் கொள்வது - சினிமாவுக்குப் போவது என்பதோடு இருந்தால் போதுமா? தாங்களும் சம உரிமை உடையவர்கள் என்ற உணர்ச்சி வர வேண்டாமா?

"நான் 1932இல் ஜெர்மனி சென்றிருந்தேன். அப்போது ஒரு வீட்டில் தங்கியிருந்தேன். அந்த வீட்டுக்காரர்களை விசாரித்தேன். அவர்கள் தங்களை, "Proposed Husband and Wife" என்கிறார்கள். அப்படி என்றால், என்ன அர்த்தம்? என்று கேட்டேன். "நாங்கள் உண்மையான கணவன் - மனைவியாகத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ள நாங்கள் பயிற்சி பெறுகிறோம்." என்றார்கள். 'எவ்வளவு காலமாக' என்று கேட்டேன். 'எட்டு மாதமாக' என்கிறார்கள். எப்படி இருக்கிறது பாருங்கள்? அந்த நாடு முன்னேறுமா? 'பதிவிரதம்' பேசி பெண்களை அடிமையாக்கும் இந்த நாடு முன்னேறுமா?

- 'விடுதலை' 28.6.1973

" வள்ளுவனிலிருந்து ஒவ்வொரு பெரிய மனிதனும் பெண்ணை அடிமைப் பொருளாகத்தான் கருதியிருக்கிறானே தவிர, ஆண்களோடு சரிசமானமான உரிமையுடையவர்களாகக் கூறவில்லையே. ஆணும் பெண்ணும் சம உரிமை இல்லாத உலகில், சுதந்திரத்தைப் பற்றிப் பேச எவனுக்கு யோக்கியதை இருக்கிறது? "

படிப்பகம்

www.padippakam.com

EZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No.: TN / CPMG-151 / 2001 Posted at Patrika Channel Egmore RMS / 1 Periodicals
Registered with the Registrar of Newspapers for India Under No. 71325 / 97 Licensed to Post without Prepayment Licence No. 47

**மறைக்கப்பட்ட தலித் மக்களின் வரலாற்றை மீட்டெடுப்போம்!**




# அம்பேத்கர் காலண்டர் - 2002

காலங்காலமாக இந்துத்துவக் கருத்தியலைத் தலித் மக்களிடம் அழுத்தமாகப் பதிய வைத்து, நல்ல நேரம் - கெட்ட நேரம், ராகு - கேது, சனி, ராசி பலன்கள் போன்ற மூட நம்பிக்கைகளை வளர்த்து வரும் காலண்டர்களை தலித் மக்களின் வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தி, சமூக விழிப்புணர்வை வளர்த்தெடுக்க, அறிவர் அம்பேத்கர் பொன் மொழிகளுடன், சாதி ஒழிப்புப் போராளிகள், தலித் தலைவர்களின் புகைப்படங்கள் மற்றும் வரலாற்றுக் குறிப்புகளுடன் சமூக நீதியை வலியுறுத்தும் தினசரி காலண்டர்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

ஒரு காலண்டரின் விலை ரூ.20/- மட்டும்.

காலண்டர்களில் இயக்கம்/சங்கம்/கட்சி பெயர் அச்சிட்டு வேண்டுவோர் குறைந்தது 250 காலண்டர்கள் ஆர்டர் கொடுக்க வேண்டும். பெயர் ஸ்கிரீன் பிரிண்டிங் முறையில் அச்சிடப்படும்.

ஆப்செட் முறையில் பெயர் அச்சிட்டு வேண்டுவோர் 1000 காலண்டர்கள் ஆர்டர் கொடுக்க வேண்டும்.




உங்களுக்குத் தேவையான காலண்டர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு, மிகத் தெளிவான முகவரியுடன் எழுதுங்கள். V.P.P முறையில் காலண்டர்களை அனுப்புகிறோம்.

டிசம்பர் 15 தேதியிலிருந்து காலண்டர்கள் அனுப்பி வைக்கப்படும்

வியாபார நோக்கம் எதுவும் இல்லாமல், முன்னெடுக்கப்படும் இம் முயற்சிக்கு வரவேற்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. காலண்டர்கள் தேவைப்படுவோர், விரைவில் தெரிவிக்கும்படி வேண்டுகிறோம்.

தொடர்புக்கு :

**முல்லை காலண்டர்ஸ்**

188, பெரியார் தெரு,
தில்லையாடி வள்ளியம்மை நகர், திருமங்கலம்,
சென்னை - 40.

Owned and Published by P. Chandragesan from No. 6, 97th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078 a
printed by G.P. Ramachandran at Thamizhmarai Achagam, 32, 3rd Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Editor : P. Chandrages